# உதயன்




www.onlineuthayan.com

28பக்கங்கள் சுடர் 28 கதிர் 045 வள்ளுவர் ஆண்டு 2043 மார்கழி 26 வியாழக்கிழமை (10/01/2013) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 25.00


Chief - Editor
UTHAYAN - SANJEEVI

# சிவில் நிர்வாக விடயத்தில் இராணுவத் தலையீடு ஏன்?

## யாழ்.வந்த பிரான்ஸ் தூதுவர் கேள்வி



யாழ்ப்பாணம், ஜனவரி 10

யாழ்.குடாநாட்டில் சிவில் நிர்வாக நடவடிக்கைகளில் இராணுவத்தினர் தலையீடு செய்கின்றனர். சிவில் அதிகாரிகள் போன்று இராணுவத்தினரும் தகவல் திரட்டும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். குடாநாட்டின் கரையோரப் பகுதிகளில் இதனை நான் அவதானித்துள்ளேன் என்று யாழ்.வந்துள்ள பிரான்ஸ் தூதுவர் கிறிஸ்ரின் றொபின் தெரிவித்தார்.

இராணுவத்தினர் சிவில் நிர்வாகத்தில் ஏன் தலையீடு செய்கின்றனர் என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்று யாழ்.மேலதிக அரச அதிபருடனான சந்திப்பின் போதே தூதுவர் இந்தக் கேள்வியைத் தொடுத்தார்.

யாழ். மாவட்டத்துக்கு நேற்றுப் புதன்கிழமை வருகை தந்த பிரான்ஸ் தூதுவர் பல்வேறு தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

பார்க்க பக்கம் 4

## பல்கலைக்கு நேற்றும் மாணவர் செல்லவில்லை

யாழ்ப்பாணம்,ஜன.10

யாழ்.பல்கலைக்கழகத்துக்கு நேற்று புதன்கிழமையும் மாணவர்கள் செல்லவில்லை. இதனால் கல்விச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படவில்லை. கடந்த ஒரு மாத காலம் போன்றே பல்கலைக்கழக வளாகம் நேற்றும் வெறிச் சோடிக் காணப்பட்டது.

நேற்று சுமார் 10 இக்கும் குறைவான மாணவர்களே பல்கலைக்கழகத்துக்கு சென்றிருந்தனர் வேறு மாணவர்கள் வருகை தராமையால் அந்த மாணவர்களும் வீடுகளுக்குத் திரும்பினர்.

யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தொடக்கம் கல்விச்செயற்பாடுகள் ஆரம்

பார்க்க பக்கம் 4

## மீனவர்கள் கடலுக்கு செல்லவில்லை

வடமராட்சி,ஜன.10

யாழ்.குடாநாட்டில் நேற்று இடி மின்னலுடன் கூடிய மழை மற்றும் கடுமையான கடல் கொந்தளிப்புக் காரணமாக மீனவர்கள் எவரும் கடலுக்குச் செல்லவில்லை எனத் தெரியவருகின்றது.

இதனால் சந்தைகளில் கடலுணவுகளின் விலை உயர்வடைந்து காணப்பட்டது. அத்துடன் அவற்றுக்கு தட்டுப்பாடும் ஏற்பட்டது.

குறிப்பாக கொட்டடி, கொழும்புத்துறை, குருநகர், பாசையூர் சந்தைகளில் மீன் வரத்துக் குறைவாக இருந்ததால் இங்கு இரு மடங்கு விலைகளில் கடலுணவுகள் விற்பனையாகின.

இதேவேளை-

பார்க்க பக்கம் 4

## வடக்கில் தமிழர்களுக்கு கருத்துச் சுதந்திரம் மறுப்பு

### பிரான்ஸ் தூதுவரிடம் யாழ்.ஆயர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜன.10

வடக்கில் சுதந்திரமாக அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாத நிலையே இப்போதும் காணப்படுகிறது. மக்களை ஒன்று திரட்டிக் கூட்டங்களைக் கூட நடத்த முடியாது. வடக்கில் தமிழ் மக்களின் பேச்சுச் சுதந்திரத்துக்குத் தொடர்ந்தும் முட்டுக் கட்டைகள் ஏற்படுத்தப்படுகின்றன. அவர்கள் சுதந்திரமாகத் தமது கருத்துக்களை வெளிப்படுத்த அஞ்சுகின்றனர்.

இவ்வாறு நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த

பார்க்க பக்கம் 4



## குடாநாட்டில் கடும் மழை; 3,243 குடும்பங்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜன.10

யாழ்.குடாநாட்டில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழை, வெள்ளம் காரணமாக 3 ஆயிரத்து 243 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 238 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த மக்களுக்கான சமைத்த உணவுகள் மற்றும் ஏனைய உதவிகள் என்பன வழங்கப்பட்டு வருவதாகவும் யாழ்.மாவட்ட செயலகத் தகவல்கள் தெரிவித்தன.

யாழ்.குடாநாட்டில் நேற்று முன்தினம் முதல் தொடர்ச்சியாக மழை பெய்து வருகின்றது. இதனால் பல பிரதேசங்கள் வெள்ளத்தில் முற்றாக மூழ்கியுள்ளன. மக்களின் இயல்பு வாழ்க்கை மிகப் பெரியளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த மழை காரணமாக ஊர்காவற்றுறை, பருத்தித்துறை, வேலணை, சண்டிலிப்பாய், கரவெட்டி, மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவுகளில் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவில் 15 கிராம சேவையாளர் பிரிவில் ஆயிரத்து 6 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 318 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவில் 4 கிராம சேவையா

பார்க்க பக்கம் 4

## இன்றும் மழை

யாழ்ப்பாணம், ஜன.10

வடக்கு,கிழக்கு உட்பட நாட்டின் சில பகுதிகளில் இன்று வியாழக்கிழமையும் மழை பெய்யும் என்று யாழ். திருநெல்வேலியிலுள்ள வளிமண்டலவியல் திணைக்களப் பொறுப்பதிகாரி ரி.பிரதீபன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நேற்று முன்தினம் காலை 8.30 மணிதொடக்கம் நேற்று மாலை 5.30 மணிவரை 60 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி யாழ்.குடாநாட்டில் பதிவாகியுள்ளது. கடந்த இரண்டு நாள்களில் மாத்திரம் 139 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

பார்க்க பக்கம் 4

## ரிஸானாவுக்கு நிறைவேறியது தூக்கு

### சவூதியில் நேற்று நடந்த பரிதாபம்

கொழும்பு, ஜன.10

சவூதியில் மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த மூதூர் ரிஸானா நபீக் விடுதலை பெற்று விரைவில் நாடு திரும்புவார் என எதிர்பார்த்திருந்த சூழ்நிலையில், நேற்று அதிரடியாக அப்பெண்ணுக்கு மரணதண்டனையை நிறைவேற்றியது சவூதி அரசு.



இலங்கை வாழ் மக்களை மிகப் பெரும் சோகத்துக்குள் ஆழ்த்தியுள்ள இத்துயரச் சம்பவம் சவூதி நேரப்படி நேற்று நண்பகல் வேளை இடம்பெற்றுள்ளது.

2005ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதலாம் திகதி பணிப்பெண்ணாக சவூதி அரேபியா சென்ற ரிஸானா நபீக், மே மாதம் 15ஆம் திகதி றியாத் நகரிலிருந்து 300 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள 'டவாடமி' எனும் பகுதியிலுள்ள குடும்பமொன்றுக்குப் பணிப்பெண்

பார்க்க பக்கம் 4

## வன்னி நிலைமையை நேரில் பார்வையிடுகிறது ஆயர் குழு

### இன்று முல்லைத்தீவுக்குப் பயணம்

புதுக்குடியிருப்பு, ஜன.10

இலங்கையிலுள்ள சகல கத்தோலிக்க மறை மாவட்டங்களைச் சேர்ந்த 15 ஆயர்களைக் கொண்ட குழு ஒன்று இன்று வியாழக்கிழமை முல்லைத்தீவுக்கு செல்கிறது.

இலங்கை ஆயர் மன்றத் தலைவர் கருதினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தலைமையில் செல்லும் இந்த ஆயர் குழுவினர் போரின் பின்னர் வன்னியில் மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்ட பகுதிகளை நேரடியாகப் பார்வையிடவுள்ளனர்.

வன்னியில் போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு செல்லும் இவர்கள் மீளக்குடியமர்ந்த மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் தேவைகள் தொடர்பாக நேரடியாக ஆராயவுள்ளனர்.

பார்க்க பக்கம் 4

## நாடு முழுவதும் இரு தினங்கள் சட்டத்தரணிகள் பணிப்புறக்கணிப்பு

### குற்றப் பிரேரணை விவாதத்தைக் கண்டித்து

யாழ்ப்பாணம், ஜன.10

வடக்கு மாகாணம் உட்பட நாடளாவிய ரீதியில் சட்டத்தரணிகள் இன்றும் நாளையும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர் என்று சட்டத்தரணிகள் சங்கம் அறிவித்துள்ளது.

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணை விவாதம் நடைபெறுவதைக் கண்டித்தும், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் அச்சுறுத்தப்பட்டதைக் கண்டித்தும் இந்தப் பணிப் புறக்கணிப்பு இடம்பெறவுள்ளது.

யாழ்.நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்றுப் புதன்கிழமை நடந்த கலந்துரையாடல்

பார்க்க பக்கம் 4

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி
இன்னும் 8 நாட்களில்
Gold Sponsor

## யாழ். பல்கலை மாணவரின் விவரம் திரட்டுகிறது இராணுவம்

### பிரதேச செயலகங்கள் ஊடாக

யாழ்ப்பாணம்,ஜன.10

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் விவரங்கள், தொலைபேசி இலக்கங்கள் என்பவற்றை உடனடியாகக் கிராம சேவையாளர்கள் மூலம் தமக்குச் சமர்ப்பிக்குமாறு இராணுவத்தினர் பிரதேச செயலகங்களைக் கேட்டுள்ளனர்.

ஒரு சில பிரதேச செயலகங்களுக்கு நேற்றுச் சென்ற இராணுவ அதிகாரிகள் மாணவர்களின் விவரங்களை நாளை(இன்று) காலை தமக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்று கோரி

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதறினார் ரிஸானாவின் தாயார் அதிர்ச்சியில் உறைந்தது மூதூர்

## விடுதலை என்று கூறி அரசியல் நடத்திய அரசியல்வாதிகளை திட்டித் தீர்த்தனர் மக்கள்

கொழும்பு, ஜன.10

மகளின் வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருந்த தாய் நேற்று அதிர்ச்சியில் உறைந்துபோனாள். அந்தத் தாயுடன் இணைந்து மூதூரும் சோகத்தில் உறைந்துபோனது.

மூதூர் ரிஸானா நபீக்கிற்கு நேற்று நண்பகல் நேரம் சவூதி அரேபியாவில் மரண தண்டனை நிறைவேற்றப் பட்ட தகவலை கேள்வியுற்ற ரிஸானாவின் தாய் செய்வதறியாது திகைத்து நின்றாள்; நம்ப மறுத்தாள். ரிஸானாவின் தந்தை மௌனித்தார். இரு தங்கைகளும் கதறி அழுதனர்.

ரிஸானாவின் தாய், தந்தை மட்டுமல்ல, இலங்கை வாழ் மக்கள் எவருமே நினைத்துப் பார்த்திருக்காத இந்தத் துயரச் சம்பவம் நேற்று இலங்கைக்கு அறியக் கிடைத்தபோது நாடே சோகத்தில் மூழ்கியது.

ரிஸானாவின் சொந்த ஊரான மூதூர் பிரதேசம் கதறியழுதது. உறைந்து போய் நின்ற ரிஸானாவின் தாய் துடியாய் துடித்தாள். தன் கையால் மார்பில் அடித்துக் கதறினாள்.

15 வருடங்கள் பாலூட்டி, சீராட்டி வளர்த்த தனது அன்பு மகளின் மரணம் இவ்வாறு அமைந்துவிட்டதே என எண்ணி விம்மினாள்.

ரிஸானாவுக்கு மரண தண்டனை நிறைவேற்றப் பட்டுவிட்டதை அறிந்த



மூதூர் தொகுதி மக்களும், ஏனைய பிரதேச மக்களும் ரிஸானாவின் வீட்டை நோக்கி அலையாகத் திரண்டனர்.

பள்ளிவாசல்களில் விசேட துஆப் பிரார்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், ஜனாஸாத் தொழுகைகளும் நடத்தப்பட்டன.

ரிஸானா விரைவில் விடுதலையாவாள் என்று போலி வாக்குறுதிகளை வழங்கி அரசியல் நடத்திய அரசியல்வாதிகளை ரிஸானாவின் இல்லத்தில் திரண்ட மக்கள் சாபம் உண்டாகட்டும் எனக் கூறி திட்டித் தீர்த்தனர்.

(த-சி)

# கா.பொ.த. சாதாரணதரப் பரீட்சையின் போது வடக்கு மாணவர்களுக்கு பாதிப்பு இல்லை

## வடமாகாண கல்விப் பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம்,ஜன.10

கடந்த மாதம் நடைபெற்ற கா.பொ.த. சாதாரண தரப் பரீட்சையின் போது வடமாகாணத்தில் மாணவர்கள் எவரும் பாதிக்கப்படவில்லை. அனைத்து மாணவர்களும் பரீட்சைக்கு தோற்றியுள்ளனர் என்று வடமாகாண கல்விப் பணிப்பாளர் வி.செல்வராஜா தெரிவித்தார்.

நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக சாதாரண தரப் பரீட்சை எழுதமுடியாமல் போன மாணவர்களுக்கென விசேட பரீட்சை ஒன்றை நடத்த பரீட்சைத் திணைக்களம் தீர்மானித்துள்ளது. இந்த நிலையில் வடமாகாணத்தில் இவ்வாறான பாதிப்புக்கள் ஏற்பட்டதா எனக் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சீரற்ற காலநிலையால் வடக்கில் மாணவர் எவரும் பாதிக்கப்படவில்லை.

**சீரற்ற காலநிலையால் சாதாரண தரப் பரீட்சை எழுதமுடியாமல் போன மாணவர் களுக்கென விசேட பரீட்சை**

கா.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு அனைவரும் தோற்றியுள்ளனர். வடமாகாணத்துக்கு மீள் பரீட்சை நடைபெற மாட்டாது-என்றார்.

சீரற்ற காலநிலை காரணமாக கடந்த மாதம் 17,18,19,20 ஆம் திகதிகளில் நடைபெற்ற பரீட்சைகளுக்கு சில மாகாணங்களைச் சேர்ந்த மாணவர்கள் தோற்ற முடியாது போனது அவ்வாறு பரீட்சை எழுதத்தவறியவர்களுக்காக விசேட பரீட்சை ஒன்றை நடத்த பரீட்சைத் திணைக்களம் தீர்மானித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.(ஐ-4)

# நிறைவுகாண் வைத்திய ஊழியர்கள் மூன்று நாள்களுக்கு புறக்கணிப்பு

## சேவைகளைப் பெறமுடியாது நோயாளர்கள் அவதி

யாழ்ப்பாணம்,ஜன.10

வைத்தியசாலைகளில் பணிபுரியும், நிறைவுகாண் மருத்துவவியல் தொழில் வல்லுநர்கள் நாடாளாவிய ரீதியல் மீண்டும் பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டுள்ளனர். நேற்றுத் தொடக்கம் மூன்று நாட்களுக்கு தமது போராட்டம் தொடரும் என்று அவர்கள் அறிவித்துள்ளனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையிலும் போராட்டம் முன்னெடுக்கப் படுவதால் நோயாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர்.

நிறைவுகாண் மருத்துவவியல் வல்லுநர்கள் ஒன்றியத்தினுள் அடங்கும் பணியாளர்கள் முன்னரும் 4 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர் இந்தமுறை மூன்று பிரிவாகப் பிரிந்து தமது கோரிக்கைகளை வலியுறுத்தி புறக்கணிப்பை முன்வைக்கின்றனர்.

இதன்படி எக்ஸ் கதிர் இயக்கப்பிரிவினரும், இயன் மருத்துவர்களும் ஒரு குழுவாக இனைந்து 8.30மணி தொடக்கம் இன்று காலை 8.00 மணிவரை பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டனர்.

மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள் இன்று காலை 8.00 மணி தொடக்கம் நாளை மறுதினம் காலை 8.00 மணிவரை பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர்.

மேலதிக நேரக் கொடுப்பனவு, தொலைபேசிக் கொடுப்பனவை அதிகரித்தல், பல்கலைக்கழகங்களில் இருந்து நிறைவுகளின் மருத்துவவியல் தொழில் வல்லுநர்களாக வெளியேறும் பட்டதாரிகளை வைத்திய சாலையில் உள்ள வெற்றிடங்களுக்கு நியமித்தல்.

நீர்வையற்ற முறையில் வாகனம் கொள்வனவுக்கான அனுமதி வழங்கப்பட வேண்டும், மாகாண ரீதியாக விசேட தரத்தையுடையவர்களுக்கு பதவியுயர்வு வழங்கப்பட வேண்டும் ஆகிய பிரதான நான்கு கோரிக்கைகள் உட்பட 12 கோரிக்கைகள் முன்வைத்து இவர்கள் குழுக்குழுவாக பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர். என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# குடாநாட்டுக்குள் நுழையும் வாகனங்கள் நாளைமுதல் நிறைச் சோதனைக்கு

யாழ்ப்பாணம், ஜன.10

யாழ். குடாநாட்டுக்குள் பொருள்களுடன் நுழையும் வாகனங்கள் நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் நிறை நிர்ணயம் செய்யப்படவுள்ளன.

அதனடிப்படையில் ஒவ்வொரு வகை வாகனங்களிலும் அவற்றின் கொள்ளவுக்கு ஏற்ப பொருள்களின் நிறை ஏற்றப்பட வேண்டும் என புதிய கட்டுப்பாடு வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகாரசபையும் பொலிஸாரும் இணைந்து இந்த நடைமுறையைக் கொண்டுவரவுள்ளனர்.

பலகோடி ரூபாக்கள் செலவில் வீதிகள் புனரமைக்கப் பட்டுள்ளமையால் அவற்றை நீண்ட காலத்துக்குப் பேணும் வகையில் இந்த நடைமுறை கொண்டு வரப் படுவதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை அறிவித்துள்ளது.

ஓமந்தை மற்றும் பரந்தன் ஆகிய இடங்களில் வாகனங்களின் நிறை சோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளது.

இதன்படி நான்குசக்கரமுடைய பின்புற எக்செல் உடைய வாகனம் 15 ஆயிரத்து 275 கிலோகிராம் நிறையும், எட்டுசக்கரமுடைய பின்புற மூன்று எக்செலுடைய மோட்டார் வாகனத்தில் 20 ஆயிரம் கிலோகிராம் நிறையும் ஓட்டுநர் பகுதியில் நான்கு சக்கரமுடைய பின்புற எக்செல் உடைய மற்றும் டிரேயிலருக்கான நான்கு சக்கர எக்செலுடை இழுத்துச் செல்லும் வாகனத்துக்கு 21 ஆயிரம் கிலோகிராம் நிறையும், எட்டு சக்கரத்துக்குக் குறைந்த சக்கரமுடைய இழுத்துச் செல்லும் வாகனம் அல்லது இணைக்கப்பட்ட வாகனத்துக்கு 16ஆயிரத்து 500 கிலோகிராம் நிறையும், ஓட்டுநர் பகுதியில் எட்டுச் சக்கர இரட்டை எக்செலுடன் கூடிய டிலேயிலருக்காக 4 சக்கர எக்சேலுடன் கூடிய இழுத்துச் செல்லும் வாகனம் அல்லது இணைக்கப்பட்ட வாகனம் 26ஆயிரத்து 500 கிலோகிராமும் ஓட்டுநர் பகுதியில் இரண்டு சக்கர முன்பக்க எக்செல் மற்றும் நான்கு சக்கர பின்புற எச்செலுடன் கூடிய மற்றும் டேலருக்காக எட்டுச் சக்கர இரட்டை எக்செலுடன் கூடிய இழுத்துச் செல்லும் வாகனம் அல்லது இணைக்கப்பட்ட நிறையும் ஓட்டுநர் பகுதியில் இரண்டு சக்கர முன்பக்க எக்சல் மற்றும் எட்டு சக்கர பின்புற இரட்டை எக்சலுடன் கூடிய மற்றும் டேலருக்காக எட்டுச்சக்கர இரட்டை எக்செலுடன் கூடிய இழுத்துச் செல்லும் வாகனம் அல்லது இணைக்கப்பட்ட வாகனத்துக்கு 30ஆயிரத்து 500 கிலோகிராம் நிறையும் இருக்க வேண்டும் என வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் வாகனத்தின் மொத்த அகலம் 2 ஆயிரத்து 500 மில்லிமீற்றர் ஆகவும் உயரம் 3ஆயிரத்து 800 மில்லிமீற்றர் ஆகவும் இருக்க வேண்டும். இரட்டைத் தட்டு மோட்டார் கோச்சு ஒன்றின் உயரம் 4 ஆயிரத்து 600 மில்லிமீற்றர், மோட்டார் கோச்சுத் தவிர்ந்த இரண்டு அச்சுக்களுள்ள மோட்டார் வாகனத்தின் மொத்த நீளம் 10 ஆயிரம் மில்லிமீற்றர், இரண்டுக்கு மேற்பட்ட அச்சுகளுள்ள மோட்டார் வாகனத்தின் மொத்த நீளம் 11ஆயிரம் மில்லிமீற்றர், மூடியிணைப்பு வாகனத்தின் மொத்த நீளம் 14ஆயிரம் மில்லிமீற்றர் கொண்டவைக்கு நிறை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

(ஐ-13)

# கைபேசித் திருடர் வசமாகச் சிக்கினார்

யாழ்ப்பாணம், ஜன. 10

ஐந்து கைத்தொலைபேசிகளைத் திருடியவர்கள் பலசரக்குக் கடையில் மற்றொரு கைத்தொலை பேசியையும் திருடிக் கொண்டு ஓடியபோது துரத்திப் பிடிக்கப்பட்டனர். அவர்களை நையப்புடைத்த மக்கள் திருட்டுப்போன பொருள்களையும் மீட்டனர்.

பிடிபட்டவர்கள் 18 வயதுக்கு உட்பட்டவர்கள் என்பதால் எச்சரிக்கை செய்யப் பட்டு விடுவிக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் மருதனார்மடத்தில் நேற்றுப் புதன்கிழமை நண்பகல் இடம் பெற்றது.

அப்பகுதியில் உள்ள கடை ஒன்றுக்குச் சென்று சில பொருள்களை அவர்கள் கொள்வனவு செய்தனர். அவற்றை எடுத்துக் கொண்டு போகும்போது கடைக்காரரின் கைத்தொலைபேசி, அழகு சாதனப் பொருள்கள், என்பவற்றையும் அபகரிக்க முற்பட்ட போது அகப்பட்டுக் கொண்டனர்.

இதனையடுத்து 5 பேரையும் அங்கு கூடிய மக்கள் துரத்திச் சென்றனர். அவர்களில் ஒருவர் பிடிபட்டார். அவரைப் பிடித்த மக்கள் நையப்புடைத்தனர். அப்போது ஏனையவர்களையும் அவர் காட்டிக்கொடுத்தார்.

ஐந்து பேரும் பிடிக்கப் பட்டு விசாரிக்கப்பட்டனர். அவர்கள் ஓட்டுமடம், ஏழாலை, சாவகச்சேரி, மாங்குளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று தெரியவந்தது.

விசாரணையின் மூலமாக 6 கைத்தொலை பேசிகள், சிகரட் பெட்டிகள், கணினி மென்பொருள் என்பன அவர்களிடம் இருந்து மீட்கப்பட்டன.

(த-4)

# பத்திரிகையாளர் துரைராஜசிங்கம் காலமானார்



தமிழ்ப் பத்திரிகைத் துறையில் நன்கு அறியப்பட்ட மூத்த ஊடகவியலாளர்களில் ஒருவரான ந.துரைராஜசிங்கம் இம்த மாத முற்பகுதியில் ஜேர்மனியில் காலமானார்.

இவர் தினபதி நாளேட்டின் நாடாளுமன்ற செய்தியாளராகப் பணியாற்றினார். "கலசம்" என்ற தமிழ் மாத சஞ்சிகையின் ஆசிரியராக இருந்தார்.

ஜேர்மனியின் வீக்பாடன் நகரில் அமெரிக்க இராணுவ சிவில் உத்தியோகத்தராகப் பணிபுரிந்தார். இலக்கிய ஆர்வலரான இவர் தனது 68 வருட வயதில் காலமானார். அமரர் பல கட்டுரைகளையும் பிரமுகர்களது பேட்டிகளையும் எழுதினார். (அ)

# வடமராட்சி மக்களின் இயல்புநிலை பாதிப்பு

வடமராட்சி, ஜன.10

குடாநாடு முழுவதும் பெய்துவரும் அடைமழையால் பருத்தித்துறை நகர்ப் பகுதி உட்பட வடமராட்சிப் பிரதேசத்தின் பல இடங்களிலும் பெருவெள்ளம் ஏற்பட்டுள்ளது. மக்களின் இயல்புநிலையும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

பெரும் நிலப்பரப்பைக் கொண்ட புகையிலை, வெங்காயப் பயிர்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

பருத்தித்துறை நகரப் பகுதியில் பொலிஸ் நிலையம், நீதிமன்றம் உள்ளிட்ட அவற்றின் சுற்றாடல்கள் பெருவெள்ளக் காடாகிக் காட்சியளித்தன. இதனால் இவற்றின் பணிகளில் தடங்கல்கள் ஏற்பட்டுள்ளன. இது தவிர ஓடக்கரை ஒழுங்கை [illegible] குறுக்குத் தெருப் பகுதிகளும் வெள்ளத்தால் சூழ்ந்திருந்தன.



இதனை அடுத்து இயந்திர வாகனம் ஒன்று வரவழைக்க ப்பட்டு நீதிமன்றம், பொலிஸ் நிலையம் ஆகிய பகுதிகளிலுள்ள வெள்ள வாய்க்கால்கள் சீர்செய்யப்பட்டதை அடுத்தே வெள்ளம் வழிந்தோடியது.

பல வீதிகளுக்கு மேலாக வெள்ளம் பாய்ந்தோடியதால் போக்குவரத்துகளும் பாதிக்கப்பட்டது. பருத்தித்துறை யாழ்ப்பாணம் பிரதான வீதியில் மாலுசந்தி, மடத்தடிக்கு இடையில் வீதிக்கு மேலாக வெள்ளம் பாய்ந்தோடிக்கொண்டிருந்தது.

வடமராட்சி கிழக்கில் ஆழியவளை கட்டைக்காடு வீதியில் வெள்ளம் பாய்கிறது. இதனால் இப்பாதை ஊடான போக்குவரத்துப் பாதிக்கப்பட்டது. இவற்றைவிட குடத்தனை வரணிவீதி, நாகர்கோவில் எழுதுமட்டுவாள் வீதிகள் உட்பட வேறுசில வீதிகளும் வெள்ளத்தால் போக்குவரத்துத் தடைப்பட்டிருந்தன. (ம-8-253)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தேங்கி நிற்கும் வெள்ளத்தால் வெங்காயம், புகையிலை சேதம்

## நீர் இறைக்கும் இயந்திரங்கள் மூலம் வயல்களில் வெள்ளம் அகற்றல்

*அச்சுவேலி,ஜன.10*

*தொடர்ந்து மூன்றாவது நாளாக பெய்யும் மழையால் வெங்காயம், புகையிலைக் கன்று நடுகை செய்த தோட்ட நிலங்களில் வெள்ளம் தேங்கி நிற்பதால் புகையிலை, வெங்காயப் பயிர்கள் அழுகிச் சேதமடையும் நிலை ஏற்பட்டுள்ளது.*

தோட்ட நிலங்களில் தேங்கி நிற்கும் மழை நீரை நீர் இறைக்கும் இயந்திரங்களைப் பயன்படுத்தி வெளியேற்றிவரும் விவசாயிகள் காலநிலை காரணமாக பயிர் சேதமடையக் கூடும் என கவலை தெரிவிக்கின்றனர்.

இந்தவருடம் விதை வெங்காயத்தின் விலை கணிசமான அளவு அதிகரித்துள்ள போதிலும் விவசாயிகள் கூடுதலான ஆர்வத்தோடு வெங்காயப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டனர்.

வெங்காயமும் முளைத்து நல்ல நிலையில் வளர்ந்து வந்தது.அதேபோன்று புகையிலைச் செய்கையும் பெருமளவில் செய்கை பண்ணப்பட்டது.

இந்த வாரம் ஆரம்பமாகிய மழை கடந்த மூன்று தினங்களாகத் தொடர்ந்து பெய்து கொண்டிருக்கிறது. வானமும் மப்பும் மந்தாரமாகக் காணப்படுகின்றது. அத்துடன் கடும் குளிர்காற்றும் வீசுகின்றது. இதனால் வெங்காயம், புகையிலைப் பயிர்கள் சேதமடையும் நிலை ஏற்படலாம் என்று விவசாயிகள் கவலை கூறுகின்றனர்.

தொண்டமானாறு குடாக்கடல் நீரேரி தடைக் கதவுகள் திறக்கப்படாமல் இருப்பதால் குறிப்பிடத்தக்க மழைவெள்ளம் கடலுக்கு செல்ல முடியாமல் குடாக்கடல் நீரேரியில் தேங்கியுள்ளது. இதனால் தோட்ட நிலங்களிலும் வெள்ளம் தேங்கி நிற்கின்றது.

யாழ்ப்பாணம் பருத்தித்துறை பிரதான வீதிக்கு மேற்குப்புறமாகவும் கிழக்குப் புறமாகவும் உள்ள தோட்ட நிலங்களில் பயிரிடப்பட்ட வெங்காயப் பயிர்களையும் மூடிவெள்ளம் தேங்கி நிற்கிறது. வெங்காயப் பயிர்களை மூடிய நிலையில் மழைவெள்ளம் தேங்கி நிற்பதால் சில விவசாயிகள் தமது தோட்டப் பயிர்களை சேதமடையாமல் காக்கலாம் என்ற நம்பிக்கையோடு நீர் இறைக்கும் இயந்திரங்களைப் பயன்படுத்தி மழை வெள்ளத்தை அகற்றுகின்றனர். எனினும் அயலில் உள்ள நீர் மீண்டும் அதே தோட்டத்தில் வந்து நிறைந்து விடுகின்றது. என்று கூறுகின்றனர்.

மழை வெள்ளத்தால் பெருமளவில் வெங்காயம், புகையிலைப் பயிர்கள் அழுகி சேதமடைந்துள்ளதுடன் கத்தரி, மிளகாய், முட்டைக் கோவா, கரட் முள்ளங்கி போன்ற மரக்கறிப்பயிர்களும் அழுகிச் சேதமடையும் நிலையில் உள்ளன. என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (ம-11-17)

## பயனாளிகளுக்கு 255 லட்சம் ரூபா நிதியை வழங்கியது ஹரித்தாஸ்

யாழ்ப்பாணம்,ஜன.10

யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் கீழ் செயற்படும் ஹரித்தாஸ் மனித முன்னேற்ற நிலையத்தால் கடந்த வருட செயற்றிட்டத்தில் 74 பயனாளிகளுக்கு அரைநிரந்தர வீடுகள் மற்றும் இணை வீட்டுத் திட்டங்களுக்கு 255 இலட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை, செம்பியன்பற்று ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மீள்குடியமர்ந்த குடும்பங்களில் இருந்து 74 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு இந்த வீட்டுத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதற்கு அமைவாகத் தெல்லிப்பழை பிரதேசத்தைச் சேர்ந்த 34 பயனாளிகளுக்கு 51 லட்சம் ரூபா நிதி உதவியில் அரைநிரந்தர வீடுகளும், செம்பியன்பற்று, தெல்லிப்பழை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 40 பயனாளிகளுக்கு 204 இலட்சம் ரூபா செலவில் இணை வீட்டுத் திட்டஉதவிகளும் வழங்கப்பட்டுள்ளன.

> தெல்லிப்பழை, செம்பியன்பற்று ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மீள்குடியமர்ந்த குடும்பங்களில் இருந்து 74 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு இந்த வீட்டுத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதனைவிட தெல்லிப்பழை, செம்பியன்பற்று, பிரதேசங்களைச் சேர்ந்த 74 பயனாளிகளுக்கு 55 லட்சத்து 51 ஆயிரம் ரூபா நிதியுதவியில் மலசல கூடங் களும் அமைத்துக் கொடுக் கப்பட்டுள்ளன. (ம-14)

## மாதகல் மேற்கு மக்களுக்கு பல்வேறு உதவித் திட்டங்கள்

### அரச சாரா நிறுவனங்கள் வழங்குகின்றன

கடந்த வருடம் மீளக்குடியமர்வதற்கு அனுமதிக்கப்பட்ட மாதகல் மேற்கு மக்களுக்கு பல்வேறு அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊடாக உதவிகள் வழங்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

22 வருடங்களாக கடற்படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த மாதகல் மேற்கு பிரதேசம், கடந்த வருடம் நவம்பர் மாதம் மக்கள் பாவனைக்காக விடுவிக்கப்பட்டது.

விடுவிக்கப்பட்ட பகுதியில் மீளக்குடியமர்வதற்காக 350 குடும்பங்கள் வரை பதிவு செய்துள்ளன. இருப்பினும் 25 குடும்பங்களே அந்தப் பகுதியில் நிரந்தரமாக வசிக்கத் தொடங்கியுள்ளன.

சுமார் 200 குடும்பங்கள் வரை தமது காணிகளைத் துப்புரவு செய்து மீளக்குடியமர்வதற்குரிய ஆயத்தங்கள் மேற்கொண்டு வருகின்றன.

அரசினால் மக்களுக்கான உதவிகள் வழங்கப்படுவது குறைவாக உள்ளது. இருப்பினும் அரச சார்பற்ற நிறுவனம் ஊடாக பல்வேறுபட்ட உதவிகள் மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

வைக்குரோ நிறுவனத்தால் இந்தப் பிரதேசத்திலுள்ள 25 கிணறுகள் இறைத்தும் திருத்தியும் கொடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் (டனிஷ்) அகதிகள் பேரவையால் 22 அரை நிரந்தர வீடுகளும் 22 நிரந்தர மலசல கூடங்களும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

சேவாலங்கா நிறுவனத்தால் அரைநிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (த-5)

## நிகழ்வுகள் இன்று

### நடமாடும் சேவை

ஓபேர் (Oferr) நிறுவனத்தின் அனுசரணையுடன் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் பிறப்புப் பதிவு செய்தல் தொடர்பான நடமாடும் சேவை இன்று தெல்லிப்பழை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

### நிர்வாக சபை தெரிவு

யாழ்ப்பாண பிரதேச கிராம மாதர் அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத்தின் 2013 ஆம் ஆண்டுக்கான நிர்வாக சபைத் தெரிவு இன்று பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

## 200 மாணவர்களுக்கு அறக்கொடை நிதியுதவி



*அமரர் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 88 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு பிறந்த நாள் அறக்கொடை நிதியத்தில் இருந்து வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த 200 வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட மாணவர்களுக்கு, அறக்கொடை நிதியத்தினால் சுமார் நான்கு லட்சம் ரூபா நிதியுதவி வழங்கப்பட்டது. இந் நிதியத்தின் மூலம் வழங்கப்பட்ட நிதியை வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.இரவிச்சந்திரன் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கினார். (ம-86)*

## நடுக்கடலில் பழுதடைந்த குமுதினி

நெடுந்தீவிலிருந்து குறிகாட்டுவானுக்கு நேற்று புதன்கிழமை பயணிகளுடன் புறப்பட்ட குமுதினிப் படகு நெடுந்தீவுக் கரையில் இருந்து சுமார் மூன்று கிலோ மீற்றர் தூரத்தில் கடலில் பழுதடைந்தது.

கொந்தளிக்கும் கடலில் படகு பழுதடைந்ததையடுத்து பயணிகள் பெரிதும் அல்லோலகல்லோலப்பட்டனர்.

எனினும் படகோட்டிகளின் முயற்சியால் இயந்திரம் சிறு திருத்தம் செய்யப்பட்டு படகு மீண்டும் நெடுந்தீவுக்குக் கொண்டுவரப்பட்டது. நெடுந்தீவுத் துறைமுகத்தில் வைத்து பூரண திருத்த வேலைகளை மேற்கொண்டதும் மீண்டும் குறிகாட்டுவானுக்குப் புறப்பட்டது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் நெடுந்தீவிலிருந்து படகுகள் எதுவும் வராத நிலையில் குறிகாட்டுவான் துறைமுகத்தில் நூற்றுக்கும் அதிகமான பயணிகள் தங்கி நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகலில் படகுக்காக வந்தவர்கள் நேற்று பிற்பகலிலேயே நெடுந்தீவுக்குச் செல்ல முடிந்தது என்றும் கூறப்பட்டது. (ம-7)

## வாழ்வக நிறுவுனரின் உதய நாளும் பரிசளிப்பும்

வலி.வடக்கு ஜன.10

சுன்னாகம் மருதனார் மடத்தில் அமைந்துள்ளதும் வெள்ளிவிழா ஆண்டில் காலடி எடுத்து வைப்பதுமான வாழ்வக நிறுவனத்தின் நிறுவுனர் உதயநாளும் பரிசுத்தினமும் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.45 மணிக்கு வாழ்வகத் தலைவர் ஆ.ரவீந்திரன் தலைமையில் வாழ்வக மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் சிவலிங்கம் சத்தியசீலனும் சிறப்பு விருந்தினர்களாக தெல்லிப்பழைஆதார வைத்தியசாலை வைத்தியகலாநிதி ஜெகதீசன் நளாயினி, வலி தெற்கு உடுவில் பிரதேச சபைத்தலைவர் தி.பிரகாஷ், யாழ்ப்பாணம் வர்த்தகசங்கத் தலைவர் இ.ஜெயசேகரம், விவசாயத்திணைக்கள ஒய்வு நிலை உதவி விவசாயப் பணிப்பாளர் ச.சிவலிங்கம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்..

கௌரவ விருந்தினர்களாக தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கா தேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன், மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி கிருஷ்ண பிள்ளை கமலராணி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

வாழ்வக மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெறும். (ம-86)

## "உ" அட்டைக்கு நிவாரணம் இல்லை மீள்குடியமர்ந்தோர் கவலை தெரிவிப்பு

தென்மராட்சி,ஜன.10

தென்மராட்சி கிழக்கு கரம்பகம் பகுதியில் மீளக்குடியமர்ந்துள்ள 'உ' பங்கீட்டு அட்டை வைத்திருப்போருக்கு நிவாரண உதவிகள் எதுவும் வழங்கப்படவில்லையென தெரிவிக்கப்பட்டட்டுள்ளது.

தற்காலிக வீட்டுத் திட்டம், நிரந்தர வீட்டுத் திட்டம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்படும் நிவாரணப் பொருள்கள் போன்றன இந்தப் பங்கீட்டு அட்டைக் காரர்களுக்கு வழங்கப்படுவதில்லை எனவும் கூறப்பட்டடுள்ளது.

நிவாரணப் பொருள்கள் வழங்குவதற்கு கொடுக்கப்பட்ட பட்டியலில் இந்த 'உ' பங்கீட்டு அட்டை வைத்திருப்போரின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டது.

2000 ஆம் ஆண்டின் இடப்பெயர்வின் போது சொந்த இருப்பிடங்களை விட்டு வெளியேறிய இவர்கள் 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அங்கு தமது பதிவுகளை மேற்கொண்டுள்ளனர்.

> நிவாரணப் பொருள்கள் வழங்குவதற்கு கொடுக்கப்பட்ட பட்டியலில் இந்த 'உ' பங்கீட்டு அட்டை வைத்திருப்போரின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன

எனினும் தமது வீடு முற்றாக அழிவடைந்ததால் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பின்னரும் பிரதேசத்தில் வாடகை வீடுகளில் தங்கியுள்ளதாகவும் தாம் தமது காணிகளை துப்பரவு செய்துள்ள போதிலும் தமக்கு தற்காலிக வீடு அமைப்பதற்கான எந்தவொரு உதவியும் கிடைக்கவில்லை யெனவும் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரக்குவிப்பால் திவிநெகும எதிர்ப்பு

## ஸ்ரீரங்கா எம்.பி. விளக்கம்

தமிழரின் இனப்பிரச்சினைக்குத் தீர்வான அதிகாரப் பகிர்வுக்குப் பதிலாக, அதிகாரங்கள் ஓரிடத்தில் குவிக்கப்படுவதாலேயே திவிநெகும சட்டமூலத்திற்கு எதிராகத் தமது கட்சி வாக்களித்தது என பிரஜைகள் முன்னணியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஸ்ரீரங்கா தெரிவித்தார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவினால் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வாழ்வின் எழுச்சி எனப்படும் திவிநெகும சட்டமூலத்திற்கு எதிராக வாக்களித்தமை தொடர்பில் விளக்கமளித்தபோதே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் விளக்கமளிக்கையில்,

மாகாண சபைகளின் அதிகாரங்களைப் பறித்து மத்திய அரசின் வசம் அதிகாரத்தைக் குவிப்பதற்கும், சிறுபான்மை மக்களின் சிறப்புரிமைகளை இல்லாமல் செய்வதற்குமான சட்டமாக திவிநெகுமவை நாம் கருதுகிறோம்.

தமிழ்மக்களின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு 13ஆவது திருத்தச்சட்டத்தில் விதந்துரைக்கப்பட்டுள்ள அதிகாரப்பரவலாக்கலே சரியான அதிகாரப் பரவலாக்கலை வழங்காதுள்ள நிலையில், அதிலுள்ள அதிகாரங்களைப் பறிக்கும் வகையில் இந்த திவிநெகும சட்டமூலம் அமைகிறது.

13ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் திவிநெகும சட்டமூலத்தினூடாக இல்லாது செய்யப்படுகின்றன. அப்போது தமிழருக்கு இருக்கின்ற அதிகாரங்களும் இன்னும் கீழிறங்கும்.

தமிழரின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அதிகாரப் பகிர்வுக்குப் பதிலாக, திவிநெகும சட்டமூலத்தினூடாக அதிகாரங்கள் ஓரிடத்தில் குவிக்கப்படுகின்றன. திவிநெகும சட்டமூலத்தினால் சிறுபான்மை மக்களுக்கு எவ்விதமான நன்மையும் கிடைக்காத பட்சத்தில் அதனை நாம் எப்பொழுதும் எதிர்ப்போம் - என்றார் நாடாளுமன்ற உறுப்பினர்.

# நாடாளுமன்றத்தில் அஞ்சலி

சவூதி அரேபியாவில் நேற்று மரணதண்டனை நிறைவேற்றப்பட்ட இலங்கைப் பணிப்பெண் ரிஸானா நபீக்குக்கு நாடாளுமன்றில் நேற்று ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

சுனில் ஹந்துன்நெத்தி எம்.பியால் விடுக்கப்பட்ட கோரிக்கையையடுத்தே இவ்வாறு அஞ்சலி செலுத்தப்பட்டது.

மரணதண்டனை நிறைவேற்றப்பட்ட ரிஸானா நபீக்குக்காக இத்தருணத்தில் எழுந்துநின்று ஒருநிமிடம் மௌன அஞ்சலி செலுத்துமாறு நான் கேட்டுக்கொள்கின்றேன் - என்றார் அவர்

- இவ்வாறு சுனில் ஹந்துன்நெத்தி கோரிக்கை விடுத்ததையடுத்து அச்சமயத்தில் சபையில் இருந்தவர்கள் எழுந்துநின்று அஞ்சலி செலுத்தினர்.

## யாழ்.பல்கலை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
யுள்ளனர்.

மாவீரர் தினத்தையொட்டி யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற அசம்பாவிதங்களைத் தொடர்ந்து 4 பல்கலைக்கழக மாணவர்கள் பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அந்த மாணவர்களை விடுவிக்க கோரி யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் தொடர்ச்சியாக பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வந்தனர். இந்த நிலையில் யாழ். பல்கலைக்கழக கல்விச் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட அழுத்தங்கள் காரணமாக நேற்று முன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

ஆனாலும் பல்கலைக்கழகத்துக்கு குறைவான மாணவர்களே சென்றனர். இதனால் யாழ்.பல்கலைக்கழகத்தின் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாத நிலை இருந்து வருகின்றது.

இந்த நிலையில், தீவகத்தின் ஒருசில பிரதேச செயலகங்கள் மற்றும் வலிகாமத்தில் ஒரு சில பிரதேச செயலகங்கள் ஆகியவற்றிற்கு நேற்றுச் சென்ற இராணுவ அதிகாரிகள், நாளைக்குள்(இன்று) கிராம சேவையாளர்கள் தமது பகுதியிலுள்ள பல்கலைக்கழக மாணவர்களின் பெயர்விவரங்கள், தொலைபேசி இலக்கங்கள் என்பவற்றை திரட்டித்தர வேண்டும் என்று கோரியுள்ளனர் எனத் தெரிய வந்தது.(த-5-251)

## நாடு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
யாடலை அடுத்து இரண்டு நாள்களும் வடமாகாண சட்டத்தரணிகள் பணிப்புறக் கணிப்பில் ஈடுபடத் தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை, நாடளாவிய ரீதியில் பணிப்புறக் கணிப்புச் செய்வது என்று சட்டத்தரணிகளின் தாய்ச் சங்கம் அறிவித்துள்ளது.

பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் அறிக்கையை மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்துள்ளது. இதனையும் மீறி நாடாளுமன்றத்தில் அது தொடர்பில் விவாதம் நடத்துவது நீதிமன்றத்தை அவமதிக்கும் செயல் என்று சட்டத்தரணிகள் சங்கம் கண்டனம் தெரி வித்துள்ளது.

நாடாளுமன்ற விவாதம் இன்றும், நாளையும் இடம் பெறுகின்றது. இதேநாள்களில் தமது கண்டனத்தைத் தெரிவித்து சட்டத்தரணிகள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர்.

பணிப்புறக்கணிப்பை இரண்டு நாள்களில் நிறுத்துவதா? இல்லையா? என்பது தொடர்பில் பின்னரே தீர்மானிக்கப்படும் என்று சட்டத்தரணிகள் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (த-4)

## பல்கலைக்கு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
பிக்கப்படும் எனப் பதிவாளர் அறிவித்திருந்தார்.

நேற்று முன்தினம் சுமார் 15 மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்குச் சென்றிருந்தனர். நேற்று 10 இற்கும் குறைவான மாணவர்களே சென்றிருந்தனர்.

அவர்களும் சிறிது நேரத்தில் வீடுகளுக்குத் திரும்பிச் சென்றுவிட்டனர். இதனால் விரிவுரையாளர்களினாலும் விரிவுரைகள் நடத்தமுடியாமல் போனது. (த-4)

## இன்றும்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
வடக்கு, கிழக்கு, வடமேற்கு, ஊவா மாகாணங்களிலும் மேற்கு, சப்ரகமுவ மாகாணங்களிலும் பிற்பகல் அல்லது இரவு வேளைகளில் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது. வடமேற்கு, மேற்கு கடல் பிரதேசங்களிலும் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்து.

வடமேற்கு நோக்கி மணிக்கு 30-40 கிலோமீற்றர் வேகத்தில் காற்றும் வீசும். கிழக்கு, மன்னார் குடா கடற்பிரதேசங்களில் மணிக்கு 50-60 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும். அத்துடன் கடலும் கொந்தளிப்பு நிலையில் காணப்படும்-என்றார். (த-4)

## வன்னி...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
இன்று காலை புதுக்குடியிருப்பு பகுதிகளுக்கு செல்லும் குழுவினர் புதுக்குடியிருப்பு புனித சூசையப்பர் தேவாலயத்தில் இடம்பெறும் விசேட வழிபாடுகளிலும், கலந்துரையாடல்களிலும் பங்கு பெறவுள்ளனர்.

தொடர்ந்து இரணைப்பாலை உட்பட சகல பகுதிகளுக்கும் இவர்கள் செல்லவுள்ளனர்.

இந்தக் குழுவினர் நேற்றுக் கிளிநொச்சிப் பகுதிக்குச் சென்று அங்கு போரினால் பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்துக் கலந்துரையாடினர். (த-400)

## வடக்கில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
பிரான்ஸ் தூதுவரிடம் சுட்டிக் காட்டினார் யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை.

இரண்டு நாள் பயணம் மேற்கொண்டு இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் கிறிஸ்ரின் றொபின் நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார். நேற்று முற்பகல் 10.30 மணியளவில் யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையை ஆயர் இல்லத்தில் சுமார் ஒரு மணி நேரம் அவர் சந்தித்துக் கலந்துரையாடினார்.

கலந்துரையாடலின் முடி வில் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே யாழ்.ஆயர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சந்திப்புக் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிரான்ஸ் தூதுவரின் யாழ். வருகையின் நோக்கம் இங்குள்ள களநிலைமைகள் தொடர்பில் நேரில் ஆராய்வதே. போரின் பின்னர் 3 ஆண்டுகள் கடந்த நிலை யில் தமிழ் மக்களின் மனோநிலை என்ன? மக்கள் என்ன எதிர்பார்க்கிறார்கள்? வாழ்வாதாரச் செயற்பாடுகள் என்பன தொடர்பிலேயே பிரான்ஸ் தூதுவர் கேட்டறிந்து கொண்டார்.

தமிழ் மக்கள் போர் நிறைவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் நிரந்தர அரசியல் தீர்வு கிடைக்கும் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் 3 ஆண்டுகள் கடந்த நிலையிலும் இன்னமும் அரசியல் தீர்வு கிடைக்கவில்லை. தீர்வை வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் எதனையும் இலங்கை அரசு முன்னெடுக்க வில்லை.

வடமாகாண சபைக்கான தேர்தல் இன்னமும் நடத்தப் படாமல் உள்ளது. அரசு அதை இழுத்தடித்துக் கொண்டு செல்கின்றது.

மேலும் தமிழ் மக்களின் வாழ்வாதாரத்தைப் பொறுத்த வரையில், விவசாயிகள் தமது விளை பொருள்களை சந்தைப்படுத்துவதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ள னர். மீன்பிடித்துறையைப் பொறுத்தவரை மீனவர்கள் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டாலும் இந்திய மீனவர்களின் அத்துமீறலால் பாதிக்கப்படுகின்றனர். இது தொடர்பில் இருநாட்டு அரசு களுக்கும் பல முறை தெரியப்படுத்தியும் நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. எமது கடல்வளம் தொடர்ந்து அழிவடைந்து கொண்டே செல்கிறது.

இங்கு தொழிற்சாலைகள் இல்லாமையால் தொழில் முயற்சிகள் குறைவாகவே உள்ளன.

இரு இனங்களையும் ஒன்றிணைக்கும் செயற்பாடுகளைச் செய்யலாம்தானே? என்று பிரான்ஸ் தூதுவர் என்னிடம் கேள்வி எழுப்பினார்.

இங்கு சுதந்திரமான அரசியல் செயற்பாடுகள் மேற்கொள்ள முடியாத நிலையே காணப்படுகிறது. மக்களை ஒன்றுதிரட்டிக் கூட்டங்கள் நடத்துவதற்குக் கூட அனுமதியில்லை. மக்களின் பேச்சுச் சுதந்திரம் பாதிக்கப்பட்டிருக் கின்றது. இந்தச் சுதந்திரத்துக்கு இங்கு பல முட்டுக் கட்டைகள் போடப்பட்டுக் கொண்டே இருக்கின்றன என்று தூதுவரிடம் தெரிவித்தேன்- என்றார். (த-5)

## ரிஸானாவுக்கு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
ணாக சேர்க்கப்பட்டார்.

அக்குடும்பத்திலிருந்த ஆண் குழந்தைக்குப் புட்டிப்பாலை அருந்தக் கொடுத்துக்கொண்டிருந்த வேளை மூச்சுத் திணறி அக்குழந்தை மரணமடைந்தது. இச்சம்பவம் 2005 மே மாதம் 25ஆம் திகதி நடைபெற்றுள்ளது. நைப் ஜிசியான் கலாப் அல்-ஒடைபி எனும் பெயருடைய அந்த ஆண் குழந்தை மரணமடையும்போது அதன் வயது 4 மாதங்கள்.

இதனையடுத்து, கொலைக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு நீதிமன்ற விசாரணைக்கு முகம் கொடுத்த ரிஸானாவுக்கு டவாடமி உயர் நீதிமன்ற பிரதம நீதியரசரான அப்துல்லா அல்-றொசைமி 2007. 06.16ஆம் திகதி மரணதண்டனை வழங்கித் தீர்ப்பளித்தார்.

இதன் பின்னர் இலங்கை அரசு உட்பட பல்வேறு பொதுநல அமைப்புகள் ரிஸானாவின் விடுதலைக்காகக் கடுமையாக உழைத்தன.

மூதூரிலுள்ள ரிஸானாவின் பெற்றோரை இரு தடவைகள் சவூதி அரேபியாவுக்கு அனுப்பிவைத்த இலங்கை அரசு, சிறையிலுள்ள தமது மூத்த மகளைப் பார்வையிடவும் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுத்திருந்தது.

தனது மகள் விரைவில் நாடு திரும்புவாள் என அப்பொன்னான நாளை எதிர்பார்த்துக்கொண்டிருந்த ரிஸானாவின் பெற்றோருடன் இறுதியாக ரிஸானா கடந்த மாதம் தொலைபேசியூடாகத் தொடர்புகொண்டு உரையாடியுள்ளார்.

ரிஸானா நபீக்கின் விடுதலைக்காக சவூதியிலிருந்து பணியாற்றும் டாக்டர் கிபாயா இப்திகார் ஓரிரு தினங்களுக்கு முன்னர் ரிஸானாவின் பெற்றோரின் புதிய புகைப்படமொன்றை அவசர அவசரமாக மூதூரிலிருந்து பெற்று ரிஸானாவுக்குக் காண்பிக்கவென நேற்று சென்ற வேளை அதற்கு அனுமதி மறுக்கப்பட்டது.

இவ்வாறான இறுதிக்கட்ட பரபரப்பான சூழ்நிலையில், சவூதி அரசு, ஷரீஆ சட்டத்தின் அடிப்படையில் நேற்று நண்பகல் மரண தண்டனையை நிறைவேற்றியது.

மரணமடைந்த குழந்தையின் பெற்றோர், இறுதித் தருணத்திலாவது ரிஸானாவுக்கு மன்னிப்பு வழங்குவார்கள் என்ற அனைவரதும் எதிர்பார்ப்பு நேற்று நண்பகலுடன் தவிடுபொடியானது.

ரிஸானாவை விடுதலைசெய்யுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்த இரண்டு கோரிக்கைகளையும் சவூதி அரசு நிராகரித்திருந்தது.(சி)

## மீனவர்கள்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
பருத்தித்துறைக் கடல் பெரும் கொந்தளிப்பாக இருந்ததால் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு கடலுக்குச்சென்ற வடமராட்சி மீனவர்களின் 10 படகுகள் கரை திரும்ப முடியாது நடுக்கடலில் தத்தளித்தன.

நேற்று வழமையான நேரத்துக்கு இப்படகுகள் கரை திரும்பாமையால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

கடலுக்குச் சென்ற மீனவர்களின் உறவினர்கள் பதற்றமடைந்தனர். எனினும் கடல் அலைகளுக்கு நடுவே பெரும் சிரமத்தின் மத்தியல் நேற்று நண்பகல் 12 மணியளவில் குறித்த படகுகள் கரையை நோக்கி வந்தன.

இறுதிப்படகு மாலை 4.30 மணிக்கே கரை சேர்ந்துள்ளது.

அப்படகிலிருந்த மீனவர்களும் எந்தப் பாதிப்பும் இன்றி கரை சேர்ந்தனர். (த-16-17-8)

## குடாநாட்டில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
ளர் பிரிவுகளில் 277 குடும் பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 3 பேர் இடம்பெயர்ந்து 4 நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

வேலணைப் பிரதேச செய லர் பிரிவில் 216 குடும்பங் களைச் சேர்ந்த 711 பேர் மழையினால் பாதிக்கப்பட் டுள்ளனர். சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 14 குடும்பங்களைச் சேர்ந்த 53 பேர் பாதிக்கப்பட்டுள்ளது டன் அவர்கள் ஒரு நலன்புரி நிலையத்தில் தங்க வைக்கப் பட்டுள்ளனர்.

கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் 135 குடும் பங்களைச் சேர்ந்த 571 பேர் மழையால் பாதிக்கப்பட்டு ஒரு நலன்புரி நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தெரிவித்தார்.

மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 595 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 582 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலர் ந.திருலிங்கநாதன் தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டில் 3 ஆயி ரத்து 243 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 238 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 426 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 627 பேர் நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-5-8)

## சிவில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
நேற்று மாலை யாழ்.மாவட்ட செயலகத்துக்குச் சென்ற அவர் மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கத்தைச் சந்தித்துப் பேசினார்.

தூதுவருடனான இந்தச் சந்திப்புத் தொடர்பாக மேலதிக அரச அதிபர் தெரிவித்தமை வ ருமாறு:-

யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பிலேயே தூதுவர் ஆராய்ந்தார். வீதி மற்றும் உட்கட்டுமானங்களில் கடந்த காலங்களில் இருந்ததை விட யாழ். மாவட்டம் முன்னேற்றம் கண்டுள்ளது என்று தூதுவரிடம் கூறினேன்.

மீன் பிடித்துறையில் 1983ஆம் ஆண்டு காணப்பட்ட அடைவு மட்டத்தை விடத் தற்போது அது குறைந்துள்ளமை தொடர்பில் தூதுவர் என்னிடம் கேள்வி எழுப்பினார்.

அயல்நாட்டு மீனவர்களின் அத்துமீறல்கள் மற்றும் முறையற்ற மீன்பிடி உபகரணப் பாவனை குறைவடைந்ததால் தற்போது மீன்பிடித்துறையில் முன்னேற்றம் அடைந்து வருவதைக் குறிப்பிட்டேன்.

போரால் பாதிக்கப்பட்ட இளம் பெண்களின் தகவல்கள் தொடர்பிலும் பிரான்ஸ் தூதுவர் கேட்டறிந்து கொண்டார். மேலும் வறட்சிக் காலங்களில் தீவகத்தில் ஏற்படும் நீர்ப்பற்றாக்குறை தொடர்பிலும் அவருக்கு விளக்கமாக எடுத்துக் கூறினேன்.

இறுதியாக அவர், சிவில் நிர்வாக விடயங்களில் இராணுவத்தினரின் தலையீடு தொடர்பாக என்னிடம் கேட்டார்.

யாழ்.குடாநாட்டின் கரையோரப் பகுதிகள் ஊடாகத் தான் சென்றுகொண்டிருந்தபோது இராணுவத்தினர் தகவல் திரட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டதை அவதானித்ததாகவும், சிவில் அதிகாரிகள் போன்று பாவனை செய்து இராணுவத்தினர் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டனர். இராணுவத்தினர் இன்னமும் ஏன் சிவில் நிர்வாகத்தில் தலையீடு செய்கின்றனர் என்று தூதுவர் கேள்வி எழுப்பினார்.

அனர்த்த வேளைகளில் இராணுவத்தினர் சிவில் நிர்வாகத்துடன் இணைந்து செயற்பட எமது நிர்வாகக் கோவையில் இடமுண்டு. அதற்கமைய மழைப் பாதிப்புகள் தொடர்பான தகவல்களையே அவர்கள் திரட்டியதாக நான் தெரிவித்தேன் என்றார் மேலதிக அரச அதிபர்.

(த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணுக்காய்ப் பிரதேசத்தில் யானைகளால் அழிவுகள்

துணுக்காய்,ஜன.10

*துணுக்காய் பிரதேசத்தில் காட்டு யானைகளால் அழிவுகள் ஏற்பட்டு வருகின்றன. நெல் வயல்களில் நுழையும் இந்த யானைகள் பெரும் பயிரழிவை ஏற்படுத்தி வருகின்றன.*

இங்குள்ள கல்விளான் கிராமத்தில் மட்டும் சுமார் 7 ஏக்கர் வரையான நெற்பயிர்களை இந்த யானைகள் அழித்து நாசமாக்கியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது இங்கு பெய்து வரும் அடை மழைக்கு மத்தியில் கிராமங்களுக்குள் நுழையும் இந்த யானைகளால் கிராம மக்கள் பெரும் அச்சத்துடன் காணப்படுகின்றனர்.

மேலும் இங்குள்ள வயல் நிலங்களுக்குள் கூட்டம் கூட்டமாக நுழையும் இந்த யானைகள் நெற் பயிர்களுக்குப் பெரும் சேதத்தை ஏற்படுத்தி வருகின்றன.

கல்விளான் கிராமத்திலுள்ள த.நடராசா, ஆ.சபாரத்தினம், த.தவமோகன், பொ.சச்சிதானந்தன், அ.அற்புதராசா, பா.விஜயராசா, ப.வரதன் மற்றும் மேலும் ஒருவர் உட்பட 8 விவசாயிகளின் நெல் வயல்கள் யானைகளின் அழிவுக்கு உள்ளாகியுள்ளன.

திடீர் திடீரென யானைகள் வந்து செல்வதால் கிராம வாசிகள் எந்த வேளையில் என்ன நேருமோ என்ற அச்சத்துடன் இருப்பதைக் காண முடிகின்றது.

மேலும் பாதுகாப்பில்லாத தற்காலிக வீடுகளில் மக்கள் வசித்து வருவதால் யானைகள் இவற்றையும் நாசம் செய்துவிடுமென்ற பய உணர்வும் கிராம மக்களிடையே ஏற்பட்டுள்ளதைக் காண முடிவதாகவும் தெரிய வருகின்றது.

(க-415)

# அடைமழை காரணமாக மீண்டும் இடப்பெயர்வு

புதுக்குடியிருப்பு,ஜன.10

கடந்த இரு தினங்களாகப் பெய்து வரும் மழை காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் 68 குடும்பங்கள் இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளன. சில தினங்களுக்கு முன்பு பெய்த அடை மழை காரணமாக இடம் பெயர்ந்து மீள்குடியமர்ந்த மக்களே மீண்டும் நேற்று முன்தினம் முதல் பெய்து வரும் மழை காரணமாக இடம்பெயர்ந்துள்ளனர்.

கரைதுறைப்பற்று, மாந்தை கிழக்கு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த சுமார் 68 குடும்பங்களை சேர்ந்த 151 பேர் தற்போது இடம்பெயர்ந்துள்ளனர். இவர்களில் சிலாவத்தைப் பகுதியை சேர்ந்த 15 குடும்பங்களும், கள்ளப்பாடு பகுதியைச் சேர்ந்த 25 குடும்பங்களும் அந்தப் பகுதியிலுள்ள முன்பள்ளி ஒன்றில் தங்கியுள்ளனர். மாந்தை கிழக்கில் 28 குடும்பங்களை சேர்ந்த 51 பேர் அந்தப் பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றில் தங்கியுள்ளனர்.

இந்தத் தகவல்களை முல்லைத்தீவு மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையத்தினர் தெரிவிக்கின்றனர். இதேவேளை தொடர் மழை காரணமாக முல்லைத்தீவு- புதுக்குடியிருப்பு வீதி, புதுக்குடியிருப்பு- இரணைப்பாலை வீதி, புதுக்குடியிருப்பு- ஒட்டுசுட்டான் வீதி ஆகியவற்றில் வெள்ளநீர் தேங்கி நிற்பதால் போக்குவரத்தில் ஈடுபடுவோர் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-400)

## தமிழரசுக் கட்சி மூத்த தொண்டர் காலமானார்

வேப்பங்குளம்,ஜன.10

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மறைந்த மூத்த தொண்டரான சின்னக்குட்டி நல்லதம்பியின் இறுதிக் கிரியைகள் புதுக்குடியிருப்பில் இடம்பெற்றுள்ளன.

இவர் அரசியலில் மட்டுமல்லாது சமூகப் பணிகள், ஆலயப் பணிகள் என்பவற்றிலும் முன்னின்று உழைத்தவராவார்.

நீண்ட நாள்களாக நோய் வாய்ப்பட்டிருந்த இவர், கடந்த 5 ஆம் திகதி சனிக்கிழமை புதுக்குடியிருப்பிலுள்ள அவரது இல்லத்தில் காலமானார்.

இறுதி அஞ்சலி உரைகளை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம், வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் இராசேந்திரம், வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபையின் முன்னாள் வேட்பாளர் சி.இராசநாயகம் ஆகியோர் நிகழ்த்தினர்.

(க-421)

# உதவிகள் கிடைக்காத ஆசிகுளம் மக்கள்

வேப்பங்குளம்,ஜன.10

வவுனியா ஆசிகுளம் கிராமத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்தவிதமான உதவிகளும் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் அண்மையில் பெய்த கடும் மழை மற்றும் வெள்ளப் பெருக்குக் காரணமாக ஆசிகுளத்தைச் சேர்ந்த சுமார் 20 குடும்பங்கள் பாதிக்கப்பட்ட நிலையில் அருகிலுள்ள பாடசாலை ஒன்றில் தங்கியிருந்தனர்.

ஆனால் இவர்களுக்கு அரச உதவிகள் எவையும் கிடைக்கவில்லையென பாதிக்கப்பட்ட மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பாக பிரதேச சபை உறுப்பினர் பார்த்தீபனுக்குத் தெரிவிக்கப்பட்டதையடுத்து அவர் வவுனியா பிரதேச செயலருடன் தொடர்புகளை மேற்கொண்டார். இதன் போது வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட கிராமங்களின் பெயர்ப்பட்டியலில் ஆசிகுளம் இடம்பெறவில்லையென பிரதேச செயலரால் தெரிவிக்கப்பட்டது.

ஆசிகுளம் கிராமத்திலேயே கிராம அலுவலரின் அலுவலகம் அமைந்துள்ள போதிலும் தமது கிராமம் விடுபட்டது தொடர்பாக கிராம மக்கள் கவலையும், விசனமும் தெரிவித்துள்ளதாகவும் தெரிய வருகின்றது.

(க-421)



மழை பெய்துவரும் நிலையிலும் துணுக்காய் பிரதேச சபை ஊழியர்கள் குப்பை கூழங்களை வாகனத்தின் உதவியுடன் அகற்றி வருகின்றனர். (க-415)

## வீதிப் புனரமைப்பு

துணுக்காய், ஜன.10

துணுக்காய் திருநகர் பகுதியிலுள்ள வீதியொன்றின் புனரமைப்புப் பணிகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன.

யோகபுரம் பிரதேசத்திலுள்ள திருநகர் 4 ஆம் யூனிட் பகுதிக்கான வீதியின் புனரமைப்புப் பணிகள் அண்மையில் பெய்த மழை காரணமாகத் தடைப்பட்டிருந்தன.

தற்போதும் மழை பெய்து வரும் நிலையில் ஒப்பந்தகாரர்கள் இந்த வீதியின் வேலைகளைத் துரிதமாக மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தப் புனரமைப்புப் பணிகள் பூர்த்தியானதும் மக்கள் இலகுவாகப் பயணிக்க முடியுமெனத் தெரிவிக்கப்படுகின்றது. (க-415)

## ஆச்சிபுரம் மக்களுக்கு உதவிப் பொதிகள்

வவுனியா, ஜன.10

வவுனியா மாவட்ட வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தால் ஆச்சிபுரம் கிராமத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிப் பொதிகள் வழங்கப்பட்டன.

வவுனியா மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் (ORHAN) இணைப்பாளரான திவாகர் உதவிப் பொருள்களை வழங்கினார்.

ஆச்சிபுரம் கிராமத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 250 குடும்பங்களுக்கு நுளம்பு வலை, பாய், தறப்பாள், லாம்பு, துவாய், படுக்கை விரிப்பு ஆகிய பொருள்களைக் கொண்ட பொதிகள் வழங்கப்பட்டன.

அத்தோடு வாழ்வோதயம் சார்பாக இந்தக் கிராமத்தில் பாதிக்கப்பட்ட 5 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு பால்மாபைக்கற்றுகளும், பிரதேச சபை சார்பாக உறுப்பினர் ரவியினால் 3 நாள்கள் காலை உணவும் வழங்கப்பட்டன.

மேலும் மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகளை வவுனியா பகவான் ஸ்ரீசத்திய சாயி சேவா நிலையத்தினர் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

(க)

## 32 வருடங்களின் பின்னர் இராசாக்கள் வாசாப்பு நாடகம்



மன்னார், ஜன.10

மன்னார் பேசாலையில் 32 வருடங்களுக்குப் பின்னர் மூன்று இராசாக்கள் வாசாப்பு என்ற பக்தி நாடகம் அரங்கேறியுள்ளது.

பேசாலைப் பகுதியில் வறுமை, நோய், கஷ்ட நிலை என்பன தாண்டவமாடிக் கொண்டிருப்பதால் இவைகள் நீங்க வேண்டுமென்பதற்காக இந்த நாடகம் மேடையேற்றப்பட்டது.

தமது முன்னோர்கள் காட்டிய வழியில் பேசாலை வெற்றியன்னை பங்கு மக்கள் 32 வருடங்களுக்குப் பின்னர் கடந்த சனிக்கிழமை இந்த நாடகத்தை அரங்கேற்றினர்.

அன்று இரவு இடம்பெற்ற மூன்று அரசர்களின் பெருவிழாவின் போது பங்குத் தந்தை எஸ்.வி. அவுதப்பர் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(க-12)

# சேதமடைந்த ஒழுங்கைகள்

வேப்பங்குளம்,ஜன.10

வவுனியாவிலுள்ள பல கிராமங்களில் காணப்படும் சிறு ஒழுங்கைகள் மோசமாக சேதமடைந்த நிலையில் காணப்படுவதாகத் தெரிய வருகின்றது.

நீண்ட காலமாக புனரமைப்புப் பணிகள் இடம் பெறாமையால் இவை சிதைந்து மக்கள் பயணிக்க முடியாத நிலைக்கு மாறியுள்ளன. இதனால் இவற்றைப் பயன்படுத்தும் கிராம மக்கள் அதிக சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த வகையில் ஆசிகுளம் கிராமத்திலுள்ள 2 ஆம், 3 ஆம், 4 ஆம் ஒழுங்கைகளும் பாதிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.

அண்மைய நாள்களில் இங்கு தொடர் மழை பெய்து வருவதால் இந்த ஒழுங்கைகளில் பெரிய பள்ளங்கள் ஏற்பட்டு மழை நீரும் தேங்கி நிற்பதைக் காண முடிகின்றது.

மிகவும் பின்தங்கிய இந்தக் கிராமத்தில் வசிக்கும் மக்கள் இதனால் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதுடன் பிரதேச சபையினரிடம் இது தொடர்பாக தெரிவித்துள்ளதாகவும் தெரிய வருகின்றது. (க-421)

# மல்லாவி சந்தையில் கோழிகளுக்கு மவுசு



துணுக்காய், ஜன.10

மல்லாவி பொதுச் சந்தையில் மாட்டிறைச்சிக் கடை இயங்காமையால் கோழிகளுக்கு அதிக மவுசு ஏற்பட்டுள்ளது.

இந்த ஆண்டு சந்தையில் மாட்டிறைச்சிக் கடையை நடத்துவதற்கு எவரும் முன்வராமையால் நுகர்வோரின் கவனம் கோழிகளின் மீது திரும்பியதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.


தற்போது ஒரு கிலோ புறொயிலர் கோழி 350 ரூபாவாகவும், சுத்தம் செய்யப்பட்ட இறைச்சி 500 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றது.

அண்மைய நாள்களில் மழை பெய்து வருவதனால் நுகர்வோரின் பார்வை கோழிகளின் மீது திரும்பியுள்ளது. மல்லாவிப் பொதுச் சந்தையில் ஏற்கனவே ஆட்டிறைச்சிக் கடை இயங்காத நிலையிலுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க-415)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## சின்னப்பிள்ளை சின்னத்தம்பி

பலாலி மத்தியை பிறப்பிடமாகவும் தற்போது சங்குவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பிள்ளை சின்னத்தம்பி நேற்று (09.01.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மூத்ததம்பியின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற பொன்னுவின் அன்புக்கணவரும், நவரத்தினம் (கனடா), மகேஸ்வரி, பரமேஸ்வரி, புவனேஸ்வரி, திலகவதி, கமலேஸ்வரி, அன்னலட்சுமி, இராசரத்தினம் (கண்டி), ஜெயரத்தினம் ஆகியோரின் பாசமிகு தந்தையும் அன்னலட்சுமி (கனடா), பொன்னுத்துரை, நவரத்தினம், காலஞ்சென்றவர்களான சபாரத்தினம், சின்னத்தம்பி மற்றும் சற்குருநாதன், பாலசேகரம், கிரிஜா (கண்டி), தவமலர் ஆகியோரின் அன்பு மாமனும், யசோ பாமநாதசிவம், சுகந்தி, நாத்தனகுமார் வசந்தி - சண்முகவதனன், சாந்தி-லிங்கம், சுமதி-ராஜன், முகுந்தன்- அனோஜா,ரஞ்சன் - பஞ்சனா, மனோமாலினி,மனோகரன் - வரகனி, ஜெயா காலஞ்சென்ற சந்திரன் மற்றும் வதனி,குமுதா-கஜன், கேதீஸ்வரன்-அகிலினி, பாபு-சுகி, யோகேஸ் - வித்தியா, ராணி - முகுந்தன், கௌரி- ரவி, மங்களேஸ்-பிரியா, சிறீதரன்-நவகீதா, சுலோஜனா-கபாலி, ரஜனி-பாலன், குதா, ரமேஸ் - யமுனா, ரஜனி-தயா, காலஞ்சென்ற ரவி மற்றும் ரஞ்சினி, வாசு - வனிதா, சதீஸ்-தனுசா, பாமினி-சிவா, விஜய், கபிலன், தீபன், அருண், தர்சிகா, பிரகாஸ், டிலக்ஷகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.01.2013) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆலடி,
சுமநல சேவை நிலைய வீதி,
சங்குவேலி, மானிப்பாய் (28214)(6.7.11)

தகவல்: சி.ஜெயரட்ணம் (மகன்)
கட்டுடை உபதபால் அதிபர்
(T.P:0213205128)


## O/L, A/L தகுதியோடு நீங்களும் British Qualified Chartered Engineer / Quantity Surveyor ஆகலாம்

- Apss International சர்வதேச நாடுகளில் இயங்கும் 1700 Centres க்கு சவாலாக விளங்கி 2012ற்கான 5 World Gold Medal (Medal Of Excellence) வென்று பொறியியல் துறையில் சரித்திரம் படைத்துள்ளது.
- 30 வருட இடைவேளையின் பின் யாழ்/இணுவிலைச் சேர்ந்த திரு.அமிர்தலிங்கம் சிவகுமார் Advanced Diploma in Construction Industry (Civil Engineering) துறையில் Medal Of Excellence (World Gold Medal) பெற்றமைக்கும் அவரை திறம்பட பயிற்றுவித்த Eng B.தவேந்திரகுமார் (Chartered Engineer) அவர்களையும் Apss நிறுவனம் மனதார வாழ்த்தி பாராட்டுகிறது.
- Apss நிறுவனத்தின் பணிப்பாளரும் விரிவுரையாளருமான Prof.கதிரவேலு சந்திரபோஸ் அவர்களுக்கு Electrical & Electronic துறையில் Outstanding Lecturerற்கான Medal Of Excellence (World Gold Medal) பெற்றமைக்கும் எமது நிறுவனம் வாழ்த்திப் பெருமையடைகிறது.

### City & Guilds இனால் வழங்கப்பட்ட Medal Of Excellence வென்ற எம் மாணவர்களுக்கு APSS நிறுவனம் வாழ்த்திப் பாராட்டுகிறது.



ENR.No: VXL 9116
Medal of Excellence Winner Advanced Diploma in Construction Industry (Civil Engineering)
திரு.அமிர்தலிங்கம் சிவகுமார் (இணுவில்)



ENR.No: HWJ 2798
Medal of Excellence Winner Advanced Diploma in Applied Telecommunication Systems
செல்வி குலினி பீரிஸ் (கொழும்பு)



ENR.No: YGN 0251
Medal of Excellence Winner Advanced Diploma in Electrical and Electronic Engineering
திரு.எரங்க பண்டார (கொழும்பு)

### வாழ்த்துக்கள்!

Outstanding Lecturers
Medal of Excellence Winners



Prof.கதிரவேலு சந்திரபோஸ் (கன்னாகம்)
பணிப்பாளர் / தலைமை விரிவுரையாளர்
APSS INTERNATIONAL
Outstanding Lecturer
Electrical & Electronic Engineering



திரு.நீல் அபேசேகர (கொழும்பு)
B.Eng(Hons), Msc (B Admin) AMIE,CPM
Outstanding Lecturer
APSS International

• Civil Engineering/Qunatity Surveying • Electrical & Electronics Engineering • Telecommunications Systems

### Diploma / Advanced Diploma வகுப்புக்கள் தை மாதம் 12 ஆம் மற்றும் 19 ஆம் திகதிகளில் ஆரம்பமாகின்றன.

**நுழைவுத்தகைமை:**
Diploma: G.C.E O/L(கணிதம்,விஞ்ஞானத்தில் திறமைச்சித்தி) / G.C.E. A/L(Maths/Bio/Commerce)
Advanced Diploma: HNDE/NDT/NDES/NCT/OUSL Diploma/Physical Science மாணவர்கள்

- Diploma / Ad. Diploma சித்தியெய்தியதும் வேலைவாய்ப்பு கொடுக்கப்படும்
- Diploma முடித்த ஒருவருக்கு ஊதியத்தோடு Industrial Training கொடுக்கப்படும்.

Civil வகுப்புக்கள் Eng.B.தவேந்திரகுமார் Chartered Engineer(தவா Sir) கொழும்பு/யாழ் பிரபல விரிவுரையாளரால் நடாத்தப்படும்.

## APSS INTERNATIONAL
(College of Engineering Studies)

அன்னவாசா, 242, Dr.சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம். தொ: 0212241731
HOTLINE: 077 2306642 | 072 2306642 | 077 3867695



# NORTH LANKA IIT No. 113, Luxan Plaza, Navalar Road, Jaffna. 0215677774 | 0777470669

විශ්වවිද්‍යාල ප්‍රතිපාදන කොමිෂන් සභාව
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
UNIVERSITY GRANTS COMMISSION

My Number: UGC/AC/I
Post Office Box: 1406
Your Number:
20, Ward Place, Colombo 07, Sri Lanka
21st December, 2012

TO WHOM IT MAY CONCERN

**THE BUSINESS UNIVERSITY OF COSTA RICA - COSTA RICA**
**(Universidad Empresarial de Costa Rica)**

In terms of the provisions of the Public Administration Circular No. 16/92 dated 13th March 1992 the University Grants Commission recognizes Universities that are listed in the following International Publications which are authentic sources of informatiog on Universities and Higher Educational Institutions in different countries of the world.

1. Commonwealth Universities Yearbook
2. International Handbook of Universities

The Business University of Costa Rica ( Universidad Empresarial de Costa Rica), Apartado 12640 - 1000, San Jose, Costa Rica is a University listed in the International Handbook of Universities published by the International Association of Universities.

Therefore, the Business University of Costa Rica - Costa Rica (Universidad Empresarial de Costa Rica) as listed in the above publication is recognized.

This letter is issued at the request of the Director, North Lanka IIT, Chankanai, Jaffna.

(Dr. Priyantha Premakumara)
Additional Secretary/Academic Affairs & University Admissions

HNDIT
HNDA
HNDM
தகமையுடையவர்களுக்கான விசேட சலுகைக் கட்டணத்திலான பட்டப்படிப்பு!

மேலதிக விபரங்கள் நேரில்!!

Duration: 06 Months

**Courses:**
B.Sc. in Computer Science
B.Com. with Computer Application
PG Diploma in Computer Application
M. Sc. in Computer Application
MBA -- DBA

பட்டதாரியாகும் உங்கள் எண்ணத்தினை நிறைவேற்ற அரிய சந்தர்ப்பம்!

UGC Approved Certificates

THE BUSINESS UNIVERSITY OF COSTA RICA
Universidad Empresarial De Costa Rica

Universidad Empresarial de Costa Rica (UNEM)
General Information
info@unem.edu.pl
Registrar Office
registrar@unem.edu.pl
www.unem.edu.pl

SPECIAL OFFER
இப் பிரிவிற்கு மட்டுமே!
NEW BATCH
ஆரம்பமாகிவிட்டது!!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நாடாளுமன்றம் உயர்ந்து நிற்க முயன்றால் காட்டாட்சியே மிஞ்சும்!

ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்டமை போன்று சர்ச்சைக்குரிய வாழ்வெழுச்சி ("திவிநெகும") சட்டமூலம் நேற்று முன்தினம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுவிட்டது. அதனைத் தொடர்ந்து பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மீதான குற்றவியல் பிரேரணை தொடர்பான விவாதம் இன்றும் நாளையும் நாடாளுமன்றத்தில் இடம்பெறும்.

நாளை வாக்கெடுப்பு நடத்தப்படும் என்றும், பிரதம நீதியரசர் பதவிநீக்கம் செய்யப்பட்டு திங்கட்கிழமையே புதிய பிரதம நீதியரசர் நியமிக்கப்பட்டு விடுவார் என்றும் தகவல்கள் வெளிக்கிளம்புகின்றன.

பிரதம நீதியரசர் மீதான குற்றச்சாட்டுகளை விசாரணை செய்த தெரிவுக்குழுவின் அறிக்கை தொடர்பாக ஆராய்வதற்கு ஜனாதிபதியால் சுயாதீனக்குழு நியமிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளபோதிலும் அதன் செயற்பாடுகள் குறித்து தகவல் எதுவும் பின்னர் வெளிவரவில்லை.

சுயாதீனக்குழு என்பது வெறும் கண்துடைப்பு; குற்றவியல் பிரேரணைக்கு வெளிநாடுகளில் உண்டாகியுள்ள எதிர்ப்பைச் சமாளிப்பதற்கான தந்திரோபாயம். ஆகவே பிரதம நீதியரசரைப் பதவிநீக்கம் செய்யும் விவகாரத்தில் சமரசத்துக்கு இனி இடம் இல்லை எனக்கொள்ளலாம்.

பிரதம நீதியரசர் மீதான குற்றவியல் பிரேரணை "திவிநெகும" சட்டமூலம் போன்றதல்ல. நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டதுடன் "திவிநெகும" விவகாரம் முடிவுக்கு வந்துவிட்டது. மாகாணசபைகளின் பதினைந்து அதிகாரங்களைப் பறிக்கும் "திவிநெகும" சட்டமூலம், மாகாணசபைகளை மேலும் பலமிழக்க வைக்கிறது. அதனாலேயே இதனை ஒரு சர்வாதிகாரச்சட்டம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் கடுமையாக விமர்சித்தார்கள்.

"திவிநெகும" விவகாரம் போலன்றி பிரதம நீதியரசர் மீதான குற்றவியல் பிரேரணை நாடாளுமன்ற வாக்கெடுப்புடன் முடிந்துவிடப்போவதில்லை. நீதித்துறைக்கும் சட்டவாக்கத்துக்கும் இடையிலான அதிகாரப் போட்டிக்குத் தீர்வு காணப்படாவிட்டால், நெருக்கடி மேலும் தொடரவே செய்யும்.

பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட சட்டத்தரணிகளை உறுப்பினர்களாகக் கொண்டுள்ள இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் புதிய பிரதம நீதியரசரொருவர் நியமிக்கப்பட்டால் அவரை வரவேற்கப்போவதில்லை என்று பகிரங்கமாக அறிவித்துவிட்டது. நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொண்டுள்ள இந்த அரசு, நீதிச்சேவைக்கு விட்டுக்கொடுக்கும் நிலையில் இல்லை. இந்த நிலையில் நாடு ஒரு கட்சி ஆட்சி முறையை நோக்கிச் செல்வதாக அரசியல் விமர்சகர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். பிரதம நீதியரசரை விசாரணை செய்த நாடாளுமன்றத் தெரிவுக்குழு வலுவற்றது; அதிகாரமற்றது என்று, உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தபோதிலும் அத்தீர்மானம் அரசால் நிராகரிக்கப்பட்டுவிட்டது.

கடந்த காலங்களிலும் நீதித்துறைக்கும் சட்டவாக்கத்துக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டாலும் இது போன்றதொரு நெருக்கடி இதற்கு முன்னர் ஒருபோதும் ஏற்பட்டதில்லை எனலாம்.

சந்திரிகா ஜனாதிபதியாக இருந்த வேளையில், ரணிலின் அரசிடமிருந்த பாதுகாப்பு அமைச்சு உட்பட மூன்று அமைச்சுகளை அதிரடியாகப் பொறுப்பேற்றார். உயர்நீதிமன்றத்தின் ஆலோசனை பெறப்பட்ட பின்பே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. சந்திரிகாவின் பதவிக்காலம் முடிவடையும் காலம் குறித்த சர்ச்சை ஏற்பட்டபோது, 2005இல் அது முடிவடைவதாக உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அதனை ஏற்று ஜனாதிபதித் தேர்தலுக்கு அவர் உத்தரவிட்டார். உயர்நீதிமன்றத் தீர்ப்புக்கு அவர் சவால்விடவில்லை. ஆனால் இன்று அப்படியான நிலைமை இல்லவே இல்லை!

அரசமைப்புக்கான பதினெட்டாவது திருத்தத்தின் மூலம் தனக்குள்ள நிறைவேற்று அதிகாரத்தை மேலும் பலப்படுத்திக்கொண்டுள்ள இன்றைய ஜனாதிபதி, விட்டுக்கொடுப்பு எதற்கும் தயாராக இல்லை. நீதிமன்றத்துக்கு உரிய மதிப்பளிக்காமல், அதன் வழிகாட்டல்களை ஏற்காமல் நாடாளுமன்றம் தொடர்ந்து செயற்படுமானால், நாட்டின் நிர்வாகத்தை நடத்துவது அரசுக்குக் கடினமாக அமையக்கூடும். அரச நடவடிக்கைகளாலும் அரச ஆதரவாளர்களின் செயற்பாடுகளினாலும் பாதிக்கப்படுவோர் தமக்கு உரிய நீதியைப் பெறமுடியாது போய்விடும் நிலை உருவாகும்.

நாட்டின் அரசமைப்பின் பிரகாரமே உயர்நீதிமன்றம் செயற்படுகிறது என்கிறார் பிரதம நீதியரசர். உயர்நீதிமன்றத் தீர்மானம் நாடாளுமன்றத்தைக் கட்டுப்படுத்தாது என்கிறார் சபாநாயகர். அரசமைப்புத் தொடர்பான இப்பிரச்சினைக்கு ஜனாதிபதிதான் தீர்வு காணவேண்டும். அதற்குப் பதிலாகப் பிரதம நீதியரசர் பதவிநீக்கம், பிரச்சினைக்குத் தீர்வாகப் போவதில்லை.

ஜனநாயகத்தின் நான்கு தூண்களில் நாடாளுமன்றமும் நீதித்துறையும் அடங்குகின்றன. அவை இரண்டின் பலமும் சமமானவை. ஆகவே ஒன்றை மீறி மற்றையது மேலோங்க இடமில்லை. அதனைப் பொருட்படுத்தாது நாடாளுமன்றம் தானே அதி உயர் பலமும் வலுவும் கொண்டது என்று உயர்ந்து நிற்க முயன்றால் நாட்டில் விரைவில் காட்டாட்சியே மிஞ்சும். இந்நாட்டு மக்கள் பாவிகள் ஆகுவர். அட, கடவுளே!

# அரச சேவை வெற்றிடங்களுக்கு இந்த ஆண்டில் 9,166 பேர் இணைப்பு

## நிர்வாக சேவைகள் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு தீர்மானம்

கொழும்பு,ஜன.10

அரச சேவையின் பலதரப்பட்ட பதவி வெற்றிடங்களுக்கு இந்த ஆண்டில் 9 ஆயிரத்து 166 பேரை சேர்த்துக் கொள்வதற்கு நிர்வாக சேவைகள் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு தீர்மானித் துள்ளது.

அரச முகாமைத்துவ சேவைக்கு 4088 பேர், கிராம சேவையாளர்கள் 4000 பேர், நிர்வாக சேவைக்கு 114 பேர், மொழி பெயர்ப்பாளர் சேவைக்கு 775 உத்தியோகத்தர்கள் இதில் உள்ளடங்குவதாக அமைச்சர் டபிள்யூ.டீ.ஜே. செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

அரச முகாமைத்துவ சேவைக்குச் சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் 26 ஆம் திகதியும், கிராம சேவையாளர்களுக்கான போட்டிப் பரீட்சை பெப்ரவரி மாதத்திலும் நடத்தப்படவுள்ளன.

கிராம சேவையாளர் பரீட்சை தொடர்பாக இரண்டு லட்சம் விண்ணப்பங்களும், அரச முகாமைத்துவ சேவை பரீட்சை தொடர்பாக ஒரு லட்சத்து 20 ஆயிரத்துக்கு மேற்பட்ட விண்ணப்பங்களும் கிடைக்கப்பெற்றுள்ளன எனவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

நிர்வாக சேவைகள் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளோர் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டு அவர்களுள் 114 பேர் இந்த மாதத்தில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

மொழிபெயர்ப்பாளர்கள் சேவை தொடர்பாக கடந்த முதலாம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் விதமாக 53 பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்த அமைச்சில் அண்மையில் இடம்பெற்ற அரச அதிகாரிகளுடனான சந்திப்பின் போதே அமைச்சர் இந்தத் தகவல்களை வெளிப்படுத்தியுள்ளார். (ம-22)

# சொந்தச் செலவிலேயே மாநாட்டுக்கு வாருங்கள்

## பட்டதாரி பயிலுநர்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,ஜன.10

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இலங்கை சுதந்திரப் பட்டதாரிகள் மாநாட்டுக்கு யாழ்.மாவட்டத்திலுள்ள பட்டதாரி பயிலுநர்கள் அனைவரையும் அவர்களுடைய சொந்தச் செலவிலேயே கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை சுதந்திர பட்டதாரிகள் மாநாடு எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பு சுகதாஸ விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொள்ளவுள்ளார்.

இந்த நிகழ்வுக்கு யாழ்.மாவட்டத்திலுள்ள சகல பட்டதாரிப் பயிலுநர்களையும் கலந்துகொள்ளுமாறு பிரதேச செயலகங்கள் ஊடாக அறிவுறுத்தல் விடுக்கப்பட்டது. ஆரம்பத்தில் போக்குவரத்து வசதி, தங்குமிடங்கள் என்பன ஒழுங்கு செய்து தரப்படும் என்று பிரதேச செயலகங்களில் வாய்மொழி மூலமான அறிவித்தல் வழங்கப்பட்டிருந்தது.

ஆனால் திங்கட்கிழமை திடீரென மாவட்ட செயலகத்தால் போக்குவரத்துக்கான செலவைப் பட்டதாரிகளே ஏற்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பட்டதாரிப் பயிலுநர்களுக்கு மாநாட்டுக்கான அழைப்பிதழ் வழங்கும் போது அதனுடன் இணைத்து, பட்டதாரிகள் எங்கு பணியாற்றப் போகின்றார்கள், எந்தத் துறையில் பணியாற்றப் போகின்றார்கள் என்ற கேள்விகள் அடங்கிய படிவமும் வழங்கப்பட்டிருந்தது. அதனைப் பூரணப்படுத்தித்தர வேண்டும் என்று கேட்கப்பட்டிருந்தது.

சுதந்திரப் பட்டதாரிகள் மாநாட்டுக்கு எங்களை அழைப்பதற்காகவே இவ்வாறு படிவம் வழங்கியுள்ளனர். தற்போது மாதாந்தம் சம்பளமாக ரூபா 10 ஆயிரமே தருகின்றார்கள். இந்த நிலையில் நாம் எமது பணத்தில் கொழும்பு சென்று வருவது என்பது பெரும் செலவு என்று பட்டதாரிப் பயிலுநர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாநாட்டுக்கு இவ்வாறு பட்டதாரிப் பயிலுநர்களைக் கட்டாயப்படுத்தி அழைக்கும் நடவடிக்கைகள் யாவும் அரச இயந்திரங்களினூடாகவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-5)

# மீன் வகைகள் தொடர்பான கணக்கெடுப்பு ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜன.10

இலங்கையில் கரையோரத்திலும், ஆழ்கடலிலும் பிடிக்கப்படும் மீன் வகைகள் தொடர்பான கணக்கெடுப்புக்கள் இந்த மாதம் தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள பரிசோதகர் ரமேஸ்கண்ணா தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த டிசெம்பர் மாதம் மீன் வகைகளின் எண்ணிக்கை கணக்கெடுத்தல் தொடர்பான கருத்தரங்கு ஒன்று கொழும்பில் நடைபெற்றது.

அதனடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் உத்தியோகத்தர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். இந்த உத்தியோகத்தர்களால் கணக்கெடுப்புகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன.

யாழ்.மாவட்டத்தில் ஆழ்கடல் பகுதியான வடமராட்சி, சுப்பர்மடம், இன்பசிட்டி ஆகிய கடற்பகுதிகளில் கணக்கெடுப்புகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

மீன்களின் இனம், நீளம், நிறை, எண்ணிக்கை ஆகியவற்றைக் கணக்கிட்டு பதியப்படுகின்றன.

இவற்றில் சாதாரண மீன்களைத் தவிர சூரை, சுறா ஆகிய மீன்களே பிரதான பங்கை வகிக்கின்றன.

31 நாடுகள் அங்கம் வகிக்கும் சமுத்திர வளங்கள் பற்றிய ஆய்வில் இலங்கை வடபகுதியும் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

கடற்றொழில் அமைச்சின் நிதி உதவியுடன் கடற்றொழில் ஆராய்ச்சி நிறுவனம் தரவுகளை சேகரிக்க முன்வந்துள்ளது.

வடபகுதியில் பிடிக்கப்படும் பெரிய இன மீன் வகைகள் கிழமைக்கு 3 நாள் கணக்கிடப்படும். பின்னர் மாத இறுதியில் கொழும்பு தலைமைத் திணைக்களத்தின் ஊடாக அனுப்பப்படும்.-என்றார். (ம-13)

# மின்சாரக் கட்டணம் விரைவில் அதிகரிக்கும்

## அமைச்சர் சம்பிக்க கூறுகிறார்

கொழும்பு, ஜன.10

மின்சாரக் கட்டணம் எதிர்காலத்தில் அதிகரிக்கப்படவுள்ளது என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டின் மின்சாரத் தேவையின் கூடிய விகிதாசாரம் அனல் மின் உற்பத்தி நிலையங்கள் மூலமாகவே பெறப்படுகிறது.

இதன் காரணமாகவும் எரிபொருள்களின் விலை உயர்வடைந்து செல்வதும் மின் உற்பத்திக்கு நேரடிப்பாதிப்பை ஏற்படுத்துகின்றது என்று அமைச்சர் தெளிவுபடுத்தியுள்ளார்.

மின்சார சபை நட்டமடைந்து வருவது சம்பந்தமாக கருத்துக் கூறியபோது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வரும் நிவாரணச் சலுகைகள் குறைக்கப்படுமானால் மின்சார சபை இலாபத்தில் செயற்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-22)

# நாளாந்தம் சுமார் 2 ஆயிரம் பேர் நாட்டில் உள்ள 29 சிறைச்சாலைகளுக்கு

கொழும்பு,ஜன.10

நாளாந்தம் 2 ஆயிரம் பேர் வரையில் சிறைச்சாலைகளுக்கு அனுப்பப்படுகின்றனர் என்று சிறைச்சாலைகளின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

அதற்கமைய ஒவ்வொரு ஆண்டிலும் நாட்டில் உள்ள 24 சிறைச்சாலைகளுக்கும் ஏறத்தாழ ஒரு இலட்சம் பேர் வரையில் அனுப்பி வைக்கப்படுகின்றனர் எனவும் கண்டறியப்பட்டுள்ளது.

இறுதியாக வெளியிடப்பட்டுள்ள 2011 ஆம் ஆண்டின் சிறைச்சாலைகளுக்கான வருடாந்த அறிக்கைகளுக்கு அமைய, சிறைச்சாலைகளுக்கு உள்வாங்கப்பட்டுள்ளோரின் எண்ணிக்கை ஒரு கோடி 191 பேராவர்.

இவர்களுள் 30 சத வீதமானோர் குற்றவாளிகளாகி தண்டனைகளுக்கு உள்ளாகியிருப்போர் எனவும் அந்த அறிக்கைகள் தெரிவிக்கின்றன. (ம-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு நோய் பரவுதலை கட்டுப்படுத்த மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்

## வவுனியா மாவட்ட சுகாதார அதிகாரி கோரிக்கை

வவுனியா,ஜன.10

வவுனியாவில் மீண்டும் டெங்கு நோய் பரவும் அபாயம் நிலவுவதால் பொதுமக்கள் அவதானத்துடன் இருக்கவேண்டும் என வவுனியா மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரியும் வவுனியா மாவட்ட தொற்று நோய் தடுப்பு வைத்திய அதிகாரியுமான ப.சத்தியலிங்கம் கேட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வவுனியாவில் கடந்த வருடத்தில் 82 பேர் டெங்கு நோய் தாக்கத்துக்கு உள்ளாகினர். இவர்களில் 72 பேருக்கு டெங்கு நோய் உறுதிசெய்யப்பட்டது. எனினும் உயிரிழப்புக்கள் இடம்பெறவில்லை.

ஆனால் இந்த வருடத்தின் ஆரம்பத்திலேயே 3 பேர் டெங்கு நோய் தாக்கத்துக்குள்ளாகியுள்ளனர். வவுனியாவில் தோணிக்கல்லை சேர்ந்த 3 வயதுக் குழந்தையொன்று நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை டெங்கு நோயால் உயிரிழந்துள்ளது.

எனவே டெங்கு தாக்கம் மேலும் அதிகரிக்கும் வாய்ப்புள்ளமையால் பொது மக்கள் நுளம்புபெருக்கத்தை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

குறிப்பாக நுளம்புகள் பெருகாதவாறு நீர் தேங்கி நிற்கும் இடங்களை முழுமையாக சுத்தப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். நீர் தேங்கி நிற்கும் பொருள்களை நிலத்தில் வெட்டி புதைத்தல் வேண்டும்.

காய்ச்சல் ஏற்பட்டால் உடனடியாகத் தகுதியான வைத்தியரையோ அல்லது வைத்தியசாலையையோ நாட வேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார். (த)

# முல்லைத்தீவு வலயத்தில் பணிபுரியும் வெளிமாவட்ட ஆசிரியர்கள் சிரமம்

முல்லைத்தீவு, ஜன.10

முல்லைத்தீவு கல்வி வலயத்துக்கு உட்பட்ட புதுக்குடியிருப்பு கல்விக் கோட்டத்தில் கடமையாற்றும் யாழ். மாவட்ட ஆசிரியர்கள் உட்பட பிற மாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் பெரும் துன்பங்களுக்கு உள்ளாக்கப்பட்டு வருவதாக பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் பலரும் கவலை தெரிவிக்கின்றனர்.

மூன்று வருடங்கள்கூட முடிவுறாத நிலையில் பல ஆசிரியர்கள் எந்த வகையான காரணங்களும் இன்றி இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த மூன்று மாத காலத்தினுள் மட்டும் குறிப்பிட்ட ஆசிரியர் ஒருவருக்கு மாறி மாறி நான்கு பாடசாலைகளுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. இதேபோன்று தற்போது ஏழு வருடங்களைப் பூர்த்தி செய்த ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கும் போது யாழ். மாவட்டம் உட்பட ஏனைய மாவட்டங்களில் இருந்து வந்து கடமையைப் பொறுப்பேற்று மூன்று வருடங்கள் கூட முடிவுறாத நிலையில் பல ஆசிரியர்கள் எந்த வகையான காரணங்களும் இன்றி இடமாற்றம் செய்யப்பட்டு அந்த வெற்றிடங்கள் அதே மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்களால் நிரப்பப்பட்டுள்ளதாக குற்றச் சாட்டப்படுகிறது.

புதுக்குடியிருப்பு கல்விக் கோட்டத்தில் கடமையாற்றும் வெளி மாவட்டங்களை சேர்ந்த ஆசிரியர்களின் இத்தகைய நிலைமையை கருத்தில் கொண்டு அவர்கள் விடயத்தில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-86)

## முல்லைத்தீவில் இரத்த தானம்

யாழ்ப்பாணம், ஜன.10

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள எஸ்.எஸ்.டி. நிறுவனத்தின் மனிதநேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இரத்ததானம் செய்யும் நிகழ்வு கடந்த 04 ஆம் திகதி இடம் பெற்றது.

முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் வைத்தியசாலைகளில் உள்ள இரத்த வங்கிகளில் இரத்தம் குறைந்த நிலையில் இருப்பதால் அதனைப் பூர்த்தி செய்யும் வகையில் இந்த நிறுவனத்தில் இருந்து 150 பணியாளர்களும் முன்வந்து முள்ளியவளை முன்பள்ளியில் வைத்து இரத்ததானம் வழங்கினர். (த-435)

# வற்றாப்பளைப் பகுதியில் கசிப்பு உற்பத்தி அதிகரிப்பு

## இதனால் பெரும் சீரழிவுகள்

முல்லைத்தீவு, ஜன.10

முல்லைத்தீவு வற்றாப்பளைப் பகுதியில் என்றுமில்லாதவாறு கசிப்பு உற்பத்தி அதிகரித்துள்ளது. இதனால் அந்தப் பகுதியில் சீரழிவுகள் ஏற்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

வற்றாப்பளை ஈரான் மற்றும் செம்மண்மோட்டை போன்ற பகுதிகளிலேயே அதிகளவான கசிப்பு உற்பத்தி இடம்பெற்று வருகின்றது. பொலிஸாரின் மறைமுக ஆதரவுடன் இந்தச் செயற்பாடு அதி உச்ச நிலையில் காணப்படுகின்றது.

இந்தப் பகுதியைச் சேர்ந்த இளம் வயதினர் பலர் கசிப்புக்கு அடிமையானதுடன் ரகளைகளிலும் ஈடுபடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் தம்மால் நிம்மதியாக வாழ முடிவதில்லை எனவும், குடித்துவிட்டு வருபவர்களால் தாம் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகவும் அந்தப் பகுதியைச் சேர்ந்த குடும்பப் பெண்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாகப் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தினாலும் அவர்களும் அதனைக் கண்டும்காணாமலும் விட்டுவிடுகின்றனர் என விசனம் •தெரிவிக்கப்படுகிறது.

இத்தகைய செயற்பாடுகளால் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்படுகின்றன. எனவே சம்பந்தப்பட்டவர்கள் இதில் தலையிட்டுக் கசிப்பு உற்பத்தியைத் தடை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என சமூக அமைப்புக்கள் • வேண்டுகோள் விடுத்துள்ளன.

இதேவேளை இந்தப் பகுதியில் மதுபான வகைகளின் விற்பனையும் தாராளமாக இந்தப் பகுதிகளில் இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-410)

# தகுதிக்கேற்ற வேலை இல்லை பட்டதாரிப் பயிலுநர்கள் ஆதங்கம்

மாங்குளம், ஜன. 10

தற்போது வழங்கப்பட்டுள்ள பட்டதாரிப் பயிலுநர்களுக்கான வேலை அமர்த்தலில் தமக்கு உரிய தகுதிக்கேற்ற வேலை வழங்கப்படவில்லை எனப் பட்டதாரிப் பயிலுநர்கள் ஆதங்கம் தெரிவித்துள்ளனர்.

கணிதம், விஞ்ஞானம், தகவல் தொடர்பாடல், தொழில்நுட்பம் ஆகிய பாடங்களைக் கற்பிப்பதற்குப் பாடசாலைகளில் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் வேறு பாடங்களைச் சேர்ந்தோருக்குப் பொருத்தமில்லாத, தொடர்பில்லாத வேலைகளைத் தந்து தம்மை மன அழுத்தத்துக்கு உள்ளாக்குவதாகவும் அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கரைச்சிப் பிரதேச செயலகங்களில் இதுபோன்ற தவறுகள் அதிகமாகக் காணப்படுவதாகவும் எமது கவலைகளை அவர்களிடம் தெரிவிக்கும்போது தம்மை வேலையை விட்டு நீங்கி வீடு செல்லுமாறு கூறப்படுவதாகவும் அவர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலகங்களில் இதுபோன்ற தவறுகள் அதிகமாகக் காணப்படுவதாகவும் எமது கவலைகளை அவர்களிடம் தெரிவிக்கும்போது தம்மை வேலையை விட்டு நீங்கி வீடு செல்லுமாறு கூறப்படுவதாகவும் அவர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

எனவே தமது நிலைமைகளைக் கருத்திற்கொண்டு உரியவர்கள் நடவடிக்கை எடுத்துத் தமது கஷ்டத்தைப் போக்குமாறும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (த-422)

# தாய், தந்தையை இழந்த சிறுவர்களுக்கு உதவிகள்

கிளிநொச்சி, ஜன. 10

செலான் வங்கி, கிளிநொச்சிக் கிளையினால் முன்னெடுக்கப்பட்ட சமூக அபிவிருத்திக்கான பங்களிப்பின் கீழ் தாய் தந்தையை இழந்த 100 சிறுவர்களுக்கு ''டிக்கிரி'' பிளஸ் சிறுவர் சேமிப்புக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் சிறுவர் இல்லத்துக்கான பெயர்ப் பலகையும் திரைநீக்கம் செய்யப்பட்டுள்ளது.

100 சிறுவர்களுக்கு ''டிக்கிரி பிளஸ்'' சிறுவர் சேமிப்புக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டு அவர்களுக்குப் பண வைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

செலான் வங்கி, கிளிநொச்சிக் கிளையினால் முன்னெடுக்கப்பட்ட சமூக அபிவிருத்திக்கான பங்களிப்பின் கீழ் கிளிநொச்சியில் அமைந்துள்ள மகாதேவா சைவச் சிறுவர் இல்லத்தில் தாய், தந்தையை இழந்த நிலையில் பராமரிக்கப்பட்டு வரும் 100 சிறுவர்களுக்கு ''டிக்கிரி பிளஸ்'' சிறுவர் சேமிப்புக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டு அவர்களுக்குப் பண வைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதேவேளை சைவச் சிறுவர் இல்லத்துக்கான பெயர்ப்பலகையினையும், ஏ-9 வீதி கந்தசுவாமி கோயில் முன்பாக திரைநீக்கம் செய்து வைத்துள்ளார். தொடர்ந்து சிறுவர் இல்ல வளாகத்தில் பயன்தரு மரக்கன்றுகளும் நடுகைசெய்யப்பட்டன.

மேற்படி நிகழ்வுகளில் செலான் வங்கியின் கிளிநொச்சிக் கிளைமுகாமையாளர் இ.சுதாகரன் மற்றும் வங்கி உத்தியோகத்தர்கள், சைவச்சிறுவர் இல்ல சிறுவர்கள் மற்றும் சிறுவர் இல்ல நிர்வாகத்தினர் எனப்பலர் கலந்துகொண்டனர். (த-6)

## வன்னி தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் எப்போது?

முல்லைத்தீவு, ஜன. 10

நியமனம் வழங்கப்படும் என எதிர்பார்த்து காத்திருக்கும் வன்னித் தொண்டர் ஆசிரியர்களுக்கு பிறந்துள்ள புதிய ஆண்டிலாவது நியமனம் கிடைக்குமா என அவர்கள் ஏங்குகிறார்கள்.

கடந்த 15 வருடங்களுக்கு மேல் தொண்டர் ஆசிரியர்களாக எந்தவித ஊதியமுமின்றி கற்பித்து வந்த தொண்டர் ஆசிரியர் தற்போது வேறு தொழில்களுக்கும் செல்லாது இதனையே நம்பி இருக்கின்றனர்.

எவ்வளவோ வாக்குறுதிகள் அவர்களுக்கு வழங்கப்பட்டபோதும் எதுவும் நடைமுறைக்கு வருவதாக இல்லை. மீண்டும் மீண்டும் அவர்கள் ஏமாற்றப்பட்டு வருகிறார்கள்.

எனவே இந்தப் புதிய ஆண்டிலாவது தொண்டர் ஆசிரியர்களின் நியமனத்தை வழங்க ஆவன செய்வார்களா என பாதிக்கப்பட்ட தொண்டர் ஆசிரியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-500)

# பஸ் நிலையத்துக்கு ஒதுக்கிய காணி எம்மிடம் ஒப்படைக்கப்படவில்லை

## வவுனியா தனியார் பஸ் சங்கம் தெரிவிப்பு

வவுனியா,ஜன.10

வவுனியாவில் ஏ-9 வீதியில் அமைந்துள்ள காணி தனியார் பஸ்தரிப்பு நிலையத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது எனக் கூறப்படுகின்ற போதும் எமது பஸ் சங்கத்திடம் அது இன்னும் ஒப்படைக்கப்படவில்லை என வவுனியா மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்தச் சங்கம் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது தனியார் பஸ் நிலையத்துக்கு என ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் சாரதிகள் பயிற்சி இப்போது நடைபெறுகின்றது.

எமக்கு இதுவரை காணி ஒதுக்கப்பட்டுள்ளது எனக் கூறப்பட்டுள்ளதே தவிர அந்தக் காணி எம்மிடம் உத்தியோகபூர்வமாக ஒப்படைக்கப்படவில்லை.

அத்துடன் அந்தக் காணியில் எந்தவிதமான வேலைத் திட்டமும் நடைபெறவில்லை-என்றுள்ளது. (த)

# நெடுங்கேணி பண்ணையாளர் சங்கத்தின் ஆண்டு விழா

நெடுங்கேணி, ஜன. 10

நெடுங்கேணி பண்ணையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் 13 ஆம் ஆண்டு விழாவும், வவுனியா மாவட்ட முன்னாள் விவசாயப் பணிப்பாளர்களான கணேசலிங்கம், மகேந்திரராஜா ஆகியோரின் 6 ஆம் ஆண்டு நினைவு நாளும், நெடுங்கேணி மகாவித்தியாலயத்தில் கடந்த 7 ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் பண்ணையாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் வை.பூபாலசிங்கம் தலைமையில் நடைபெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் இறைபதம் அடைந்த விவசாயப் பணிப்பாளர்களுக்கு அவர்களின் மனைவி மற்றும் பிள்ளைகளால் மலர்மாலை அணிவித்து, விளக்கேற்றி அஞ்சலி செலுத்தியதோடு விவசாயிகளின் பாரம்பரிய அரிவுவெட்டுப் பாடலை விவசாயிகள் பாடினர். இறம்பைக்குளம் விதை உற்பத்திச் சங்கத்தின் தலைவர் முத்துக்குமாரின் மாதிரிப் பண்ணையில் செயற்கை உரம் மூலம் செய்கை பண்ணப்பட்ட பயிர்ச் செய்கையை விருந்தினர்கள் பார்வையிட்டனர்.

பிரதம விருந்தினர்களாக வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி எஸ்.மோகனநாதன், விவசாயத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் திருமதி சைலாபானு, உயிரியல் பீட விரிவுரையாளர் திரு.ஏ.நடனகுமரன், சித்த மருத்துவ விரிவுரையாளர் திருமதி சுபாமதி, பண்ணையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் முகாமையாளர் திரு.சிவதாஸ், ஐ.என்.ஓ. நிறுவனத்தின் இணைப்பாளர், நெடுங்கேணி மகாவித்தியாலய அதிபர் சிவலிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டதோடு 300 க்கு மேற்பட்ட விவசாயிகளும் கலந்துகொண்டனர். சிறுவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (த-435)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காரைநகர், ஊர்காவற்றுறை பகுதிகளில் வெள்ளப்பாதிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.10

யாழ். குடாநாட்டில் திங்கள் இரவு முதல் பெய்த கடும் மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

மக்கள் எவரும் இடம் பெயர்ந்து முகாம்களில் தங்காதபோதும் காரைநகர், ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவுகளில் கடுமையான வெள்ளப் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன என்று யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டில் திங்கள் இரவு 11 மணியிலிருந்து கடுமை யான மழை பெய்தது. தொடர்ச்சியாக நேற்று புதன்கிழமை மதியம் வரை இந்த மழை தொடர்ந்தது. இதனால் யாழ். குடாநாட்டில் பல பிர தேசங்களிலும் மழை வெள்ளம் தேங்கியுள்ளது.

தொடர்ச்சியாகப் பெய்த மழைகாரணமாக குடாநாட்டின் பல பிரதேசங்களில் வெள்ளம் தேங்கியுள்ள போதும் மக்கள் இடம்பெயரவில்லை.

இது தொடர்பில் எந்த முறைப்பாடும் கிடைக்கவில்லை. இருப்பினும் ஊர்காவற்றுறை, காரைநகர் பிரதேசங்களில் வெள்ளம் தேங்கியுள்ளதாகவே அறிக்கையிடப்பட்டுள்ளது என்று மேலதிக அரச அதிபர் தெரிவித்தார்.

(த-5-4-13-14-23)

## சாவகச்சேரி மதுவரி பிரிவில் 145 பேருக்கு தண்டம் விதிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.10

சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்துக்கு உட்பட்ட பகுதிகளில் சட்டவிரோதமாக அரச சாராயம் விற்பனை மற்றும் 21 வயதுக் குட்டபட்டவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்த 145 பேருக்கு தண்டம் விதிக்கப்பட்டது. 2 லட்சத்து 58 ஆயிரத்து 500 ரூபா தண்டப்பணமாகக் கடந்த வருடம் சாவகச்சேரி நீதிமன்றத்தால் அறவிடப்பட்டுள்ளது.

மதுவரித் திணைக்களத்தின் சட்டக் கோவைகளுக்கு அப்பால் சட்டவிரோதமாக அரச சாராயத்தை வீடுகளில் வைத்து விற்பனை செய்தவர்களும், 21 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்த வர்த்தகர்களும் மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்களின் திடீர் சோதனை நடவடிக்கைகளின் போது கைதாகினர்.

கடந்த வருடம் 12 மாதகால பகுதியில் இந்த 145 பேரும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் சாவகச்சேரி நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது இந்தத் தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது. ஜனவரி மாதத்தில் 5 பேருக்கு 14 ஆயிரத்து 500 ரூபாவும், பெப்ரவரி மாதத்தில் 16 பேருக்கு 19 ஆயிரம் ரூபாவும், மார்ச் மாதத்தில் 15 பேருக்கு 36 ஆயிரம் ரூபாவும், ஏப்ரல் மாதத்தில் ஒருவருக்கு 2 ஆயிரம் ரூபாவும், மே மாதத்தில் 9 பேருக்கு 10 ஆயிரம் ரூபாவும், ஜூன் மாதத்தில் 19 பேருக்கு 27 ஆயிரம் ரூபாவும், ஜூலை மாதத்தில் 15 பேருக்கு 3 ஆயிரம் ரூபாவும், ஓகஸ்ட் மாதத்தில் 10 பேருக்கு 13 ஆயிரம் ரூபாவும், செப்ரெம்பர் மாதத்தில் 15 பேருக்கு 46 ஆயிரம் ரூபாவும், ஒக்ரோபர் மாதத்தில் 3 பேருக்கு 10 ஆயிரம் ரூபாவும், நவம்பர் மாதத்தில் 24 பேருக்கு 62 ஆயிரம் ரூபாவும், டிசெம்பர் மாதத்தில் 13 பேருக்கு 16 ஆயிரம் ரூபாவும் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

(ம-14)

# மோசமாகச் சேதமடைந்த வீதிகளை திருத்த முன்னுரிமை

## மாநகர சபை ஆணையாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம்,ஜன.10

மோசமாகச் சேதமடைந்துள்ள வீதிகளே முதலில் திருத்தப்படுகின்றன. வீதி திருத்தும் படி கோரி எவரிடமிருந்து அதிக முறைப்பாடுகள் கிடைக்கப் பெறுகின்றனவோ அந்த இடத்து வீதிகள் முன்னுரிமை அடிப்படையில் புனரமைக்கப்படும்.

இவ்வாறு யாழ். மாநகர ஆணையாளர் பிரணவநாதன் தெரிவித்தார்.




யாழ். மாநகர சபையில் இருந்து சுமார் 100 மீற்றர் தொலைவில் உள்ள முருகேசர் வீதி பல வருடங்களாகத் திருத்தப்படாது உள்ளது.

அந்த வீதியில் ஏராளமான குடும்பங்கள் உள்ளன. அந்த வீதி ஊடாகப் பயணிக்கும் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றனர். மழை காலங்களில் அந்த வீதியைப் பயன்படுத்த முடியாத அளவுக்கு கால்வாய் போன்று வீதியை மூடி மழை வெள்ளம் தேங்கியுள்ளது.

அவ்வாறு தேங்கியுள்ள வெள்ளத்தை அந்த இடத்திலிருந்து அகற்றுவதற்கும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அந்த வீதியில் உள்ளோர் மாநகர சபைக்கு வரி செலுத்துகின்றனர்.

இது தொடர்பில் 2011 ஆம் ஆண்டில் மாநகர ஆணையாளருக்கு கடிதம் மூலமாகவும், நேரடியாகவும் முறையிடப்பட்டது.

கடந்த வருடமும் பல தடவைகள் முறைப்பாடுகள் செய்யப்பட்டன. இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அந்த வீதி வழியே சென்று வருபவர்கள் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றனர் என்று உதயனுக்குத் தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயம் குறித்து கடந்த வருட இறுதியில் ஆணையாளர் பிரணவநாதனுடன் தொடர்பு கொண்டு கேட்கப்பட்டது. நேற்று முன்தினம் தொடர்பு கொண்ட போது முன்கண்டவாறு தெரிவித்தார்.

மாநகர எல்லைக்குள் பாதிக்கப்பட்ட வீதிகள் ஒவ்வொன்றாக புனரமைப்புச் செய்யப்படுகின்றன. தமக்குக் கிடைத்த முறைப்பாடுகளின் அடிப்படையில் வீதிகள் புனரமைக்கப்படும். முருகேசர் வீதியிலுள்ளவர்கள் முறைப்பாடு செய்திருந்தாலும் திருத்தப்படவுள்ள வீதிகளின் பட்டியல் படியே புனரமைக்கப்படும் என்று மேலும் விளக்கினார்.

யாழ். கஸ்தூரியார் வீதியில் திரையரங்கு முன்பாக வீதியின் ஒரு பக்கம் மாத்திரம் 'காப்பெற்' போடப்பட்டது. பல மாதங்களாவிட்ட போதும் மறுபக்கம் இன்றுவரை புனரமைக்கப்படவில்லை.

அதனால் அந்த வீதி வழியே பயணிப்பவர்களில் சிலர் விபத்துக்குள்ளாகின்றனர். தவிர கன்னாதிட்டிச் சந்தியில் வீதியில் கிடங்கு வெட்டி நீர்க்குழாய் புனரமைப்புச் செய்தனர்.

பின்னர் பெரியதொரு குழியாக அது விடப்பட்டுள்ளது. இதுதொடர்பில் கேட்ட போது-

நான் தான் கஸ்தூரியார் வீதிக்குச் சென்று பார்க்க வேண்டும் என்றார். மோசமாகச் சேதமடைந்துள்ள வீதிகளில் கஸ்தூரியார் வீதியில் யாழ்.இந்துக் கல்லூரி வரையான பகுதியும் ஒன்று. அதுவும் புனரமைக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ம-4)

## சட்ட விரோத சாராயம் விற்ற மூவர் கைதாகினர்

யாழ்ப்பாணம், ஜன.10

சட்ட விரோதமாக சராயம் விற்பனை செய்த குற்றச்சாட்டில் 3 பேரை ஊர்காவற்றுறைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அவர்களை ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜா முன்னிலையில் நேற்று முன்தினம் முற்படுத்தினர். மூவரும் நயினாதீவைச் சேர்ந்தவர்கள்.

முதலாவது நபர் நீதிமன்றில் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து அவருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

ஏனைய இருவர் மீதும் முன்னரும் இதே குற்றச்சாட்டு உள்ளது. இருவரும் நேற்று முன்தினம் தம் மீதான குற்றத்தை மறுத்தனர். அதனால் இருவர் தொடர்பான வழக்குகளும் விளக்கத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

இதேவேளை, தீவகப் பகுதியில் சட்ட விரோத மது விற்பனை, கசிப்பு உற்பத்தி என்பன அதிகரித்துள்ளன என்று செய்திகள் வெளியாகியிருந்தன. இந்த நிலையில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மது போதையில் வீதியில் நின்று போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்த குற்றத்துக்காக நாரந்தனையைச் சேர்ந்த நபருக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றம் நேற்று முன்தினம் 6 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தமை குறிப்பிடத்தக்கது.

(ம-4)

# சாவகச்சேரி ஆஸ்பத்திரி விடுதியில் தங்குவோருக்கு 'பாஸ்' நடைமுறை

## நடைமுறைப்படுத்துமாறு உத்தியோகத்தர் கோரிக்கை

தென்மராட்சி,ஜன.10

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை விடுதியில் தங்கியுள்ள நோயாளர்களுக்கு பாஸ் வழங்கும் முறை நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். வைத்திய சாலையில் அனுமதிக்கப்படும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் 'பாஸ்' வழங்கும் முறை நடைமுறைபடுத்தப்படுவது மிக அவசியம் என்று உத்தியோகத்தர்கள் வலியுறுத்தி உள்ளனர்.

2012 ஆம் ஆண்டில் வைத்தியசாலையில் நோயாளர்களுக்கு வழங்கப்பட்ட சேவைகள் இந்த வருடம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சேவைகள்பற்றிய கருத்தரங்கு நேற்று முன்தினம் வைத்தியசாலை பொறுப்பதிகாரி தலைமையில் நடத்தப்பட்டது. இதன் போது இந்தக் கருத்து முன்வைக்கப்பட்டது. இங்கு மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் முயற்சியால் வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட்ட வைத்திய அதிகாரிகளின் உதவியுடன் பல்வேறு கிளினிக்குகள் ஆரம்பிக்கப்பட்டன. சுகவாழ்வு, பெண்நோயியல், கர்ப்பப்பை, வாய்ப்புற்றுநோய், குழந்தைப் போசாக்கு, கண், தோல் ஸ்கானிங், முதியோர் கிளினிக் போன்ற கிளினிக்குகள் ஆரம்பிக்கப்பட்டன.

இவற்றில் ஆயிரக்கணக்கான நோயாளர்கள் சிகிச்சை பெற்றனர். இந்த கிளினிக்குகளில் மக்கள் பெற்ற சேவையை விட அங்கு காணப்பட்ட குறைபாடுகள், தேவைகள் பற்றி ஆராயப்பட்டு நிவர்த்தி செய்ய அனைத்துத் தர உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் இதயசுத்திடன் கடமையாற்ற வேண்டும். இந்த வருடத்தில் முதியோர் விடுதிகள் ஆரம்பிக்கப்படுவதுடன் எலும்பு முறிவு மற்றும் காது மூக்குத் தொண்டை சிகிச்சைப் பிரிவுகளும் ஆரம்பிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தர்களுக்குப் பற்றாக்குறையாக இருந்த போதிலும் அவர்கள் வழங்கிய சேவைகள் பாராட்டப்பட வேண்டியவை. கடந்த 2010 ஆம் ஆண்டில் சிறந்த சேவைகளை வழங்கிய யாழ். பிராந்திய சுகாதார திணைக்கள நிறுவனங்களில் இரண்டுக்கு தேசிய விருதுகள் கிடைத் துள்ளன.

[illegible] கடமையாற்றும் அனைத்துத் தரத்தினரும் நோயாளர்களுக்கு வழங்கும் அளப்பெரிய சேவையால் இந்த வைத்தியசாலைக்கு மாகாண மற்றும் தேசிய விருதுகள் கிடைக்கப்பாடுபட வேண்டும். வைத்தியசாலையில்கடமையாற்றும்ஒவ்வொரு பணியாளரும் நோயாளர்கக்கு வழிகாட்டிகளாகத் திகழ வேண்டும். அவர்களுக்கு வலிந்து உதவி செய்ய வேண்டிய அதேவேளையில் அவர்களின் கௌரவம் பாதிக்கப்படாத நிலையில் அவர்களுக்கிருக்கும் நோய் பற்றிய இரகசியத் தன்மைபேணப்படவேண்டும்.

நோயாளர் விரும்பும் வைத்திய அதகாரியிடம் சிகிச்சை பெறும் உரிமை உள்ளவர்கள். அவர் விரும்பும் வைத்தியரிடம் அழைத்துச் செல்ல வேண்டியது வைத்திய சாலையில் கடமைபுரிவோரின் பொறுப்பாகும்.

அவர்களுக்கு ஏற்பட்டுள்ள நோயின் தன்மையைப் பொறுத்து ஆலோசனை வழங்குவதை விடுத்து அவர்களின் உரிமையை மீறும் வகையில் கட்டாயப்படுத்தக்கூடாது

வைத்தியசாலையில் நிலவக் கூடிய தேவைகளை வைத்தியசாலை நிர்வாகம் தான் செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டை மறந்து எமது மக்களுக்கு வழங்கும் சேவையாக கருதி வைத்தியசாலை பணியாளர்களோ, அபிவிருத்தி சபையினரோ, பொதுமக்களோ, நலன்விரும்பிகளோ தாமாக முன்வந்து சுகாதாரத் திணைக்களத்துடன் அல்லது அரசுடன் தொடர்பு கொண்டு தெரிவிக்க வேண்டும்.

நோயாளர்களுக்கு தேவையான சேவைகளை உரியவர்களிடம் கேட்டுப் பெற்றுக் கொள்வதில் தவறில்லை.- என்றும் கூறப்பட்டது. (ம-9)

## டெங்கு பரவும் சூழல் இருந்தமையால் அபராதம்

யாழ்ப்பாணம்,ஜன.10

டெங்கால் பீடிக்கப் படுபவர்களது எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில் நுளம்பு பரவும் வகையில், வீட்டுச் சுற்றாடலை வைத்திருந்தவர்களுக்கு 9 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது நீதிமன்றம்.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஆர்.எஸ். மகேந்திரராஜா முன்னிலையில் இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

காரைநகர், ஊரி, களபூமி, சின்னாலடி ஆகிய இடங்களைச் சேர்ந்த 3 பேருக்கு எதிராக பொலிஸார் வழக்குப் பதிவு செய்தனர்.

நீதிமன்றில் மூவரும் தம் மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டனர். இதனை அடுத்து தலா 3 ஆயிரம் ரூபா வீதம் 9 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.


(ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிழக்குப் பிராந்திய கடலோர காவல் படைக்கு புதிதாக வழங்கப்பட்ட 'ராஜ் கமல்' ரோந்து கப்பலை மத்திய பாதுகாப்புத்துறை இணை அமைச்சர் ஜிதேந்தர் சிங் பார்வையிட்டார்.

# சபரிமலை ஐயப்பன் கோயிலில் நெரிசலில் சிக்கி 7 பக்தர்கள் காயம்



திருவனந்தபுரம், ஜன.10

சபரிமலை ஐயப்பன் கோயிலில் எதிர்வரும் 14 ஆம் திகதி மகரவிளக்கு பூசை நடைபெறவுள்ளது. இன்னும் 5 தினங்களே உள்ள நிலையில் சபரிமலையில் கட்டுக்கடங்காத பக்தர்கள் கூட்டம் காணப்படுகிறது. இதனால், பக்தர்கள் 10 மணி நேரத்துக்கும் மேலாக வரிசையில் காத்திருந்து தரிசனம் செய்து வருகின்றனர்.

பக்தர்கள் வருகை அதிகரித்ததைத் தொடர்ந்து கடந்த சில தினங்களாக மும்பையிலேயே பக்தர்கள் தடுத்து நிறுத்தப்பட்டு சிறுசிறு குழுக்களாக அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றனர். கடந்த திங்கட்கிழமை இரவில் தரிசனத்துக்காகக் காத்திருந்த பக்தர்களின் வரிசை 18 ஆம் படி தொடக்கம் மரக்கூட்டம் பகுதி வரை இருந்தது. இரவு 11 மணி அளவில் பக்தர்களின் கூட்டம் மேலும் அதிகரித்தது. நடை சாத்தும் நேரம் நெருங்கியதைத் தொடர்ந்து 18 ஆம் படி அருகே காத்திருந்த பக்தர்கள் அனைவரையும் ஒரே நேரத்தில் தரிசனத்துக்கு பொலிஸார் அனுப்பி வைத்தனர். இதனால் கோயில் வளாகத்தில் கடும் நெரிசல் ஏற்பட்டது. இதில் சிக்கி 7 பக்தர்கள் காயமடைந்தனர்.

# பாக். இராணுவத்தினர் சூடு இந்திய வீரர்கள் 2 பேர் சாவு

## காஷ்மீர் எல்லையில் சம்பவம்



காஷ்மீர், ஜன.10

பாகிஸ்தான் படையினர், காஷ்மீர் பகுதியில் நடைமுறையில் கடைப்பிடிக்கப் பட்டுவரும் கட்டுப்பாட்டுக் கோட்டைக் கடந்து, இந்தியப் படையினர் இருவரைச் சுட்டுக்கொன்றதாக இந்திய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்தியக் கட்டுப்பாட்டுப் பகுதியில் மேற்படி துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை, இரண்டு தினங்களுக்கு முன்னர், பாகிஸ்தான் இராணுவம் இது போன்றதொரு குற்றச்சாட்டை இந்தியாவுக்கு எதிராகச் சுமத்தியிருந்தது.

அந்தச் சம்பவத்தில், இந்தியப் படையினர் தனது நிலப் பரப்புக்குள் நுழைந்து இராணுவச் சாவடி ஒன்றைத் தாக்கிய போது இந்தியச் சிப்பாய் ஒருவரைத் தாம் கொன்றதாக பாகிஸ்தான் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ)

# பாகிஸ்தான் தூதருக்கு அழைப்பாணை

## எல்லையில் துப்பாக்கிச்சூடு குறித்து விளக்கமளிக்கக் கோருகிறது இந்தியா

டில்லி, ஜன.10

இந்திய எல்லையில் இந்தியச் சிப்பாய்கள் இருவர் கொடூரமாகக் கொல்லப் பட்டதற்கு விளக்கம் அளிக்குமாறு பாகிஸ்தான் தூதருக்கு அழைப்பாணை அனுப் பப்பட்டுள்ளது. அத்துடன் பாகிஸ்தானுக்கு கடும் கண் டனமும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் உள்ள மெந்தார் செக்டருக்குள், எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டைத் தாண்டி சுமார் 600 மீற்றர் தூரம் வரை உள்ளே அத்து மீறி நுழைந்த பாகிஸ்தானிய படையினர், இந்திய இராணுவ வீரர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்திய இராணுவ வீரர்கள் கொல்லப்பட்ட சம்பவம் உணர்ச்சி பூர்வமானது என்று வெளியுறவுத் துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் கூறியுள்ளார்.

மேற்படி தாக்குதலில் 13 ஆவது ராஜ்புத்தானிய ரைபில்ஸ் பிரிவைச் சேர்ந்த லான்ஸ் நைக்ஸ் ஹேம்ராஜ் மற்றும் சுதாகர் சிங் ஆகிய இரண்டு வீரர்கள் கொல்லப்பட்டனர். அதில் ஒரு சிப்பாயின் தலையை பாகிஸ்தானிய வீரர்கள் வெட்டி எடுத்துச் சென்றுள்ளனர்.

பாகிஸ்தான் இராணுவத்தினரின் மேற்படி கொடூரச் செயலுக்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. மேலும் இது குறித்து விளக்கம் அளிக்குமாறு பாகிஸ்தான் தூதருக்கு மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. இதனிடையே பாகிஸ்தான் இராணுவத்தினரின் செயலுக்கு இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அந்தோனி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். பாகிஸ்தான் இராணுவத்தினரின் செயல் மனிதாபிமானமற்றது என்று கூறிய அவர், இதனை கவனமாக பரிசீலித்து வருவதாக வும் கூறியுள்ளார். இதே போல் இந்திய இராணுவ வீரர்கள் கொல்லப்பட்ட சம்பவம் உணர்ச்சி பூர்வ மானது என்று வெளியுற வுத்துறை அமைச்சர் சல் மான் குர்ஷித் கூறியுள்ளார். குறித்த விடயத்தை இரு நாடு களும் கவனமாகக் கையாள வேண்டும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (வ)

# தரங்கம்பாடி மீன்பிடித் துறைமுகம் உலக வங்கி அதிகாரிகள் ஆய்வு

தரங்கம்பாடி, ஜன.10

தரங்கம்பாடியில் 60 கோடி ரூபா செலவில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ள மீன்பிடித் துறைமுகத்துக்கான இடத்தை, உலக வங்கி அதிகாரிகள் நேற்று முன்தினம் ஆய்வு செய்தனர்.

நாகை மாவட்டம் தரங்கம்பாடியில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க வேண்டும் என்று தமிழக அரசுக்கு அந்தப்பகுதி மீனவர்கள் கோரிக்கை விடுத்து வந்தனர். அதனடிப்படையில் 60 கோடி செலவில் துறைமுகம் அமைக்க தமிழக அரசு, உலக வங்கியை நாடியிருந்தது.

இதையடுத்து உலக வங்கி அதிகாரிகள் மீன்பிடித் துறை முகம் அமையவுள்ள இடத்தை ஆய்வு செய்வ தற்காக நேற்று முன்தினம் தரங்கம்பாடிக்குச் சென்றனர். (வ)

# சுபாஸ் சந்திரபோஸ் மாயமான விவகாரம் மம்தாவிடம் உதவி கோருகிறது குடும்பம்



டில்லி, ஜன.10

சுதந்திரப் போராட்ட வீரர் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் மாயமான சம்பவம் தொடர்பான மர்மங்களை தெளிவுபடுத்த உதவுமாறு அவரது குடும்பத்தினர் மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜியை நாடியுள்ளனர்.

இதுதொடர்பாக, நேதாஜியின் உறவினரான சந்திர குமார் போஸ் என்பவர் மம்தா பானர்ஜிக்கு எழுதியுள்ள கடிதத்தில்,

1945 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 17 ஆம் திகதி பாங்கொக் விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட நேதாஜி குறித்து அதன் பின்னர் தகவல் இல்லை.

இது தொடர்பாக மத்திய அரசுக்கு பலமுறை வேண்டுகோள் விடுத்தும் முறையான பதில் இல்லை. உலகம் முழுவதும் உள்ள நேதாஜியின் ஆதரவாளர்கள் சார்பாக நாம் இதுதொடர்பாக பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்து, அவரது மாயம் தொடர்பான விளக்கங்களைப் பெற வேண்டும் என்று கேட்டுள்ளார். (வ)

# திரிணாமுல் கட்சியினருடன் மார்சிஸ்ட் கம்யூ. மோதல்

## 20 பேர் வெட்டுக் காயங்களுக்குள்ளாகினர்



மேற்கு வங்கத்தில் திரிணாமுல் காங்கிரஸ் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினருக்கு இடையே நேற்று முன்தினம் ஏற்பட்ட பயங்கர மோதலில் 20 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

30 ஆண்டுகளுக்கும் மேலாக மேற்கு வங்கத்தில் ஆட்சியில் இருந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கூட்டணி அரசை பதவியிலிருந்து திரிணாமுல் காங்கிரஸ் தலைவர் மம்தா பானர்ஜி இறக்கினார். இதனால் திரிணாமுல் காங்கிரஸ் மீது கம்யூனிஸ்ட்டுகளுக்கு கடும் கோபம் நிலவுகிறது.

2011 ஆம் ஆண்டு தொடக்கம் மேற்கு வங்கத்தில் ஆங்காங்கே சில மோதல்கள் நடைபெற்று வந்த நிலையில் கடந்த இரண்டு நாள்களாக நிலைமை மிகவும் தீவிரமடைந்துள்ளது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த முன்னாள் எம்.எல்.ஏ. அப்துல் ரசாக் முல்லா, கடந்த திங்கட்கிழமை திரிணாமுல் காங்கிரஸ் கட்சியினரால் கடுமையாகத் தாக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

அதற்குக் கண்டனம் தெரிவிக்கும் வகையில் அலிப்பூர் நகரில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டுகள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு செய்தனர்.

50 இற்கும் மேற்பட்ட வாகனங்களில் அவர்கள் அலிப்பூர் சென்று கொண்டிருந்தபோது பாமன்கட்டா என்ற இடத்தில் திரிணமுல் காங்கிரஸ் தொண்டர்களால் வழி மறித்துத் தாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

அந்தப் பகுதியின் திரிணாமுல் காங்கிரஸ் தலைவர் அராபுல் இஸ்லாம் தலைமையில் வந்த மேற்படி கட்சியினர், கம்யூனிஸ்ட்டுகள் மீது தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படுகிறது. இதில் 15 வாகனங்கள் எரிக்கப்பட்டதுடன் 20 இற்கும் மேற்பட்டோர் வெட்டுக் காயங்களுக்குள்ளாகினர்.

அராபுல் இஸ்லாம் தலைமையில் வந்த திரிணாமுல் காங்கிரஸார் தங்களை தாக்கியதாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் முறைப்பாடு தெரிவித்தனர். எனினும் வாகனங்களில் வந்த கம்யூனிஸ்ட்டுகள், தங்களை நோக்கித் துப்பாக்கியால் சுட்டதாகவும், தாம் காருக்குள் பதுங்கி உயிர் தப்பியதாகவும் அராபுல் இஸ்லாம் கூறியுள்ளார். (வ)

# ஈரான் சிறையில் இந்திய மீனவர்கள் பிரதமருக்கு கருணாநிதி கடிதம்

ஈரான் சிறையில் அடைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கோரி பிரதமருக்கு திமுக தலைவர் கருணாநிதி கடிதம் எழுதியுள்ளார்.

அவர் எழுதியுள்ள கடிதத்தில், தமிழக மற்றும் கேரள மீனவர்கள் 29 பேர் எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றத்துக்காகக் கைது செய்யப்பட்டு கடந்த 50 நாள்களாக ஈரானில் ஈகிள்ஸ் தீவில் சிறை வைக்கப்பட்டுள்ளனர்.

அங்கு அவர்கள் சொல்லொணாத் துயரத்தில் உள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அங்குள்ள நாடாளுமன்றக் குழு உறுப்பினர் ஹெலன் டேவிட்சன், சிறையில் உள்ள மீனவர்களின் நிலை குறித்து எனக்குக் கடிதம் எழுதியுள்ளார். அவர்கள் உணவு உண்ணாமல், போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். ஈரானில் உள்ள சிறை அதிகாரிகள், அவர் களை மனிதாபிமானமற்ற முறையில் நடத்துவதாகவும் கூறப்பட்டுள்ளது.

இந்த விடயத்தில் மத்திய அரசு உடனடியாகத் தலையிட்டு, இந்திய மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தக் கடிதத்தின் மூலம் கேட்டுக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒபாமாவை சந்திக்கிறார் ஆப்கன் ஜனாதிபதி

வோஷிங்டன், ஜன.10

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவும், ஆப்கன் ஜனாதிபதி ஹமீத் கர்சாயும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வோஷிங்டனில் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

ஆப்கனில் முகாமிட்டுள்ள அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகள் அனைத்தும் 2014ஆம் ஆண்டு இறுதிக்குள் ஆப்கனில் இருந்து வெளியேறுகின்றன. எனினும் பாதுகாப்பு கருதி அமெரிக்காவின் சிறப்பு படைகள் சிறிது காலம் நீடிக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டு வருகிறது.


இது தொடர்பாகவே அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவும், ஆப்கன் ஜனாதிபதி ஹமீத் கர்சாயும் வருகிற வெள்ளிக்கிழமை வோஷிங்டனில் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர் என்று வெள்ளை மாளிகை வட்டாரங்கள் தெரிவித்தன.

## முன்னாள் பாக். ஜனாதிபதி பேரன் திருமணத்தில் சத்ருகன் சின்கா

இஸ்லாமாபாத், ஜன.10

பாகிஸ்தான் முன்னாள் சர்வாதிகாரி ஜியா உல் ஹக்கின் பேரன் திருமணத்தில் பா.ஜ.க. தலைவரும், நடிகருமான சத்ருகன் சின்கா கலந்து கொண்டார்.

ஜியா உல் ஹக்கின் குடும்பத்துடன் பொலிவூட் நடிகர் சத்ருகன் சின்காவுக்கு நெருக்கம் அதிகம். ஜியா உல் ஹக்கின் மகள் சென் ஜியாவின் அழைப்பை அடுத்து, சத்ருகன் சின்காவும் அவரது மகன் லுவ்வும் இஸ்லாமாபாத்தில் நடந்த, உஸ்மான் திருமணத்தில் கலந்து கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.



அமெரிக்க வெளியுறவுத்துறைச் செயலாளர் ஹிலாரி கிளிண்டன் மருத்துவமனையில் இருந்து சிகிச்சை முடிந்து வீடு திரும்பிய பின் பணிக்கு திரும்பினார். அவர் தனது கையில், வெளியுறவு துறையின் சின்னம் பதித்த கால்பந்து போட்டியில் அணியும் தலைக் கவசத்தை உயர்த்திக் காண்பிக்கிறார்.

# விமானத்தின் மீது ரொக்கெற் தாக்கு

### நூலிழையில் உயிர்தப்பினர் பயணிகள்

காபூல், ஜன.10

ஆப்கனிலிருந்து பாகிஸ்தானை நோக்கிச் செல்லவிருந்த விமானத்தின் மீது நேற்று முன்தினம் ரொக்கெற் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 44 பயணிகளுடன் பயணித்த விமானம் அதிர்ஷ்டவசமாக தாக்குதலில் இருந்து தப்பிக் கொண்டது.




ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலிலிருந்து பாகிஸ்தானின் பலுசிஸ்தான் உள்ள குவெட்டா நகருக்கு 44 பயணிகள் கொண்ட விமானம் நேற்று புறப்பட்டது.

காபூல் விமான நிலையத்திலிருந்து புறப்பட தயாரானதும் விமானத்தின் மீது ரொக்கெற் தாக்குதலை தீவிரவாதிகள் நடத்தினர். அதிர்ஷ்டவசமாக விமானத்துக்கு பாதிப்பு ஏற்படவில்லை.

அதனையடுத்து ஒரு மணிநேரம் தாமதித்தே விமானம் புறப்பட்டு சென்றது.

## ஊடகங்கள் மீதான கட்டுபாடுகள் தொடரும்

### சீன அரசு உறுதிபடத் தெரிவிப்பு

பீஜிங், ஜன.10

ஊடக அமைப்புகள் மீதான கட்டுப்பாடுகள் தொடரும் என்றுசீனாவில் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சி உறுதிபடத் தெரிவித்துள்ளது.

சீனாவின் குவாங்கு நகரில் இருந்து வெளிவரும் 'சவுத்தேர்ன் வீக்லி' பத்திரிகையைச் சேர்ந்தவர்கள் கம்யூனிஸ்ட் கட்சி அதிகாரிகளின் குறுக்கீடுகளில் இருந்து ஊடகங்களுக்குச் சுதந்திரம் வழங்க வேண்டும் என்று கோரி கடந்த திங்கட்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்தியிருந்தனர்.

'சவுத்தேர்ன் வீக்லி' பத்திரிகையின் புத்தாண்டுப் பதிப்பில் ஆசிரியர் கள் எழுதிய விமர்சனங்கள் நிறைந்த தலையங்கத்தை குவாங்டாங் மாகாணத்தின் ஒளிபரப்புத் துறைத் தலைவர் திருத்தி, அரசுக்கு ஆதரவாக மாற்றி வெளியிட்டதாக ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் குற்றஞ்சுமத்தியிருந்தனர்.

இந்த விவகாரம் குறித்து ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் செய்தி விளம்பரத்துறை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில்,

''பத்திரிகையாளர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் பின்னணியில், சீனாவுக்கு எதிரான வெளிநாட்டுச் சக்திகளின் தலையீடு உள்ளது. ஒளிபரப்புத் துறைத் தலைவரைக் கண்டித்து நடத்தப்படவில்லை. 'சவுத்தேர்ன் வீக்லி' பத்திரிகைக்கு இணையதளம் மூலம் செய்தியாளர்கள் ஆதரவு தெரிவித்து வருகின்றனர். இதனை உரிய அதிகாரிகள் தடுக்க வேண்டும்.

அரசின் அதிகாரப்பூர்வமான பத்திரிகையான 'குளோபல் டைம்ஸ்' செய்தித்தாளில் வெளியான, ஊடகங்களுக்கு சுதந்திரத்தை மறுப்பதை வலியுறுத்தும் செய்தியை அனைத்துப் பத்திரிகைகளும் வெளியிட வேண்டும். சீன ஊடகங்கள் மீது கம்யூனிஸ்ட் கட்சிக்கு முழுக் கட்டுப்பாடு உள்ளது. இந்த அடிப்படைக் கொள்கையை அசைக்க முடியாது. இதில் எந்த மாற்றத்தையும் செய்ய முடியாது''-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாய்கள் குதறியதில் நான்கு பேர் சாவு

### மெக்ஸிக்கோவில் பயங்கரம்

மெக்ஸிக்கோ, ஜன.10

மெக்ஸிக்கோவில் நாய்கள் கடித்ததில் குழந்தை, தாய் உள்பட 4 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

மத்திய அமெரிக்க நாடான மெக்ஸிக்கோவின் லா ஈஸ்டிரல்லா மலை பகுதியில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு வனப் பகுதி உள்ளது. இங்கு ஆள் நடமாட்டம் இல்லாத இடத்தில் புதர் நடுவே கடந்த வாரம் ஒரு பெண் மற்றும் அவரது குழந்தையின் உடல்கள் மீட்கப்பட்டன. அவர்களது உடல் முழுவதும் காயங்கள் இருந்தன.

அதே காட்டின் வேறொரு பகுதியில் கடந்த 5ஆம் தேதி ஓர் இளைஞர் மற்றும் இளம்பெண்ணின் உடல்கள் மீட்கப்பட்டன. அவர்களது உடலிலும் காயங்கள் இருந்தன.

இதையடுத்து விசாரணையை பொலிஸார் தீவிரப்படுத்தினர். அதையடுத்து மலைபகுதியில் குகை மற்றும் பாறைகளின் நடுவே வாழும் நாய்களே இவர்களைத் தாக்கியுள்ளமை தெரிய வந்துள்ளது.

அதைத் தொடர்ந்து பொலிஸார் மேற்கொண்ட தேடுதலில் 8 குட்டிகள் உள்பட 25 நாய்கள் பிடிக்கப்பட்டன.

## கைதிகளுக்கு அமெரிக்க நிறுவனம் நட்டஈடு

வோஷிங்டன், ஜன.10

ஈராக்கின் - அபு கரைப் சிறையில் இருந்த கைதிகளுக்கு அமெரிக்காவின் பாதுகாப்பு நிறுவகம் ஒன்று 5 மில்லியன் டொலரை நட்ட ஈடாக வழங்கியுள்ளது.

2004ஆம் ஆண்டு இந்த சிறைக் கைதிகளை அமெரிக்க இராணுவத்தினர் துன்புறுத்தலுக்கு உட்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

அந்த குற்றச்சாட் நிரூபிக்கப்பட்ட நிலையில் குறித்த நட்ட ஈடு வழங்கப்பட்டுள்ளது.

இந்த சிறையில் இருந்து 71 கைதிகளுக்கு இந்த நட்ட ஈடு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இதே போன்ற குற்றச்சாட்டின் கீழ், அமெரிக்காவின் மற்றுமொரு பாதுகாப்பு நிறுவகத்தின் மீதான வழக்கு தொடர்ந்து இடம்பெற்று வருகிறன்றமை குறிப்பிடத் தக்கது.

## பதவியேற்பதற்கு வரார் வெனிசுவேலா ஜனாதிபதி

கராக்கஸ், ஜன.10

வெனிசுவேலா ஜனாதிபதி ஹியூகோ சாவேஸ் புதிய பதவிக்காலத்திற்கான பதவிப் பிரமாண நிகழ்வில் கலந்து கொள்ள மாட்டார் என உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கியூபாவில் புற்றுநோய்கான சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்ட நிலையில், கடுமையான நுரையீரல் தொற்றினால் அவர் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

இதேவேளை, பதவிப் பிரமாண நிகழ்வில் சாவேஸ் கலந்துகொள்ளாத பட்சத்தில் எவ்வாறான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென அறிவிக்குமாறு உயர் நீதிமன்றத்தை அந்த நாட்டு எதிர்க்கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.

சாவேஸ் பதவிப் பிரமாணம் செய்யாத பட்சத்தில் அரசியல் அமைப்பின் பிரகாரம் தேசிய சட்டசபை சபாநாயகர் தேர்தல் காலம் வரை இடைக்கால ஜனாதிபதியாக செயற்பட வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் ஹென்றிக்கே கப்ரீலஸ் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், பதவிப் பிரமாணம் ஒரு சம்பிரதாய நிகழ்வு மாத்திரமே என அரசு வலியுறுத்தியுள்ளதாக அந்த நாட்டுத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

## நாட்டுக்காகத் தியாகம் செய்கின்றனர் மக்கள்

### கிரேக்கப் பிரதமர் புகழாரம்

நாட்டின் நிதிநிலையைச் சரிசெய்ய மக்கள் பல தியாகங்களைச் செய்கின்றனர். அவர்களின் நாட்டுப்பற்றை பாராட்டுகிறேன் என்று தெரிவித்துள்ளார் கிரேக்கப் பிரதமர் அந்தோனிஸ் சமராஸ்.

வர்த்தகம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்றில் வைத்தே பிரதமர் சமராஸ், ஜேர்மன் பிரதமர் ஏஞ்சலா மெர்கெலிடம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கிரீஸில் அரசு எடுத்து வரும் அனைத்து பொருளாதார நடவடிக்கைகளையும் ஜேர்மனியப் பிரதமருக்கு விளக் கினார் சமராஸ்.

''கிறீஸில் பலர் வேலையில்லாமல் சிரமப்படுகின்றனர். குறிப்பாக இளைஞர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வருகிறது. தற்போது கிரேக்கம் சரியான பாதையில் செல்கிறது-என்று குறிப்பிட்டார்.

## 31ஆவது பிறந்தநாளை கொண்டாடினார் கேத்

லண்டன், ஜன.10

பிரிட்டிஷ் இளவரசி கேத் மிடில்டன் தன்னுடைய 31 ஆவது பிறந்தநாளை நேற்றுக் கொண்டாடினார்.

மைக்கேல் மற்றும் கரோல் மிடில்டன் தம்பதியினருக்கு கடந்த 1982ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 9ஆம் திகதி கேத் மிடில்டன் பிறந்தார்.

இந்தநிலையில் நேற்று தனது 31வது பிறந்தநாளை கொண்டாடினார். கடந்த 2011ஆம் ஆண்டு ஏப்ரல் 29ஆம் திகதி, தனது காதலரான இளவரசர் வில்லியமை மணந்து கொண்டார். தற்போது கேத் மிடில்டன் கர்ப்பமாக இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.



# கட்டுக்கடங்காமல் பரவும் காட்டுத் தீ; தீயணைப்பு வீரர்கள் பெரும் போராட்டம்

மெல்பேர்ன், ஜன.10

ஆஸ்திரேலியாவில் ஏற்பட்ட மிக மோசமான காட்டுத் தீயை கட்டுப்படுத்த முடியாமல் தீயணைப்பு வீரர்கள் போராடி வருகின்றனர்.

ஆஸ்திரேலியாவில் [illegible] மிக மோசமான வெப்பநிலை காரணமாக காடுகள் தீப்பற்றி எரிகின்றன.

குறிப்பாக நியூ சவுத் வேல்ஸ் மாகாணத்தில் 130 இடங்களில் தீ எரிந்து கொண்டுள்ளது. இதில் 40 இடங்களில் தீ கட்டுக்கடங்காமல் உள்ளது.

பல இடங்களில் தீ பரவுவதற்கான [illegible] வாய்ப்பு அதி உச்ச நிலையில் உள்ளது. எனவே இவ்விடங்களில் தீயணைப்பு வீரர்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். மத்திய ஆஸ்திரேலியாவில் உள்ள ஆலிஸ் ஸ்பிரிங்குக்கு அருகேயிருந்த பிரபலமான சுற்றுலா விடுதி தீயில் எரிந்து சாம்பலாகியுள்ளது.

தீ காரணமாக நாட்டின் வனப் பகுதிகளுக்கு சுற்றுலா செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதே நேரம் நாட்டில் தொடர்ந்து அதிகரித்த வெப்பநிலையே இதற்கு காரணம் எனத் தெரிவித்துள்ள வானிலை ஆய்வு மையம் தொடர்ந்து அதிகரித்த வெப்பநிலையே காணப்படும் என்று தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதமர் பதவிக்குப் போட்டியிடார் பெர்லஸ்கோர்னி

ரோம், ஜன.10

இத்தாலியின் முன்னாள் பிரதமர் சில்வியோ பெர்லஸ் கோனி பிரதமர் பதவிக்கு போட்டியிட மாட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் பெர்லஸ்கோனியின் மக்கள் சுதந்திரக் கட்சியின் கூட் டணி கட்சியான நோர்த்தின் லீக்கின் தலைவர் ரொபர்ட் மரோனி இதனைத் தெரிவித் துள்ளார்.

தமது கட்சிக்கும் பெர்லஸ் கோனியின் கட்சிக்கும் இடை யில் தேர்தல் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டுள்ளது என் பதையும் அவர் நிராகரித்துள் ளார்.

இரண்டு கட்சிகளும் இணைந்து மத்திய வலது சாரி அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு எதிர்பார்த் துள்ள போதிலும், பிரதமர் வேட்பாளரை இதுவரை வெளியிடவில்லை.

இதேவேளை, நிதிய மைச்சராக தாம் செயற்பட லாம் என சில்வியோ பெர் லஸ்கோனி தெரிவித்துள் ளார்.

தேர்தலில் வெற்றிபெற் றால் மாத்திரமே பிரதமர் பதவிக்கான வேட்பாளர் குறித்து தீர்மானிக்கப்படும் என நேர்காணல் ஒன்றில் சில்வியோ பெரலஸ்கோனி இதற்கு முன்னர் கூறியிருந் தார்.

# 10 லட்சம் சிரிய மக்களுக்கு உணவு வழங்குவது இயலாது

## கைவிரிக்கிறது ஐ.நா. சபை



ஜெனிவா, ஜன.10

சிரியாவில் இடம்பெற்று வரும் தொடர் மோதல்களால் பாதிக்கப்பட்டுள்ள சுமார் 10 லட்சம் பேருக்கு உணவு விநி யோகிப்பது இயலாத காரிய மென என ஐ.நா. சபையின் உணவு அமைப்பு அறிவித் துள்ளது.

சிரியாவின் எல்லை புற நகரங்களை கிளர்ச்சியாளர் கள் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். முக்கிய நகரங்களில் இரவு பகலாக மோதல்கள் நடப்பதால் அத் தியாவசிய பொருள்களின் விநியோகம் நிறுத்தப்பட் டுள்ளது.

போதிய பாதுகாப்பு இன்மையால் ஐ.நா. தன் அலுவலர்களை அங்கிருந்து மீளப்பெற்றுள்ளது. பல மாதங்களாக நீடிக்கும் சண்டையில், 60 ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர். ஐந்து லட்சம் பேர், அண்டை நாடுகளில் தஞ்சம் புகுந்துள் ளனர்.

தொழிற்சாலைகளும், வர்த் தக நிறுவனங்களும், போரின் காரணமாக மூடப்பட்டிருப்ப தால், மக்கள் வருவாயின்றி, ஐ.நா. சார்பில் அளிக்கப் படும் உணவையே பயன் படுத்தி வருகின்றனர்.

இதேவேளை சிரியாவில் சேவையில் ஈடுபட்டுள்ள செஞ்சிலுவைச் சங்கத்தினர் 25 லட்சம் பேருக்கு உணவு தேவைப்படுவதாக தெரிவித் துள்ளனர்.

இது குறித்து ஐ.நா. உணவு அமைப்பின் தகவல் தொடர்பாளர் எலிசபெத் பிர்ஸ் குறிப்பிடுகையில், ''நாங்கள் பெருமுயற்சி எடுத்து 15 லட்சம் பேருக்கு உணவு வழங்க திட்டமிட் டுள்ளோம். ஆனால் எஞ்சி யுள்ள 10 லட்சம் பேருக்கு உணவு வழங்கமுடியாத நிலையில் நாம் உள்ளோம்'' என்று தெரி வித்துள்ளார்.

## 461 புதிய கிரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டன

நியூயோர்க், ஜன. 10

461 புதிய கிரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக நாசா விண்வெளி ஆராய்ச்சி மையம் தெரிவித்து உள்ளது. அமெரிக்காவின் நாசா விண் வெளி ஆய்வு மையம் கெப் லர் என்ற செயற்கை கோளை விண்ணில் செலுத்தியுள்ளது.

அதில் பொருத்தப்பட் டுள்ள சக்தி வாய்ந்த டெலஸ் கோப் கமெரா விண்வெளி யில் உள்ள புதிய கோள்கள் மற்றும் நட்சத்திரங்களை போட்டோ எடுத்து பூமிக்கு அனுப்பி வருகிறது.

கடந்த 2009ஆம் ஆண்டு மே மாதம் முதல் 2011 மார்ச் மாதம் வரை 461 புதிய கிரகங்களை கெப்லர் கண்டு பிடித்துள்ளது. இவற்றில் 4 கிரகங்கள் பூமியைவிட 2 மடங்கு சிறியதாக உள்ளன.

இவை சூரிய மண்டலத் துக்குள் சுற்றி வருகின்றன. இவற்றின் மேல் பரப்பில் தீரவ வடிவில் தண்ணீர் இருப் பதும் கண்டறியப்பட்டுள் ளது. எனவே சமீபத்தில் கண் டறியப்பட்டுள்ள கிரகங்கள் உயிரினங்கள் வாழ தகுதியு டையவைகளாகவே உள் ளன.

இவை தவிர 1 லட்சத்து 50 ஆயிரம் புதிய நட்சத் திரங்களையும் கெப்லர் செயற்கை கோள் கண்டு பிடித்து போட்டோ எடுத்துள் ளது. இவை அதிக வெளிச்சத் துடன் திகழ்கின்றன.

## 8 ஆவது மாடியில் இருந்து வீழ்ந்த குழந்தை பிழைத்தது



உக்ரைனில் 8வது மாடி யிலிருந்து கீழே விழுந்த 3 வயதுக் குழந்தை அதிர்ஷ்ட வசமாக உயிர் பிழைத்தது.

உக்ரைனில் இந்த ஆண்டு மிக அதிகமான அளவு பனிப்பொழிந்துள்ளது. இதன் காரணமாக எங்கு பார்த்தா லும் பனிக்கட்டிகள் குவிந்து கிடக்கின்றன.

இந்நிலையில் தாய் வீட்டு வேலை செய்து கொண்டிருந்த போது, 8வது மாடியிலிருந்து 3 வயது குழந்தை தவறி கீழே விழுந்தது.

எனினும் ஜன்னலுக்கு கீழே அதிகளவு பனி குவிந்து இருந்த காரணத்தி னால், அதிர்ஷ்டவசமாக உயிர் பிழைத்தது.

உடனடியாக அக்குழந் தையை மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர், பரி சோதனை செய்த மருத்து வர்கள் நல்ல உடல்நலத்துடன் இருப்பதாக தெரிவித்தனர்.




சிங்கப்பூர் சபாநாயகராக இந்திய வம்சாவளிப் பெண்

சிங்கப்பூர், ஜன. 10

சிங்கப்பூரின்புதிய சபாநாயகராக இந்திய வம்சாவளியான ஹலிமா ஜோக்கப் நிய மிக்கப்பட்டுள்ளார்.

சிங்கப்பூர் நாடா ளுமன்ற சபாநாயக ராக இருந்தவர் மைல் கேல் போல்மர். அவர் மீது சுமத்தப்பட்ட பாலியல் குற்றச்சாட் டைத் தொடர்ந்து கடந்த மாதம் பதவி விலகினார். அத னைத் தொடர்ந்து அமைச்ச ராக இருக் கும் ஹாலிமா ஜோக் கப் (58) என்பவரை பிரதமர் லீ சின் அறி வித்தார்.

**Expanding American Company**

வவுனியா, கிளிநொச்சி, அநுராதபுரம் ஆகிய புதிய கிளைகளுக்கு 50 பேர் (ஆண்கள்) விரைவாகசேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். பயிற்சியின் போது 3-6 மாதத்திற்கு 8000/=வரையும், 15000-20,000/= கூடிய வருமானமும்,பயிற்சியின் பின்னர் 40,000/= இற்கு மேல் பெற்றுக் கொள்ள முடியும்.
குறைந்த தகுதிகள் O/L,A/L.
தங்குமிட வசதி இலவசமாக ஒழுங்குசெய்துகொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு:077 9775614.
இல.37/10,3 ஆம் ஒழுங்கை பட்டாணிச்சூர், மன்னார் வீதி,வவுனியா
(27608) (6.7.4)

**HND in Pharmacy**

Be a Pharmacist in 2 Years
* Work in Government/Private Sector
* Run your own Pharmacy
Lectures by MBBS Doctors !
Entry Req: 3 Passes in A/L -Bio/Maths
Admissions are open now !
K.U Education
Pioneers in Medical Studies
[ Small Group Classes/Internship will be arranged ]
**Knowledge Universe**
(லாவா வைத்தியசாலை மேல்மாடி)
இல 75,கோவில் வீதி,யாழ்ப்பாணம்.
Tel :0777302882 Web :www.kugroup.info

**அறைகள் வாடகைக்கு**

21/2, கலாசாலை வீதி, திருநெல் வேலியில் அறைகள் வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 6090 837.
(28118)(6.7.4)

**வீடு விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், கொழும்புத்துறை, புங்கங்குளம் வீதியில் அமைந்துள்ள நி.பர.1 குளி 10¾ கொண்ட காணிக்குள் அமைந்துள்ள மாடி வீடு உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 309 8388
(28041)(6.7.4)

**Shalini Herbal Beauty Care**



மணப் பெண் அலங்காரங்களுக் கான வகுப்புக்கள் மற்றும் மணப் பெண் அலங்காரங்களுக்கு
25%-15% விஷேட கழிவுகளும் மற்றும் தரமான சுவையான Rich Cake Orderக்கு செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு:
0774984568, 0752672734.
63 1/1,
1ஆம் குறுக்குத் தெரு, வவுனியா.
(27607) (6.7.4)

**காணி விற்பனைக்கு**

உடையார் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவிலில் உள்ள கிணற்றுடன் கூடிய 5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 1133375,
0041 772910427.
(27566) (6.7.4)

**வீடு வாடகைக்குத் தேவை**

நல்லூர், திருநெல்வேலி, கந்தர்மடம், அல்லது யாழ். மாநகர சபை எல்லைக்குள் வசதியான வீடு வாடகைக்குத் தேவை.
வாடகை, முற்பண விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும்
0718 692 692

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதிக்க நினையுங்கள்

(17)

ஹோட்டல் நிர்வாகி சொன்னார்; ''சென்ற மாதம் உங்களுடைய மகன் வந்து இதே ஹோட்டலில் தங்கியிருந்தார். அவர் இதை விட சொகுசான அறையில் தங்கியிருந்தார். அதனால் தான் கேட்டேன்''.

போர்ட் சிரித்துக் கொண்டே சொன்னார்; அவன் கோடீஸ்வரனின் பிள்ளை. அவன் அப்படித் தான் தங்குவான். நான் ஏழையின் மகன். எனக்கு இந்த அறை போதும்,

இது கதையல்ல. உண்மையாகவே நடந்த நிகழ்ச்சி. ஏழையாக இருந்து உழைப்பினால் உயர்ந்து கோடீஸ்வரரானவர் ஹென்றி ஃபோர்ட். ஆனால், அவருடைய மகன் செழிப்பான செல்வக் குடும்பத்தில் பிறந்தவர். பணத்தின் அருமை போர்ட்டுக்குத் தெரிந்த மாதிரி அவருடைய மகனுக்குத் தெரிய நியாயமில்லை.

இந்தச் சம்பவம் சுவையான சம்பவமாகத் தோன்றினாலும் வாழ்க்கையின் மிகப் பெரிய உண்மையினை எடுத்துக் காட்டுகிறது. பணம் சம்பாதிக்க வேண்டுமென்று ஆசைப்பட்டார் ஃபோர்ட். சம்பாதித்துக் குபேரன் ஆனார். மகனுடைய கதை வேறு. தகப்பனார் சம்பாதித்த பணத்தை நன்றாக அனுபவிக்க வேண்டும் என்பது அவனுடைய வாழ்க்கை நோக்கமாக இருந்தது. ஃபோர்ட்டின் மகனைக் குறை சொல்ல முடியாது. நிலைக்குத் தகுந்த நினைப்பு மனிதர்களுக்கு இருப்பது இயற்கை.

ஃபோர்ட் தன்னுடைய மகனுக்குச் சம்பாதித்து வைத்ததைப் போல, எல்லாப் பெற்றோர்களும் தங்களுடைய பிள்ளைகளுக்கு சம்பாதித்து வைத்திருப்பார்கள் என்று சொல்ல முடியாது. நம்மில் பலர் ஏழ்மையில் இருக்கக் கூடும். அல்லது நடுத்தர வர்க்கத்தினராக இருக்கக்கூடும். இருப்பதே போதும் என்கிற நினைப்பில் நாம் இருந்தால், என்றைக்குமே உயர முடியாது. சாதனை புரிய வேண்டுமென்று ஆசைப்படுங்கள். நிறைய பணம் சம்பாதிப்பதும் ஒரு சாதனைதான் என்பதை மறந்து விடாதீர்கள்.

பணத்தின் மீது எனக்கு ஆசையில்லை என்று சொல்கின்றவன் ஒன்று ஏமாளியாக இருக்க வேண்டும், அல்லது மோசக்காரனாக இருக்க வேண்டும். (உலகை வெறுத்து துறவியானவர்களை இதில் சேர்க்க வேண்டாம்). வாழ்க்கைக்குப் பணம் தேவை. எந்த அளவுக்கு அதிகமாக பணம் இருக்கிறதோ அந்த அளவுக்கு வாழ்க்கை வசதிகளும் கூடி வருகின்றன. வசதிகளுக்காக மட்டும் பணம் தேவை என்று கருத வேண்டாம். வாழ்க்கையில் நீங்கள் முன்னேறுவதற்கு பணம் தேவையாக இருக்கிறது.

பத்து ரூபாவை நூறு ரூபா ஆக்குவது கஷ்டம். பத்து லட்சம் ரூபாவை நூறு லட்சம் ரூபாவாக ஆக்குவது சுலபம். பணம் பணத்தைக் குட்டி போடுகிறது. முதலீடு பெரியதாக இருக்கும் போது இலாபம் அதிகமாக இருக்கிறது. முதலீடு குறைவாக இருந்தாலும், அதிகமாக இருந்தாலும் உழைப்பு ஒன்றுதான்.

வாழ்க்கையில் நீங்கள் எந்தக் காரியத்தைச் செய்ய விரும்பினாலும் அதற்குப் பணம் தேவையாக இருக்கிறது. அப்படியானால் பணம் இல்லாதவர்களுக்கு வாழ்க்கையே இல்லையா என்கிற கேள்வி எழலாம். உங்களிடம் பணமில்லையா? பணமில்லையே என்று கவலைப்பட்டுக் கொண்டிருக்காதீர்கள். பணத்தைத் தேடுகின்ற வழியை யோசியுங்கள். ஓரளவுக்கு உங்களிடம் பணம் சேர்ந்துவிட்டால், உங்களுடைய முயற்சிகள் சுலபமாகி விடும்.

இதற்கு நீங்கள் செய்ய வேண்டிய காரியம் ஒன்று இருக்கிறது. பணம் சம்பாதிப்பதை, பணத்தைச் சேமிப்பதை, ஒரு சாதனை என்று எண்ணத் தொடங்குங்கள். இந்த எண்ணம் உங்களுக்கு ஏற்பட்டு விட்டால், வழிகள் தானாகவே தோன்ற ஆரம்பிக்கும்.

உழைக்காமல் செல்வம் கிடைப்பதில்லை. அதே சமயம் உங்களுடைய உழைப்பு பணம் சம்பாதிப்பதை நோக்கமாகக் கொண்டு அமைய வேண்டும். ஏழ்மையில் இன்பம் என்பார்கள்; அதை நம்பாதீர்கள்; ஏழ்மை துன்பமாகும். உங்களுடைய திறமைகள் வெளிப்படாமல் தடை செய்யக்கூடிய ஏழ்மையில் எந்த விதமான மகத்துவமும் இல்லை.

வாழ்க்கையில் சாதனை புரிய வேண்டும் என்கிற எண்ணம் சாதனை புரிவதற்கு உங்களைத் தூண்டும். எண்ணங்கள் தான் நம்மை செயல்பட வைக்கின்றன. முதலில் சாதனைபுரிய வேண்டும் என்று ஆசைப்படுங்கள். உங்கள் விருப்பத்துக்கு ஏற்ற சாதனையாக அது இருக்கலாம். உங்களுடைய சூழ்நிலைக்கேற்ற சாதனையாக நீங்கள் அமைத்துக் கொள்வதிலும் தவறில்லை. ஒரு குறிப்பிட்ட சாதனையைப் புரிவது என்று நீங்கள் தீர்மானித்துக் கொண்டால், சங்கற்பித்துக் கொண்டால் அதைச் செய்கின்ற நோக்கம் தானாகவே உங்களுக்குத் தோன்றி விடும்.

பெரிய மகான்களும், மனோதத்துவ நிபுணர்களும் இந்த உண்மையினை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட சாதனையை மனதில் பதித்துக் கொண்ட பின் அதைப் பற்றியே எப்போதும் சிந்தியுங்கள். பின்னர் அதை நிகழ்த்துவதற்கான நிகழ்ச்சிகளில் ஈடுபடுங்கள்.

கம்பியின் துணையில்லாமல் செய்திகளை ஓரிடத்தில் இருந்து இன்னோர் இடத்துக்கு அனுப்ப முடியும் என்று மார்க்கோனி நம்பினார். இந்த நம்பிக்கை ரேடியோ என்கிற சாதனையாக உருப்பெற்றது. ஒலி அலைகளை பதிவு செய்ய முடியும் என்று எடிசன் நம்பினார். அது கிராமஃபோன் என்கிற கருவியாகவும், இசைத் தட்டுகளாகவும் உருப்பெற்றது.

முயன்றால் பறக்க முடியும் என்று ரைட் சகோதரர்கள் நம்பினார்கள். விமானம் உருவாயிற்று.

ஒரு ஸ்ரூடியோவை உருவாக்கி மக்கள் இரசனைக்கேற்ற படங்களைத் தயாரிக்க முடியும் என்று வாசன் நம்பினார். பிரசித்தி பெற்ற ஜெமினி ஸ்ரூடியோவை அவரால் உருவாக்க முடிந்தது.

புகழ்பெற்ற எழுத்தாளராக தன்னால் உருவாக முடியும் என்று பெர்னாட்ஷா நம்பினார். உலகப் புகழ் பெற்ற எழுத்தாளரானார்.

பி.சி.கணேசன் (தொடரும்)

# தோல்வி வெற்றிக்குத் தூண்டுகோல் அதனைக் கண்டு நாம் தளரக்கூடாது

## கரவெட்டி கோட்டக் கல்விப் பணிப்பாளர் சொல்கிறார்

வடமராட்சி, ஜன.10

ஒரு பாடசாலையின் வளர்ச்சி அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பாடசாலை மாணவர் சங்கத்தினர் ஆகியோரின் பங்களிப்பில் தங்கியுள்ளது. அவர்களின் நேர்த்தியான பங்களிப்பு பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவியாக உள்ளது.

பரிசளிப்பு விழா கல்விச் செயற்பாடுகளாலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளாலும், வெற்றியீட்டிய மாணவர்களை கௌரவிப்பதற்கும், வெற்றியடையாத மாணவர்களை ஊக்குவிப்பதற்கும் நடத்தப்படுகின்றது.

தோல்வி வெற்றிக்குத் தூண்டுகோலாக உள்ளது. எனவே தோல்வியைக் கண்டு மனம் தளரக் கூடாது. துணிச்சலைத் துணையாகக் கொண்டவர்களுக்கு வெற்றி நிச்சயம்.

இவ்வாறு தெரிவித்தார் கரவெட்டி கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.நற்குணலிங்கம்.

மணியகாரன் தோட்டம் அ.த.க. பாடசாலையின் பரிசளிப்பு விழா அண்மையில் இடம்பெற்றது.

அந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டாவாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கல்வி தொடர்பாக சமூகத்தில் ஏற்பட்டுள்ள விழிப்புணர்வுக்கு எதிர்மாறான சமூகச் சூழல் சமகாலத்தில் காணப்படுகிறது. இந்த விடயம் தொடர்பாக பெற்றோர், ஆசிரியர்கள் விழிப்புடன் செயற்பட வேண்டும். கற்றலை நாளை மேற்கொள்வோம் என நினைக்காது இன்றே செய் அதனை நன்றே செய் என்பதற்கு அமைய ஈடுபட வேண்டும்.

கற்றலுக்கு பாடசாலைச் சூழல் மட்டுமன்றி வீட்டுச் சூழலும் ஏற்றதாகக் காணப்பட வேண்டும். வீட்டில் கற்றல் சூழல் பொருத்தமற்றதாயின் அதன் பிரதிபலிப்பை மாணவர்களது தீய நடத்தைக் கோலங்கள் மூலம் அறிந்து கொள்ள முடியும். அதுவும் ஆரம்ப பாடசாலை மாணவர்கள் மத்தியில் பெற்றோரின் அக்கறை, கவனம் மிகவும் ஈர்க்கப்பட வேண்டியதாகும்.

பிள்ளை - பெற்றோர் உறவு ஆரோக்கியமானதாக காணப்பட வேண்டும்.

மாணவர்கள் தமது திறன்களையும், தேர்ச்சிகளையும் வெளிப்படுத்தக்கூடிய சந்தர்ப்பங்கள் பாடசாலையில் வழங்கப்பட வேண்டும். பாடசாலையில் உள்ள வளங்களின் உச்சப் பயன்பாட்டின் மூலம் திறன்கள் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். வளங்கள் இல்லை என்பதற்காக மாணவர்கள் மழுங்கடிக்கப்படக் கூடாது.

மாணவர்கள் பாடசாலை வாழ்வை முடித்துச் செல்லும் போது ஆளுமையுள்ள, ஆரோக்கியமான, பண்புள்ள, சமூகத்துக்கு இசைவாக்கம் பெறக்கூடிய, பயனுள்ள, எதிர்கால சவால்களுக்கு முகங்கொடுக்கக் கூடிய சிறந்த பிரஜைகளாக அவர்களை சமூகத்துக்கு கொடுக்கும் வண்ணம் பாடசாலைகள் தொழிற்பட வேண்டும். ஆசிரியர்களது அர்ப்பணிப்பான சேவை, 'துடிப்பான சமுதாயம் உருவாக வழிசமைக்கும். - என்றார்.

(ம-253)



கைதடி வடக்கு செல்வா சனசமூக நிலையம் பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு அண்மையில் காலணிகளை வழங்கியது. கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக் கழகத்தின் ஆதரவுடன் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ம-288)

# நிர்வாகிகள் தெரிவு

வடமராட்சி, ஜன.10

தும்பளை மேற்கு சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. இதன்போது பின்வருவோர் புதிய உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் இ.அன்ரனி, உபதலைவர் வ.சந்திரசேகரம் செயலாளர் வ.பாலச்சந்திரன், பொருளாளர் ம.மாலதி,

நிர்வாக சபை உறுப்பினர்களாக செ.மேரி மார்கிரெட், பா.விஜயகுமாரி, மா.கண்ணதாசன் ஆகியோர் தெரிவானார்கள்.

(ம-8)

# மொழி எதனையும் புரியாதவர்களையும் ஆட்கொள்ளும் திறன் கொண்டது இசை

## மன்னார் தமிழ்ப்பணி மன்றத் தலைவர் தமிழ்நேசன்

கொழும்புத்துறை, ஜன.10

உலகில் 6000 இற்கும் மேற்பட்ட மொழிகள் பேசப்படுகின்றன. அவையனைத்தும் எல்லோருக்கும் தெரியப்போவதுமில்லை. பேசினால் புரியப் போவதுமில்லை. ஆனால் எல்லோருக்கும் பொது மொழியான இசை, மொழி புரியாதவர்களையும் ஆட்கொள்ளவல்லது. இவ்வாறான சமத்துவம் மிக்க இசையின் பெருமையை ''செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே'' என்று பாரதி முழங்கினார்

தேன் என்பது நாவின் சுவைக்குரியது. அது காதின் சுவையாக கூறப்பட்டமை இசையின் இனிமையையே காட்டி நிற்கிறது.

இவ்வாறு தெரிவித்தார் மன்னார் தமிழ்ப் பணி மன்றத்தலைவர் அருட்திரு தமிழ்நேசன் அடிகள்.

அருட்திரு செ.அன்புராசா அடிகளின் உருவாக்கத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை திருமறைக் கலாமன்ற கலைத்தூது மண்டபத்தில் வெளியிடப்பட்ட உந்தன் நினைவிலே பாடல் இறுவட்டு வெளியீட்டு விழாவில் சிறப்புரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்தார்.

திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குநர் யோன்சன் ராஜ்குமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தமிழ்நேசன் அடிகள் தொடர்ந்து தெரிவித்ததாவது; அறிவுசார் உலகில் மதிக்கப்படும் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் தமிழில் தான் அதிக பக்தி இலக்கியங்கள் உள்ளன, தமிழால் சமயங்கள் வளர்ந்தன, சமயங்களால் தமிழ் மொழி வளர்ந்தது என்று கூறியுள்ளார்.

தமிழருடைய பக்திப் பாரம்பரியம் இரு வகைப்படும். தமிழின் பக்திப் பாரம்பரியம், கிறிஸ்தவத்தின் பக்திப் பாரம்பரியம் ஆகிய இரண்டும் தமிழருடைய பாரம்பரியங்களே.

இவ்வாறான பண்பாட்டுப் பாரம்பரியங்கள் ஊடாகப் புனையப்படும் பாடல்கள் இறுவட்டுகளில் வெளிவர வேண்டும். அதற்கு இந்த இறுவட்டு ஓர் எடுத்துக் காட்டாகும்.

நெப்போலியன் கூறியது போன்று முதுகுக்குப் பின்னால் செய்யக் கூடியது முதுகைத் தட்டிக்கொடுப்பது ஒன்றுதான். ஆனால் திறமை வாய்ந்தவர்களை இனங்கண்டு வெளிக்கொணர நாம் தவறி விடுகிறோம். இது திருத்தப்பட வேண்டும்.-என்றார்.

இந்த நிகழ்வில் ஆசியுரை வழங்கிய அமலமரித்தியாகிகள் சபையின் மாகாண முதல்வர் அருட்திரு ம.போல்நட்சத்திரம் அடிகள் தமதுரையில்; உண்மைவழி, அறநெறி, மனிதநேயம் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் இன்றைய உலகியலில் மனிதன் பல்வேறு சவால்களில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறான்.

நாளும் பொழுதும் நடைபிணங்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறான். அவனது நல்வாழ்வுக்கான வாசல்களைக்காட்டி சொல்ல வேண்டியதை சிறந்தமுறையில் பிரதிபலிப்பதில் ஊடகங்களின் பணி காத்திரமானது.

காலத்தின் தேவைக்கு ஏற்ப சூழமைவுக்கு இசைவான இறை போதனைகளை வடித்தெடுத்து மக்களின் மனங்களில் பதிய வைக்க ஊடகம் சார் வெளியீடுகள் பெரிதும் உதவுகின்றன. இவ்வாறான பணிகள் ஊக்குவிக்கப்படவேண்டும்.- என்றார். (ம-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ மூனாத்தானா

# திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகள்.....

**நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலையின் 39 ஆவது ஆண்டு நினைவு தினம் இன்றாகும்.**

ஈழத்தமிழினம் கடந்த அறுபத்தைந்து வருட காலமாக தமது அடிப்படை உரிமைகள் கோரி அகிம்சை வழியிலும், ஆயுத வழியிலும் போராட்டங்களை முன்னெடுத்து வந்துள்ளனர். ஆனால் இன்றுவரையும் ஈழத் தமிழினத்தை அழிப்பதற்குக் கங்கணம் கட்டிக் கொண்டு இலங்கையில் ஆட்சிக்கு வந்த அரசுகள் திட்டமிட்டே தமது கொடூர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவது வரலாறாகிவிட்டது.

1954 ஆம் ஆண்டு முதன் முதலாக சிங்கள அரசு யாழ்ப்பாணத்தில் தமிழர்களை தாக்கத் தொடங்கியதிலிருந்து தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைகளையும் படுகொலைகளையும் படிப்படியாகத் தொடர்ந்து செய்து வந்துள்ளது. 1956 ஆம் ஆண்டு நாடாளுமன்ற முன்றிலில் தமிழ்த் தலைவர்கள் தனிச் சிங்களச் சட்டத்தை எதிர்த்து அமைதி வழிப் போராட்டம் நடத்திய வேளையில் அப்போதைய பிரதமராக இருந்த எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்காவின் அனுசரணையுடன் சிங்களக் காடையர்கள் தமிழ்த் தலைவர்கள் தொண்டர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டு போராட்டத்தை நசுக்கினர். கொழும்பு நகரில் தமிழர்கள் குண்டர்களால் தாக்கப்பட்டனர். சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்க வேண்டிய படையினர் தமிழர் தாக்கப்படுவதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்.

1957 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் நாள் சுதந்திர தினத்தை கடைகளை அடைத்து கறுப்புக் கொடிகளைப் பறக்கவிட்டுத் துக்க தினமாக அனுஷ்டிக்குமாறு தமிழரசுக்கட்சி தமிழ் மக்களிடம் வேண்டுகோள் விடுத்திருந்தது. அன்றைய தினம் திருகோணமலையில் சந்தைக்கும் பஸ் நிலையத்துக்கும் அண்மையில் அமைந்திருக்கின்ற மணிக்கூட்டுக் கோபுரத்தின் மேல் ஏறி கறுப்புக் கொடியைக் கட்டுவதற்கு நடராசன் என்ற தமிழ் இளைஞர் முயன்ற வேளை, மறைந்து நின்ற சிங்களவர் ஒருவரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த தமிழர் மீதான படுகொலைகள் ஆரம்பமாயின.

தமிழர் போராட்டத்தை ஆரம்ப காலத்தில் அடியோடு நசுக்கிவிட அப்போதைய பிரதமரான எஸ். டபிள்யூ.ஆர்.டி.. பண்டாரநாயக்காவும் இனவாத தரப்பினரும் மிகத் தீவிரமாக முயன்றனர். இதன் முதற்கட்டமாக தென்னிலங்கையில் தமிழர்கள் மீது வன்முறைகள் அரசினாலும் குண்டர்களாலும் மிகமோசமாகக் கட்டவிழ்த்து விடப்பட்டன. 1958 ஆம்ஆண்டு மே மாதம் இனக் கலவரம் முதன் முதலாக நடைபெற்று முடிந்தது. நூற்றுக்கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். பாலியல் வன்முறை, தீ வைப்பு, கொலை, கொள்ளை, உயிரோடு எரித்தல் போன்ற கொடூரச் சம்பவங்கள் படையினரின் ஆதரவோடு நடந்து முடிந்தன.

1974 ஆம் ஆண்டு உலகத் தமிழராய்ச்சி மாநாட்டினை கோலாகலமாக நடத்துவதற்கு தமிழறிஞர்கள், ஆர்வலர்கள் முடிவெசெய்திருந்தனர். யாழ்ப்பாணத் தலைநகரில் நடத்துவதே மிகவும் பொருத்தமென முடிவு செய்யப்பட்டு அது குறித்து அப்போதைய பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான அரசுக்கு மாநாட்டு குழுவினரால் அறிவிக்கப்பட்டது. ஆனால், யாழ்ப்பாணத்தில் மாநாடு நடத்துவதற்கு பாதுகாப்பு இல்லை எனவும் இதனால் ஒத்துழைப்பும் நல்க முடியாது எனவும் அரசு சார்பில் தெரிவிக்கப்பட்ட போதும் மாநாட்டுக் குழுவினர் யாழ்ப்பாணத்திலேயே மாநாட்டை நடத்துவதென்ற முடிவிலிருந்து மாறாது மாநாட்டுக்கான ஒழுங்குகளை நிகழ்ச்சிகளை திட்டமிட்டிருந்தனர்.

ஆனாலும் அப்போது யாழ். மாநகர முதல்வராகவும் யாழ். மாவட்டத்தின் சுதந்திரக் கட்சியின் அமைப்பாளராகவும் இருந்தவரான அல்பிரட் துரையப்பா யாழ்ப்பாணத்தில் மாநாடு நடப்பதை விரும்பாத ஒரு பிருகிருதியாக இருந்தார். மாநாட்டுக் குழுவினருக்கு ஒத்துழைக்க மறுத்தார். திறந்த வெளி அரங்கத்தில் தமிழாராய்ச்சி மாநாடு நடத்துவதற்கு அனுமதி கேட்டிருந்தும் அதனைக் கொடுக்க அனுமதி மறுத்திருந்தார். அரங்கினை தான் தோன்றித்தனமாகப் பூட்டி வைத்திருந்தார்.

அதிகாரத் தரப்புகளால் ஏற்படுத்தப்பட்ட இடையூறுகளுக்கு மத்தியில் திட்டமிட்டபடி நான்காவது உலகத் தமிழராய்ச்சி மாநாடு ஜனவரி நான்காம் திகதி யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் ஆரம்பமாகித் தொடர்ந்து ஜனவரி பத்தாம் நாள்வரை நடைபெற்றது.

இறுதிநாள் நிகழ்வினை அரச படைகளும் அடிவருடிகளும் வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டுக் குழப்ப முற்கூட்டியே திட்டமிருந்தனர் போலும்.

ஜனவரி 10ஆந்திகதி மாநாட்டின் இறுதிநாள் நிகழ்வுகள் ஆரம்பமாகின. சுமார் ஐம்பது ஆயிரம் மக்கள் யாழ்.வீரசிங்கம் மண்டபம் முன்பாக திரண்டிருக்க சிங்கள அரசு தனது அராஜகத்தை வெளிக்காட்டியது. எந்தவித தேவையின்றிப் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகம் மின்கம்பிகளைப் பதம் பார்த்தது. அறுந்த மின்கம்பிகள் திசை தெரியாது நாலாபுறமும் ஓடிய மக்கள் மீது வீழ்ந்தன. மின்கம்பியில் சிக்குண்டு மின்சாரம் தாக்கி பத்துத் தமிழர்கள் சாவடைந்தனர்.

(21 ஆம் பக்கம் பார்க்க)

■ ராஜராஜன்

# பெண்கள் நாட்டின் கண்கள்



பெண் என்றால் பேயும் இரங்கும்என்றொரு முதுமொழி வழக்கிலுள்ளது. மனிதனுக்கு பேய்கள் மீதான அச்சவுணர்வு உச்சக்கட்டத்தில் இருந்தபோது இது உருவாகியிருக்கலாம்.

ஏனென்றால் அன்று மனிதர்களுக்கு ஏற்படும் நோய்கள், திடீர் மரணங்கள் என்பனவற்றுக்குப் பேய்களே காரணமென நம்பப்பட்டது. இதனால் கொடுமையின் சின்னமாகப் பேய்கள் வர்ணிக்கப்பட்டன.

ஆனால் இன்று பேய்கள் தொடர்பான அச்சம் பெரும்பாலான மனிதர்களிடமிருந்து அகன்று விட்டது. ஆனால் இந்த முதுமொழி வழக்கில் உள்ளது.

அன்று பெண்களைக் கண்டால் பேய்களே இரங்கிய நிலையில் மனிதப் பிறவிகளான ஆண்கள் எவ்வித இரக்கமுமின்றிப் பெண்களைக் கொடுமைப்படுத்தும் செய்திகள் தினமும் வெளிவந்தவண்ணம் உள்ளன.

ஆண்கள் சிலரின் வக்கிரபுத்திக்கு ஒற்றை இலக்க வயதுடைய பாலகி தொடக்கம் பேரப்பிள்ளையைக் கண்ட வயது முதிர்ந்த பாட்டிவரை இரையாக்கப்பட்டுள்ளனர். அதுவும் சமீப நாள்களாக இத்தகைய சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

எமது தமிழர் பகுதிகளிலும் இவை தொடர்பான தகவல்கள் அடிக்கடி வெளியாகி பெண்களைப் பெற்றவர்களின் மனங்களைப் பதை பதைக்க வைக்கின்றன.

இதுவரை சீதனக் கொடுமை காரணமாகப் பெண் பிள்ளையொன்று பிறந்த தினத்திலிருந்து அதன் பெற்றோர் கவலையில் ஆழ்ந்திருப்பது வழக்கமாக இருந்து வந்தது. மேலும் ஆண் பிள்ளைகளே தமது குடும்பத்தைக் காப்பாற்றுவார்களென்ற கருத்தும் நிலவி வந்தது. ஆனால் தற்போது பெண்கள் கல்வித் துறையில் உயர்ந்த ஸ்தானத்தை வகிப்பதோடு, சம்பாதிக்கவும் ஆரம்பித்து தமது குடும்பச் சுமைகளைத் தாங்கி நிற்கும் வல்லமை படைத்தவர்களாக விளங்குகின்றனர். இதனால் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையேயான வேறுபாடு ஓரளவு வீழ்ச்சியைக் கண்டது.

ஆனால் தற்போது பெண்ணைப் பெற்றவர்கள் வேறொரு விடயத்தை எவ்வாறு சமாளிக்கப் போகின்றோம் என்பதில் மண்டையைக் குழப்பி நிற்கின்றனர்.

முன்பெல்லாம் வயதுக்கு வந்த பெண் பிள்ளைகளின் பாதுகாப்புத் தொடர்பான அச்சமே காணப்பட்டது. ஆனால் இன்று நிலைமை தலைகீழாக மாறி முன்பள்ளிக்குச் செல்லும் பாலகிக்கும் கூட பாதுகாப்புத் தேவையாகவுள்ளது. இது மிகப்பெரியதொரு கொடுமையான விடயமாகும்.

சில நாள்களுக்கு முன்னர் இந்தியாவின் டில்லி நகரில் மருத்துவ மாணவி மீது மேற்கொள்ளப்பட்ட கொடிய சம்பவம் அந்த நாட்டின் குடியரசுத் தலைவர் தொடக்கம் சாதாரண குடிமகன் வரை பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவம் நடந்தேறியுள்ள விதமும் இதற்கான முக்கிய காரணமாக அமைந்து விட்டது. ஆறு பேர் கொண்ட கொடியவர்கள் இந்தக் கொடுமையை நிகழ்த்தியுள்ளனர். சிறுவன் ஒருவனும்அவர்களுடன் இணைந்து கொண்டது தான் கொடுமையிலும் கொடுமை.

ஆறுபேர் இணைந்து நின்ற போதிலும் அந்த இளம் மாணவி அவர்களுடன் இறுதிவரை போராடியுள்ளாள். அவர்களைத் தனது பற்களால் கடித்தும் கைகளால் அடித்தும் தனது பலத்த எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளாள். இரும்புக் கம்பியால் தாக்கியும், அடித்து உதைத்தும் அந்தக் கொடியவர்கள் அட்டூழியம் புரிந்த பின்னர் ஓடும் பஸ்ஸிலிருந்து அவளை வெளியே இழுத்து வீசிவிட்டுச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் இந்திய மக்களிடையே என்றுமில்லாத அளவு தாக்கத்தை ஏற்படுத்தியதால் பாலியல் வன்முறையாளர்களுக்கு அதிக பட்ச தண்டனையை வழங்கும் வகையிலான சட்டத்தைக் கொண்டு வருவதற்கான கட்டாயம் இந்திய அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

பெண்கள் இயற்கையாகவே ஆண்களை விட உடல் ரீதியில் பலவீனமானவர்கள் என்பதால் இதனைத் தமக்குச் சாதகமாக்கிக் கொள்ளும் ஆண்கள், பெண்கள் மீது அட்டூழியம் புரிகின்றனர். பெண்கள் பலவீனமானவர்கள் என்ற நிலை இருக்கும் வரை இது தொடரவே செய்யும்.

எனவே பெண்கள் உடல் ரீதியில் ஆண்களுக்கு நிகராக தம்மை ஆக்கிக்கொள்ள வேண்டும். இதற்கான பயிற்சிகள், உணவு வகைகள், தற்காப்புக்கலைகள் என்பன நிறையவே உள்ளன. குறிப்பாக இளவயதுப் பெண்கள் இரண்டு மூன்று ஆண்களையாவது எதிர்த்து வீழ்த்துமளவுக்கு தம்மைத் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு பெண்கள் வீறு கொண்டு எழுவார்களாயின் தமது வாலைச் சுருட்டுவதைத் தவிர ஆண்களுக்குவேறுவழியேஇல்லை.

மேலும் ஆண்களும் பெண்களை மதிப்பதற்கு தயாராக வேண்டும். தான் ஒரு தாயின் கருவறையில் வளர்ந்து வெளியுலகைக் கண்டவன் என்ற எண்ணம் ஒவ்வொரு ஆணுக்கும் ஏற்பட வேண்டும். தாய் என்பவளை விட வேறு உயர்ந்த ஸ்தானத்தை வகிக்கும் எவரும் இவ்வுலகில் இல்லை. ஒரு குழந்தை அது ஆணோ அல்லது பெண்ணோ தாயின் கருவறையில் தான் உருவாக வேண்டும். அதனைத் தனது கருவறையில் தாங்கிய நாள் முதல் அவள் அனுபவிக்கும் வேதனைகளும் , செய்யும் தியாகங்களும் எழுத்தில் வடிக்க முடியாதவை. இந்தத் தாயும் ஒரு பெண்தான்.

பெண்ணானவள் தாயாக, மனைவியாக, சகோதரியாக பல்வேறு வடிவங்களைத் தாங்கி நின்றாலும், அதில் அவளது தியாக உணர்வு தான் மேலோங்கி நிற்கிறது. இதனால்தான் அவளைப் போற்றும் வகையில் 'பெண்கள் இந்த உலகின் கண்கள், அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம், மாதா பிதா குரு தெய்வம் என்ற சான்றோர் வாக்குகள் அமைந்துள்ளன. அன்னையாகிய பெண்ணே முதன்மைப்படுத்திப் போற்றப்படுகின்றாள்.

இறுதியாக ஒரு முக்கியமான விடயத்தை இங்கு குறிப்பிட்டுத்தானாக வேண்டும். ஆண் ஒருவன் பெண்ணின் துணையின்றி இவ்வுலகில் வாழவே முடியாது. இயற்கை நியதியும் அதுதான். பராயம் வந்தவுடன் தனக்குப் பொருத்தமான பெண் ஒருத்தியைத் துணையாகக் கொண்டு வாழ்வதே ஆண்களுக்குப் பெருமையைத் தரும். ஒருவனுக்கு ஒருத்தி என்ற தாரக மந்திரம் ஒவ்வொரு ஆணின் உள்ளத்திலும் பதிந்து நிற்க வேண்டும். பிஞ்சிலே பழுக்கும் எதுவும் பயன் தராது. ஆண்களுக்கும் இது பொருந்தும்.

எனவே இனியாவது ஆண்கள் பெண்களைஒரு போகப் பொருளாகக் கருதாது தமது வாழ்க்கைக்கு உறுதுணையானவள் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும்.

இதனைப் புரிந்து கொள்வதற்கு அவர்கள் தவறுவார்களாயின் எதிர்காலத்தில் பெண்களே ஆண்களைக் கொடுமைப்படுத்துமளவிற்கு சரித்திரம் திரும்பும் என்பதை எவரும் மறுக்க முடியாது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தமிழர்களும் முஸ்லிம்களும் போராட வேண்டிய காலமிது....!

"அடித்தாலும் உதைத்தாலும் நான் உந்தன் பிள்ளை' என்ற பாணியிலான சார்பு அரசியல் முஸ்லிம் மக்களிடம் இன்று, நேற்று விதைக்கப்பட்ட ஒன்றல்ல. இலங்கை சுதந்திரமடைந்த காலம் முதல் தென்னிலங்கை முஸ்லிம் அரசியல் தரகர்களால் இது தொடங்கப்பட்டு இன்றுவரை இடம் பெற்று வருகின்றது."



■ கந்தவனம் கோணேஸ்வரன்

முஸ்லிம்களும் தமிழர்களும் அரசியலில் இணைந்து பணியாற்ற வேண்டிய தேவை இப்போது எழுந்துள்ளது. இந்த உணர்வை இப்போதேனும் இருசாராரும் பெறத் தவறினால் நிச்சயம் இரு பகுதியினரும் சிங்கள ஆட்சியாளர்களின் எதேச்சாதிகாரமான போக்குக்குப் பலியாவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

தமிழர்களோடு முஸ்லிம்கள் இணைந்து பணியாற்றுவதைத் தடுப்பதற்கு ஒரேயொரு காரணம் தான் உண்டு. அது முஸ்லிம் தலைமைகளின் விருப்பமின்மை. பிரிந்து நின்றால்தான் தாம் நலன்பெறலாம் என்ற குறுகிய சிந்தனை. இது ஒன்றைத் தவிர இரு பகுதியாரும் பிரிந்து செயற்படுவதற்கான காரணமாக வேறேதும் இருக்கமுடியாது.

தமிழர்கள் தங்கள் தாயகம் என்று இலங்கையில் எப்பகுதிக்கு உரிமை கொண்டாடுகிறார்களோ அது தான் முஸ்லிம்களுக்கும் தாயகம். வடக்கு, கிழக்கு மாகாணங்களின் ஒவ்வொரு மண்துகளிலும் தமிழனுக்கும், முஸ்லிமுக்கும் சம பங்குண்டு. அவர்கள் தாம் இந்த மண்ணின் மைந்தர்கள்.

வடக்கு, கிழக்குக்கு வெளியே தான் அதிகமாக முஸ்லிம் மக்கள் வாழ்கிறார்கள். எனவே, பெரும்பான்மை முஸ்லிம்களின் நலனைக் கருத்திற்கொண்டு முஸ்லிம்கள் தமிழர்களுடன் இணையாமல் அரசியல் நடத்துவதுதான் சிறப்பானது என்ற வாதமும் சிலரால் முன்வைக்கப்படுகிறது. பெரும்பான்மை முஸ்லிம் மக்கள் சிங்கள மக்களின் தாயகத்தில் வாழ்வதால் ஆட்சிப் பொறுப்பிலிருக்கும் அவர்களுடன் சேர்ந்து நடப்பதன் மூலம் அரசியல் சலுகைகளாவது பெற வாய்ப்பிருக்கிறது. பதிலாகப் போராடிக்கொண்டிருக்கும் தமிழர்களுடன் சேர்ந்தால் ஒட்டுமொத்த முஸ்லிம்களுக்கும் நிம்மதியற்ற வாழ்வைத் தவிர வேறெதைப் பெறமுடியும் என்ற கேள்வியும் இந்த வாதத்துக்கு வலுவூட்ட எழுப்பப்படுகிறது.

இலங்கையின் எப்பகுதியில் வாழ்ந்தாலும் முஸ்லிம்களின் தாய்மொழி தமிழ்தான். தம்மை அரபுவழித் தோன்றல்களாக இலங்கை முஸ்லிம்கள் கருதிக்கொண்டாலும் அரபு எந்த முஸ்லிம் வீட்டிலும் பேசப்படும் மொழியாக இல்லை.

இலங்கை முஸ்லிம்களின் எண்ணங்களும் சிறப்பாற்றல்களும் தமிழ் மொழியினூடான படைப்பாற்றல் மூலம்தான் பல நூற்றாண்டுகளாக வெளிப்பட்டு வந்திருக்கின்றன. உலகத் தமிழ் வானொலித் துறையில் தன்னிகரற்ற பெருமகனார் பி. எச். அப்துல் ஹமீட்டைத் தந்த பெருமையும் இலங்கை முஸ்லிம் மக்களுக்கே உண்டு.

அன்றாட வாழ்வை எடுத்துக்கொண்டால் சிங்களமொழி தெரியாத ஏராளமான முஸ்லிம்கள் வாழ்கின்ற அதேவேளையில், தமிழ் மொழி தெரியாத முஸ்லிம்கள் எவருமிலர் என்ற உண்மையையும் ஏற்றுத்தான் ஆகவேண்டும். தமிழ்மொழிப் பயன்பாடற்ற அல்லது மறுக்கப்பட்ட பகுதிகளுக்குச் செல்லும் போது தமிழர்களைப் போலவே வடக்கு, கிழக்கு முஸ்லிம்கள் மொழி விளக்கமின்றிக் கஷ்டமுறுகிறார்கள். தமிழ்மொழிப் பயன்பாடு இருக்கின்ற இடங்களுக்குச் செல்லும் போதுதம்மூரில்இருப்பதைப்போன்ற உணர்வைப் பெறுகிறார்கள்.

ஆனாலும், இலங்கையில் முஸ்லிம்கள் தமிழர்களை விடுத்து சிங்களப் பெரும்பான்மை மக்களுடன் இணைந்த அரசியலை மேற்கொள்கிறார்கள். ஆட்சியாளருடன் சேர்ந்திருப்பதால் பாதிப்புகள் ஏற்பட நியாயமில்லை என நம்புகிறார்கள். தமிழர்களுடன் இணைந்து அரசியல் செய்ய முடியாமல் இருப்பதற்கு அண்மைக் காலச் சம்பவங்கள் சிலவற்றைக் காரணமாகத் தூக்கிப் பிடிக்கிறார்கள். தமிழர்களுடன் சேர்ந்து அரசியல் பாதை வகுப்பது ஆபத்தானது எனக் கருதுகிறார்கள்.

'அடித்தாலும் உதைத்தாலும் நான் உந்தன் பிள்ளை' என்ற பாணியிலான சார்பு அரசியல் முஸ்லிம் மக்களிடம் இன்று, நேற்று விதைக்கப்பட்ட ஒன்றல்ல. இலங்கை சுதந்திரமடைந்த காலம் முதல் தென்னிலங்கை முஸ்லிம் அரசியல் தரகர்களால் இது தொடங்கப்பட்டு இன்றுவரை இடம்பெற்று வருகின்றது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்ற முஸ்லிம் மக்களைவிட தென்னிலங்கையில் வாழ்கின்ற முஸ்லிம் மக்கள் அன்றும்கூட அதிகமாகத்தான் இருந்தார்கள். எனினும், அவர்கள் தென்னிலங்கையில் அரசியல் எழுச்சி பெறக்கூடிய நிலையில் இருக்கவில்லை.

### சிங்கள ஆட்சியாளரின் திட்டமிட்ட பயன்படுத்தல்

முஸ்லிம் மக்கள் தென்னிலங்கையில் பரந்து வாழ்ந்தார்களே யொழிய பழைய தொகுதிவாரி தேர்தல் முறைமையின்கீழ் ஒரு தொகுதியிலாவது தனித்து நின்று ஆசனத்தைப் பெறக்கூடிய வலிமையைக் கொண்டிருக்கவில்லை.

ஆயினும், ஒப்பீட்டளவில் வடக்கு கிழக்கு வாழ் முஸ்லிம்களைவிட பன்மடங்கு- செல்வச்செழிப்பும் கல்வியறிவும் கொண்டவர்களாகக் காணப்பட்டார்கள். எனவே, அவர்களின் அடுத்த இலக்கு அரசியல் அந்தஸ்தாகவே இருந்தது. இதனைச் சிங்கள ஆட்சியாளர்கள் திட்டமிட்டுப் பயன்படுத்தத் தொடங்கினார்கள்.

இதேவேளை மறுபுறமாக வடக்கு, கிழக்கு முஸ்லிம்கள் தமிழர்களுடன் இணைந்த அரசியலை முன்னெடுக்கத் தலைப்பட்டார்கள். அதற்கான அரசியல், பொருளாதார நிலப் பாதுகாப்பு காரணங்கள் வலுவாக இருந்தன. தென்னிலங்கை அரசியல் வியாபாரிகளைப் போல் வடக்குக் கிழக்கில் தமிழரசுக் கட்சிக்கு முஸ்லிம் வாக்குகளைத் திரட்டிக் கொடுப்பதால் இங்கு எழுந்த தலைமைகள் தனிப்பட்ட நலன்கள் எவற்றையும் பெறவில்லை. மாறாகத் துன்பப்பட்டார்கள். சிங்கள ஆட்சியாளர்களால் வெறுப்புடன் நோக்கப்பட்டார்கள். ஆயினும், அவர்கள் பெரும்பான்மையின ஆட்சியாளர்களின் அடாத்தான போக்கிலிருந்து முஸ்லிம் இனத்தை விடுவித்துக் கொள்ளப் போராடினார்கள்.

### பனாகொடை முகாமில் தமிழர்களும் முஸ்லிம்களும்

பல தமிழர்கள் நினைப்பது போல் முஸ்லிம் அரசியல்வாதிகள் எல்லோரும் மோசமானவர்கள் அல்லர். ஒருசில சந்தர்ப்பவாதிகளைக் கருத்திற்கொண்டு முஸ்லிம் மக்களின் சிந்தனையை எடைபோடக் கூடாது. அறுபதுகளில் எழுந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஏராளமான முஸ்லிம்களும் கலந்து கொண்டார்கள். தமிழ்த் தலைவர்களுடன் சிறை சென்றார்கள். மன்னார் எருக்கலம்பிட்டி கே.எஸ்.ஏ.கபூர், கல்முனை மசூர் மௌலானா போன்றவர்கள் தமிழுக்காக பனாகொடை இராணுவ முகாமில் தமிழ்த் தலைவர்களுடன் சேர்ந்து துன்பம் அனுபவித்த போராளிகள் என்பதைத் தமிழர்களோ, முஸ்லிம்களோ மறந்துவிட முடியாது.

எழுபதுகளின் தொடக்கத்தில் மட்டக்களப்பு பாட்டாளிபுரம் திடலில் இடம்பெற்ற தமிழரசு வாலிப முன்னணி மாநாட்டில் மசூர் மௌலானாவின் அழகிய, ஆவேசமான, ஆணித்தரமான பேச்சைக் கேட்டவர்கள் இன்றும் கூட மறந்திருக்க மாட்டார்கள். தமிழரசுக்கட்சியின் பிரசார பீரங்கியாகவே மசூர் மௌலானா திகழ்ந்தார். 'தடுப்புக் காவலில் நாம்' என்ற நூலை எழுதி வெளியிட்ட கே.எஸ்.ஏ.கபூர் ''பிறந்து விட்ட மனிதன் இறப்பது ஒரு முறைதான். அதை நம் இனத்தின் எழுச்சிக்கு பயன்படும் விதத்தில் பயன்படுத்துவதே நாம் இனத்துக்குச் செய்யும் பணி'' என்று குறிப்பிட்டதை எவரும் மறந்துவிட முடியாது. திருகோணமலையைச் சேர்ந்த சஹாப்தீன், சாகுல்ஹமீட் மாஸ்டர் ஆகியோர் எழுபது தொடக்கம் தமிழ்த் தலைமைகளுடன் சேர்ந்து தடம் புரளாமல் இன்றுவரை செயல்பட்டுவருவதை மக்கள் அறிவர்.

இத்தகைய சிறப்பாளர்களினூடாகத்தான் தமிழ் மக்கள் முஸ்லிம் மக்களின் மனதை அளக்க முயல வேண்டும். கட்சி மாறிகளையும் தகிடுதத்திகளையும் வைத்துக்கொண்டு எல்லா முஸ்லிம்களையும் கணக்குப் போடக் கூடாது. அரசின் பின்னால் ஓடிச் சென்ற பிரதிநிதிகள் யாழ். மண்ணில் இருக்கவில்லையா? அரச அடிவருடி என்று தம்மை விளம்பரப்படுத்திக் கொண்டே தொடர்ந்தும் வெற்றி பெறுபவர்கள் யாழ். மக்களிடம் இருந்துதானே வாக்குகளைப் பெறுகின்றனர். இவர்களைக் கொண்டு யாழ்ப்பாணத் தமிழர்களை எடைபோட முயல்வது எவ்வளவு பிழையானதோ அதேயளவு பிழையானது தகிடுதத்தம் செய்யும் முஸ்லிம் அரசியல்வாதிகளை வைத்து முஸ்லிம்களை எடை போடுவதும் பிழையானது.

### தமிழ் மக்களுக்கு அதிருப்தி உண்டு

ஆயினும், தமிழர்களுடன் இணைந்து அரசியல் நடத்துகிறோம் என்று முழங்கிக் கொண்டு தமிழரசுக்கட்சியினூடாக நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளையும் பெற்றுக்கொண்டதன் பின் வசதியாக ஆளுங்கட்சிக்கு மாறி சலுகைகளை அனுபவித்த சில முஸ்லிம்களின் விடயத்தில் தமிழ் மக்களுக்கு எப்போதும் அதிருப்தி உண்டு. 1956இல் கல்முனை, பொத்துவில் ஆகிய தொகுதிகளிலிருந்து எம்.எஸ். காரியப்பரும், எம்.எம். முஸ்தபாவும் தெரிவாகினர். பின்னர் ஆளும் தரப்புக்கு மாறினர். 1960இல் கல்முனையில் எம்.சி.அகமதுவும், 1965இல் மூதூரில் எம்.இ.எச். முகமட் அலியும் தெரிவான பின்னர் அரசுடன் இணைந்து கொண்டனர். இவை சற்றுக் கசப்பான உண்மைகள்தாம்.

### தமிழர்களும் முஸ்லிம்களும் இணைந்து ஒரே பாதையில்

இத்தகைய மாற்றங்கள் கிழக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே நிகழ்வதற்குத் தென்னிலங்கை முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களே நேரடியாகவோ, மறைமுகமாகவோ காரணமாக இருந்திருக்கிறார்கள். தமிழர்களும் முஸ்லிம்களும் இணைந்து ஒரே பாதையில் நடந்தால் தமது இனவாத அரசியலுக்கு ஆபத்து ஏற்பட்டு விடலாம் என அஞ்சிய ஆட்சியாளர்கள் பயிற்றப்பட்ட யானைகளான தென்னிலங்கை முஸ்லிம் அரசியல்வாதிகளைக் கொண்டு கிழக்கு முஸ்லிம் அரசியல்வாதிகளை வளைத்துப் போட்டார்கள். பணம், பதவி போன்ற சலன்ங்களால் ஈர்க்கப்பட்ட இவர்கள் வங்குரோத்து நியாயங்களைக் கூறிக் கொண்டு அவ்வப்போது இருந்த அரசின்பக்கம்சாய்ந்துகொண்டார்கள்.

இவர்களது சாய்வு தமிழர்களுக்கு மட்டுமன்றி முஸ்லிம்களுக்கும் பெரும் பின்னடைவை தந்தது. அரசு தந்த சலுகைகளைவிட மனமில்லாதவர்களான இவர்கள் தம் கண்ணெதிரிலேயே தமக்கு வாக்களித்த மக்களுக்கு நடக்கின்ற அநியாயங்களைத் தட்டிக்கேட்குந் துணிவற்றவர்களாக இருந்தார்கள். முஸ்லிம்களின் நிலங்கள் அபகரிக்கப்பட்டன, கிழக்கு மண்ணிலேயே முஸ்லிம்களின் வாழிட உரிமைகள் மறுக்கப்பட்டன. அம்பாறை என்கின்ற முஸ்லிம் மக்களின் பூமி சிங்களக் குடியேற்றத்தினால் சுவீகரம் செய்யப்பட்டது.

எதிர்ப்பு அரசியலால் தான் தமிழர்கள் பாதிப்படைகிறார்கள் எனக் கூறும் முஸ்லிம்கள் எந்தவகை அரசியலால் பாதிப்புக்குள்ளாகிறார்கள் என்பதைச் சிந்திக்க வேண்டும். சுதந்திர இலங்கையில் சிங்கள அரசு உருவான நாள் தொடக்கம் இன்றுவரை எல்லா அரசுகளிலும் முஸ்லிம்கள் முழு அமைச்சு அரை அமைச்சு பதவிகளை அலங்கரித்தே வருகிறார்கள்.

### அமைச்சர் எவரும் வாய் திறக்கவில்லை

ஆயினும், முஸ்லிம் நிலங்கள் சுருங்கி வருகின்றன. முஸ்லிம் மக்களின் உரிமைகள் மறுக்கப்படுகின்றன. புத்தளம் பள்ளிவாசலில் வைத்து முஸ்லிம்கள் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். மாவனல்லையில் சிங்கள முஸ்லிம் கலவரங்கள் அடிக்கடி இடம்பெற்றன. இவையெல்லாம் நிகழ்ந்தபோது முஸ்லிம் அமைச்சர்எவரும்வாய்திறக்கவே இல்லை. சிங்கள அடாவடித்தனத்துக்கெதிராக ஒரு கண்டனக் குரலாவது எழுப்பவில்லை.

இன்று பள்ளிவாசல்கள் தகர்க்கப்படுகின்றன. முஸ்லிம் வியாபாரிகள் அடித்து நொறுக்கப்படுகிறார்கள், முஸ்லிம் கடைகளில் பொருள்களை வாங்கக் கூடாதென சிங்கள மக்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். இலங்கையில் இஸ்லாமியக் குடியரசை நிறுவப் பார்க்கிறீர்களா என அரசியல் காடையர்கள் பச்சையாகவே கேட்கிறார்கள். ஹலால் சான்றிதழ் மேல் வெறுப்பை உமிழ்கிறார்கள்.

(21 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேசமின்றி நிம்மதி இல்லை

நேசம் என்பதற்கு அன்பு என்பது பொருள்..! அன்பினால் சாதிக்க முடியாத காரியம் இந்த அவனியில் எதுவும் இல்லை.. அன்பு நிறைந்தவர்களிடம் எவரும் பகைமை பாராட்ட முடியாது.. அதனால் தான் அன்பே தெய்வம் என்று சொல்லி வைத்தார்கள். கடவுள் அன்பே வடிவானவர்.. கருணையே உருவமானவர்... அன்புடையவர்கள் அனைவருமே தெய்வ வடிவங்கள் தான்..! இந்த அன்பு வற்றிப் போனமையால் தான் பல அலங்கோலங்கள் தலை விரித்தாடுகின்றன. நிம்மதியைத் தேடி அலைகின்றவர்கள்: அன்பை மறந்தவர்கள்: ''கருணையை மறந்தே வாழுகின்றார்...! கடவுளைத்தேடி அலைகின்றார்.'' காற்றினிலே மிதந்து வரும் இந்தக் கீதத்தை நீங்கள்கேட்டிருப்பீர்கள். எவ்வளவு அர்த்தம் பொதிந்த வரிகள் இவை...? எம்மைப் போன்ற மனிதர்கள் துன்பங்களில் சிக்கி வருந்துகிறார்கள். அதைக்கண்டும் கருணை உண்டாகவில்லை எமக்கு. 'சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாதல் கண்டும், சிந்தை இரங்காரடி..கிளியே.. செம்மை மறந்தாரடி....' இதனையே அமரகவி இப்படிப் பாடுகிறார்...! ஒருவருக்கு நீங்கள் தீமை செய்தால் சுவரில் பட்ட பந்துபோல அது உங்களிடம் திரும்புகிறது... இந்தச் செயலைச் செய்யும் சக்தி எது..?

எப்போதாவது இதை நீங்கள் சிந்தித்ததுண்டா..? கடவுள்தான் இந்தத் தண்டனையைத் தருகிறார் என்று நீங்கள் நினைக்கிறீர்கள். கடவுள் கருணையின் திருவடிவம்...அவர் எமக்கு எந்தத் தண்டனையையும் தரவில்லை. எமக்கு நாமே நன்மை செய்து கொள்கிறோம்..! அதேபோல் எமக்கு நாமே தீமையையும் செய்து கொள்கிறோம். இதுவே யதார்த்தமான உண்மையாக இருக்கிறது. இந்த யதார்த்தத்தை நாம் புரிந்து கொள்ளாமையால் தான் வேற்றுமை உணர்வுக்கு ஆளாகியிருக்கிறோம்.

எம் முன்னே காணும் மனிதர்களை வேறுபடுத்திப் பார்க்கிறோம்.. இந்த வேறுபாடு தான் எம் நிம்மதியைச் சீரழிக்கிறது...! அச்ச உணர்வை ஏற்படுத்துகின்றது? இந்த வேறுபாடு தான் எம்மனங்களை அலைக்கழிக்கிறது. நாம் ஏன் மனிதர்களிடம் அன்பு காட்ட வேண்டும். அர்த்தம் நிறைந்த கேள்வி இது..அனைவரும் அறிய வேண்டிய கேள்வியும் இதுவே.. உடலால் வேறுபட்டிருக்கும் நாம் ஆத்மாவால் ஒன்றுபட்டிருக்கிறோம்...! உடலை ஊனக்கண்களால் காண்கிறோம்.. அதனால் வேறுபாடுகள் தெரிகின்றன.

ஆத்மாவை இந்த ஊனக்கண்களால் காண முடியாது..ஞானக்கண் கொண்டு தான் இதனைக் காண முடியும். தெய்வம் கருணை நிறைந்ததாக இருப்பதற்கு இதுவே காரணமாகும். மகரிஷிகள் எம் மீது அன்பு செலுத்துவதற்கு இதுவே காரணமாகும். தீர்க்க தரிசிகள் அனைவரையும் ஒன்றாக நேசிப்பதற்கு இதுவே மூலகாரணமாகும்.

நாம் வெற்றுடல்களைப் பார்க்கிறோம்.. அவர்கள் ஆத்ம ஒளியை எம்மிடம் காண்கிறார்கள். கண்ணிருந்தும் குருடர்களாய் நீங்கள் தடுமாறுகிறீர்கள். இந்தத் தடுமாற்றம் தான் நிம்மதியைக் குலைக்கிறது. நிம்மதி எங்கே இருக்கிறது என்ற அடிப்படையை நீங்கள் தெரிந்து கொள்ளவில்லை.

எம்மிடம் ஒளி வீசிக் கொண்டிருக்கும் ஆத்மா தான் மற்ற மனிதர்களிடமும் ஒளி வீசிக் கொண்டிருக்கிறது. எம்மிடம் இருக்கும் ஆத்மா வேறு: மற்ற மனிதர்கள் என்று கருதிக்கொண்டிருப்பவர்களிடம் இருக்கும் ஆத்மா வேறு என்பதல்ல. இருப்பது ஓர் ஆத்மா தான்.. அதுவே கோடிக்கணக்கான துகள்களாக மனிதர்களிடம் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. அதனால் தான் மற்றவர்களுக்கு நீங்கள் நன்மை செய்தால் அந்த நன்மை உங்களுக்கு நீங்களே நன்மை செய்ததாகிறது. உங்களுக்கே நன்மையாக வந்து சேருகிறது.

அதே போல் மற்றவர்களுக்குச் செய்யும் தீமையும் சுவரில் பட்ட பந்து போல் உங்களிடமே திரும்பி வருகிறது. தெய்வம் உங்களுக்குத் தண்டனை தருவதில்லை என்பதை இதன் மூலம் அறியலாம். உங்களுக்கு நீங்களே தண்டனை அளித்துக் கொள்கிறீர்கள். முன்பு கூறப்பட்ட கருத்துக்கு விளக்கம் இதுதான். உங்களுடைய விதியை வானத்திலிருந்து கொண்டு, வலுக்கட்டாயமாக யாரோ திணிக்கிறார் என்று நினைக்காதீர்கள். விதியை உண்டாக்குகிறவர்கள் நீங்கள் தான். நெருப்பு சுடும் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

தெரிந்தும் கை வைக்கிறீர்கள். வேதனைப்படுகிறீர்கள். தெய்வமா உங்களை இதற்குத் தூண்டுகிறது. நவக்கிரகங்களா இப்படிச் செய்யும்படி தூண்டுகின்றன. ஒரு போதும் இல்லை. நீங்களே தான் நெருப்பில் கை வைத்து வேதனைப்படுகிறீர்கள். ஆகவே துன்பம் வருவது உங்களால் தான்..

துன்பம் வருவது உங்களால் என்றால் இன்பத்தை வரவைப்பதும் உங்கள் கைகளில் தான் இருக்கிறது என்பது தீர்மானமாகிறது. நிம்மதியை இழப்பதற்கு நீங்கள் தான் காரணம். அப்படியென்றால் நிம்மதியை அடைவதும் உங்கள் கரங்களில் தான் இருக்கிறது. நம் சகோதர மக்களிடம் நீங்கள் அன்பு காட்டினால் அது பல மடங்குகளாகப் பெருகி உங்களிடம் வருகிறது. அந்த அளவு அன்பினால் நீங்கள் இதுவரை காணாத நிம்மதியைப் பெறுகிறீர்கள்.



**பரமஹம்ஸ ஸ்ரீமத் பரத்வாஜ் ஸ்வாமிகள்**

# நெடுந்தீவு மக்களைக் காக்கும் நெழுவினி விநாயகர் ஆலயம்



(கடந்தவாரத்தொடர்ச்சி.....)

**லக்ஸ்மன்**

1827 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட நெழுவினி விநாயகர் ஆலயம் படிப்படியாகச் சிதைந்து கொண்டிருந்த நிலையில் 1975 ஆம் ஆண்டில் புதிய திருப்பணிச்சபை ஒன்றின் கண்காணிப்பில் ஆகம விதிமுறைகளுக்கமைய புதிதாக நிர்மாணிக்கப்பட்டது. எனினும் சிவஸ்ரீ தியாகராசக் குருக்கள் தலைமையில் பழைய ஆலயத்தில் அமைக்கப்பட்ட ஸ்தம்ப மண்டபம் மாற்றம் எதுவும் செய்யப்படாதவாறு சில திருத்த வேலைகள் மட்டுமே மேற்கொள்ளப் பட்டுள்ளன.

1706 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பெரியதுறை பூமனை பகுதியில் இருந்ததாகச் சொல்லப்படும் இந்த ஆலயம் 1827 ஆம் ஆண்டு தொடக்கம் தற்போது உள்ள இடத்தில் இருந்து மக்களுக்கு அருளாசி வழங்குகின்றது. காலத்துக்குகாலம் அதன் வளர்ச்சிகள் உரிய முறையில் ஆகம விதிகளுக்கமைவாக இடம் பெறுகின்றன. அவ்வப் போதுள்ள பரிபாலன சபையினர் அதற்கு உந்து சக்தியாக இருந்துள்ளனர்.

> **ஆலய உற்சவம் பங்குனித்திங்கள் 22 ஆம் நாள் கொடியேற்றத் துடன் ஆரம்பமாகி பத்துத் தினங்கள் நடைபெறுகிறது. சித்திரைப் புத்தாண்டு தினத்தில் தேர், தீர்த்தம், கொடியிறக்கம் என்பன இடம் பெறும்.**

பிற்காலத்தில் ஆலயத்தின் வளர்ச்சிக்கும் பலர் அருந்தொண்டாற்றியுள்ளனர். இன்றைய அதன் வளர்ச்சிக்கு அந்தப் பகுதியில் உள்ள பலர் காரணமாக இருந்தனர். எனினும் மிகவும் குறிப்பிடக்கூடிய அளவில் முன்னர் பரிபாலன சபைத் தலைவராக இருந்த இராமநாதர் கந்தையாவும், க.தனிநாயகம், ஓய்வு பெற்ற ஆசிரியர் கு.லிங்கநாயகம், ச.மருதப்பு ஆகியோர் இருந்துள்ளனர். இவர்களின் சேவை தொடர்ந்தும் ஆலயத்தில் உள்ளது.

விதிமுறைகளுக்கு அமைந்ததான உட்பிரகாரத்தின் மத்தியில் வள்ளி தெய்வானை சமேத முருகப்பெருமானின் பரிவாரக் கோயிலும், தென் மேற்கு மூலையில் வைரவரின் கோயிலும், வடமேற்கு மூலையில் உற்சவமூர்த்திகளின் மண்டபமும் வடக்கு பிரகாரத்தின் கிழக்கு எல்லையில் யாகசாலையும் கர்ப்பகிரகத்திற்கு அண் [illegible]க்கான ஆலயமும் உள்ளன.

ஆலய உற்சவம் பங்குனித்திங்கள் 22 ஆம் நாள் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்துத்தினங்கள் நடைபெறுகிறது. சித்திரைப்புத்தாண்டு தினத்தில் தேர், தீர்த்தம், கொடியிறக்கம் என்பன இடம் பெறும். உற்சவம் தவிர திருவாதவூர் புராணம், திருப்பள்ளியெழுச்சி, மகா சிவராத்திரி, பிள்ளையார் கதை, விநாயகர் சதுர்த்தி ஆகியனவும் இடம் பெறு கின்றன. வெள்ளிக்கிழமைகளில் இந்தப்பகுதியில் உள்ள இந்துசமயச் சிறுவர்களின் கூட்டுப் பிரார்த் தனையும் சைவப்பிரகாச வித்தியாலய மாணவர்களின் வழிபாடுகளும் இடம் பெறுகின்றன.

தேர்த்திருவிழா உபயகாரர்களான சின்னத்தம்பி குமாரசாமி குடும்பத்தினரின் புதல்வர்களால் தற்போது விநாயகப் பெருமானுக்கு புதிய தேர் ஒன்று உருவாக்கப்பட்டு கடந்த ஆண்டில் தேர் உலா இடம் பெற்றுள்ளது. உற்சவ காலத்தில் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப் படுகிறது. ஆவணிமாத விநாயக சதுர்த்தி தினத்தில் மேற்கு மகளிர் சங்கத்தின் முக்கியஸ்தர்களாக இருந்த ச.இராசம்மா, க.பொன்னம்மா, இ.சொர்ணம்மா ஆகியோர் அடியார்களுக்கு சர்க்கரைச் சாதம் வழங்கிவந்தனர். அதன் பின்னர் வேலாயுதர் பெருமையினார் ஆலய பரிபாலன சபைத்தலைவராக இருந்த சமயம் அன்னதானம் வழங்கப்பட்ட போதும் பின்னர் அது இடையில் நின்றுள்ளது. 1992 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மீண்டும் ந.நடராசா தலைமையில் அமைக்கப்பட்ட அன்னதானசபை அன்று முதல் தொடர்ந்தும் அந்தப் பணியை முன்னெடுத்து வருகின்றது. அன்னதானசபை அதற்கென ஒரு மண்டபத்தை அமைக்கும் பணியை முன்னெடுத்துள்ளது. மண்டபத்தின் வேலைகள் பூர்த்தியடைய மேலும் உதவிகள் தேவைப்படுகின்றன.

மேற்குப் பகுதியில் உள்ளவர்கள் மட்டுமன்றி நெடுந்தீவுப்பகுதியைச் சேர்ந்த அனைத்து இந்துக்களும் ஏனைய மதத்தினரும் கைகூப்பித் தொழும் வழிபாட்டுக்கு உரியவராகின்றார் நெழுவினி விநாயகர். (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உறுகாமம்குளம் திறக்கப்பட்டது

## வெள்ள அபாயத்தால் மக்கள் இடம்பெயர்வு



மட்டக்களப்பு, ஜன.10

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெய்த தொடர் மழை காரணமாக உறுகாமக் குளம் திறந்துவிடப்பட் டுள்ளது. அதனால் செங்கலடி ஏறாவூர் பற்று பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட மக்கள் பாதுகாப்பான இடங்களைத் தேடி இடம்பெயர்ந்துள்ளனர்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு பின்னர் சித் தாண்டி மகிழவெட்டுவான், ஈரளக் குளம் போன்ற பகுதி களில் குளத்து நீர் வரத்து அதிகரித்து கிராமங்களுக்குள் வெள்ள நீர் புகுந்துள்ளது. இதனால் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை மகிழ வெட்டுவான் கிராமத்தில் ஏற்பட்டுள்ள வெள்ள அபா யத்தால் இடம் பெயர்ந்த மக்களை பாதுகாப்பாக வெளியேற்றிய பிரதேச செயலக நிர்வாகத்தினர் அவர்களை காயான் குடா கண்ணகி வித்தியாலயத்தில் தங்கவைத்துள்ளனர்.

காயான்குடா கண்ணகி வித்தியாலயத்தில் இதுவரை சுமார் 160 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் இடம்பெயர்ந்து தங்கியுள்ளனர். அத்துடன் உறுகாமக் குளத்தின் நீர் தொடர்ந்தும் பெருக்கெடுத்து ஓடுகின்றது. இதனால் சித் தாண்டி போன்ற தாழ்வான பகுதிகளைச் சேர்ந்த மக்கள் இடம்பெயர்ந்து உறவினர்கள் வீடுகளில் தஞ்சம் புகுந்து வருகின்றனர். (வ)

### மத்தியஸ்தம் குறித்து செயலமர்வு



மத்தியஸ்தம் தொடர்பாக அம்பாறை மாவட்ட கிராம அதிகாரிகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்கு அறிவூட்டும் செயலமர்வு நேற்று முன்தினம் சாய்ந்தமருது பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

நீதி அமைச்சின் ஏற்பாட்டில் சாய்ந்தமருது பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் உதுமாலெப்பை தலைமையில் நடைபெற்ற மேற்படி செயலமர்வில், கல்முனை தமிழ் பிரிவு, சாய்ந்தமருது ஆகிய பிரதேச செயல கங்களில் கடமையாற்றும் கிராம சேவை உத்தியோகத்தர்கள், கல்முனை பொலிஸ் நிலைய அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்

குறித்த செயலமர்வில் வளவாளர்களாக நீதியமைச்சின் நிகழ்ச்சித் திட்டமிடல் உத்தியோகத்தர்களான வீ.சவரிநாயகம், பி.சனாதனசர்மா, லலித் ஹபுகஹபிடிய ஆகியோர் கலந்து கொண்டனர். (வ)

### தனியார் மருந்தகத்தில் அரச இலச்சினையுடன் இன்சுலின் ஊசி மருந்து

**விசாரணை ஆரம்பம்**

நுவரெலியா, ஜன.10

நுவரெலியாவிலுள்ள தனியார் மருந்தகமொன்றில் இருந்து அரச இலச்சினை பொறிக்கப்பட்ட இன்சுலின் ஊசிமருந்து கண்டுபிடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் சுகாதார அமைச்சு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இதுதொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க அதிகாரிகள் குழுவொன்று நேற்று முன்தினம் நுவரெலியாவுக்கு அனுப்பி வைக் கப்பட்டதாக தேசிய ஔடதங்கள் அதிகார சபையின் பணிப்பாளர் ஹேமந்த பெளரகம தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:-

நுவரெலியா மாவட்டத்தின் நுகர்வோர் சேவைகள் அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் குறித்த மருந்தகத்தில் மேற்கொண்ட சோதனையின்போது இந்த ஊசிமருந்துகள் கண்டு பிடிக்கப்பட்டன.

அரச இலட்சனையுடனான ஊசிமருந்துகள், குறித்த மருந்தகத்துக்கு எவ்வாறு கொண்டு வரப் பட்டன என்பது குறித்து விசாரணைகள் மேற்கொள் ளப்படுகின்றன. தனியார் மருந்தகங் களில் அரச இலச்சினை பொறிக்கப்பட்ட ஊசிமருந்துகளை விற்பனை செய்ய முடியாது- என்றார். (வ)

### தோட்டத்தில் இளைஞனின் சடலம் மீட்பு

கந்தப்பளை, ஜன.10

கந்தப்பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பார்க் தோட்டத்தில் இளைஞர் ஒருவரின் சடலமொன்றை கந்தப்பளை பொலிஸார் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மீட்டுள்ளனர்.

கந்தப்பளை நகரிலுள்ள வர்த்தகர் ஒருவரின் 22 வயதுடைய மகனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு விரைந்த அவர்கள் பார்க் தோட்டத்தின் 10 ஆம் இலக்க மலையில் தேயி லைச் செடிகளுக்கு இடையிலிருந்து குறித்த சடலத்தை மீட்டுள்ளனர்.

மேற்படி சம்பவம் தொடர்பாக கந்தப்பளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (வ)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு உலர் உணவை உடனடியாக வழங்குக

### கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் இடர் முகாமைத்துவ அமைச்சருக்கு கடிதம் மூலம் வேண்டுகோள்

மட்டக்களப்பு, ஜன.10

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள குடும் பங்களுக்கு உலர் உணவு பொருள்களை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக் குமாறு கோரி கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் பூ.பிரசாந்தன், இடர் முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீரவுக்கு அவசர கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அவர் அனுப்பிய கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

தொடர்ந்து பெய்து வரும் அடைமழை காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தின் அனைத்து செயற்பாடுகளும் ஸ்தம்பிதம் அடையும் வகையில் வெள் ளப் பெருக்கு ஏற்பட் டுள்ளது.

வெள்ள அபாயம் காரணமாக பல பிரதேசங்களில் மக்கள் இடம்பெயர்ந்து பொது இடங்களிலும் உறவினர்களது வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

அவர்களுக்கான உடனடி உதவிகளை பிரதேச செயலகம் மூலம் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள போதும் நிதித் தேவைப்பாடு அதிகமாகவே உள்ளதாக உணர முடிகின்றது.

மட்டக்களப்பில் கடந்த 7 ஆம் திகதி மாலை 4 மணி வரையான களநிலை அறிக்கையின்படி 158 கிராம சேவகர் பகுதிகளில் 38 ஆயிரத்து 177 குடும்பங்கள் ஒரு லட்சத்து 42 ஆயிரத்து 674 தனிநபர்கள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். 40 ஆயிரத்து 983 குடும்பங்கள் வாழ்வாதார ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

இதில் 6 ஆயிரத்து 98 குடும்பங்கள் இடம் பெயர்ந்து உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ளனர். இதே போல் மாவட்டத்தில் உள்ள 14 பிரதேச செயலர் பிரிவுகளின் 345 கிராம சேவகர் பிரிவுகளிலும் அன்றாடம் தொழில் புரிந்து வாழ்வாதாரத்தை மேற்கொள்ளும் அனைவரது வாழ்வாதாரமும் பாதிக்கப் பட்டுள்ளது. இதைக் கருத்திற் கொண்டு உலர் உணவுப் பொருள்கள் வழங் குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதே சிறந்தது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகமானோர் விவசாய, மீன்பிடி, சுய தொழில்களை நம்பி வாழ்ப வர்கள். இவ்வாறான இடர் களால் அவர்களின் வாழ் வாதாரம் மிக மோசமாகப் பாதிக்கப் படுகின்றது. மேலும், அவர்களுக்கான நிவாரண சேவையும் உடன டியாகத் தேவைப் படுகின்றது.

எனவே மிகத் துரிதமாக வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் உலர் உணவுப் பொருள்களை வழங்குவதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள் கின்றேன்- என்றுள்ளது.

மேற்படி கடிதத்தின் பிரதிகள் கிழக்கு மாகாண முதலமைச்சருக்கும், கிழக்கு மாகாண சபை பிரதம செயலாளருக்கும் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன. (வ)

### பாடசாலை நூல்கள் விற்பனை

**ஒருவர் கைது**

கம்பளை, ஜன.10

கம்பளையிலுள்ள புத்தக சாலையொன்றில் பாடசாலை நூல்களை விற்பனை செய்த ஒருவர் கைது செய்யப் பட்டுள்ளார். தமிழ், சிங்கள மற்றும் ஆங்கில மொழியிலான சுமார் 1050 பாடசாலை நூல்கள் சந்தேகநபரிடமிருந்து கைப் பற்றப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கைப்பற்றப்பட்ட நூல்களில் முதலாம் தரம் தொடக்கம் 11ஆம் தரம் வரையில் பாடசாலையில் வழங்கப் படும் இலவச பாட நூல்கள் அடங்குவதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர். சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கம்பளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (வ)

### போகம்பர சிறைச்சாலையில் கைதிகளுக்கு தியானப் பயிற்சி

கண்டி போகம்பர சிறைச்சாலையில் தடுத்து வைக்கப் பட்டுள்ள கைதிக ளுக்கென விசேட தியானப் பயிற்சி வகுப்பொன்று நேற்று முன்தினம் செவ் வாய்க் கிழமை தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக மேற்படி பயிற்சி வகுப்புகள் நடைபெறும் என்று போகம்பர சிறைச்சாலையின் சிரேஷ்ட அதிகாரியான திஸ்ஸ ஜயசிங்க தெரிவித் துள்ளார்.

தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள 47 பேருட்பட பெண் துஷ்பிரயோகம், கொலை மற்றும் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய கைதிகள் என மொத்தமாக 100 பேர் இதில் கலந்து கொள்கின்றனர்.

அமெரிக்க மேற்கு வெர்னிய பிராந்தியத்தில் தியான நிலையமொன்றை நடத்தி வரும் பிக்கு ஒருவரின் தலைமையின் கீழேயே குறித்த பயிற்சிகள் நடைபெறுகின்றமை குறிப்பி டத்தக்கது.

### குளிக்கச் சென்ற ஆசிரியர் நீரில் மூழ்கி மாயம்

கல்முனை, ஜன.10

சம்மாந்துறை - மாட்டுப்பளை பகுதியில் நீராடச் சென்ற ஒருவர் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார்.

மேற்படி சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம் பெற்றுள்ளது.

கல்முனை - பாண்டிருப்பு பகுதியைச் சேர்ந்த 52 வயதுடைய வெல்லக்குட்டி கனகரத்னம் என்பவரே இவ்வாறு காணாமல் போ யுள்ளார்.

அவர் சம்மாந்துறை அல்-அர்சாத் வித்தி யாலயத்தின் ஆசிரியராவார். சம்மாந்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வரு கின்றனர். (வ)

## பாவனைக்கு உதவாத உணவுப் பொருள்கள்

**ஹற்றனில் சோதனையில் சிக்கின**

ஹற்றன், ஜன.10


ஹற்றன் நகரிலுள்ள பல சரக்குக் கடைகள் சிலவற்றிலிருந்து பாவனைக்கு உதவாத பழப்புளி, முட்டைகள், வெங்காயம், வெள்ளைப் பூடு ஆகியன மீட்கப்பட்டுள் ளன.

ஹற்றன் நகரில் பழுத டைந்த உருளைக்கிழங்கு கடந்த வாரம் மீட்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அந்த நகரிலுள்ள மொத்த மற்றும் சில்லறை பலசரக்குக் கடைகளில் பொதுச்சுகாதாரபரிசோதகர்கள் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர்.

மேற்படி சோதனையின் போது பாவனைக்குதவாத 150 கிலோகிராம் பழப்புளி கண்டுப்பிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டது. மேலும் 750 முட்டைகள், 150 கிலோ கிராம் வெங்காயம், 50 கிலோகிராம் வெள்ளைப்பூடு ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளதாக ஹற்றன், டிக்கோயா நகரசபையின் பொதுச் சுகாதார பரிசோதகர் ஆர்.பாலகிருஸ்ணன் தெரி வித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:-

இதேவேளை விவரச் சீட்டு ('லேபல்') இல்லாது பொருள்களை பொதியிட்டு விற்பனை செய்த விற்பனை நிலையம் ஒன்றும் சோதனை நட வடிக்கையின்போது தெரியவந்துள்ளது. அத்துடன் [illegible] யொன்றில் இயங் காத குளிர்சாதனப் [illegible]



வைத்து விற்பனை செய்யப்பட்டமையும் கண்டுபிடிக்கப் பட்டது. அவர்களுக்கு எதிராக நாளை வெள்ளிக்கிழமை ஹற்றன் நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்படவுள்ளது. கைப்பற்றப்பட்ட பொருள்கள் தற்போது ஹற்றன் டிக்கோயா நகரசபையில் வைக் கப்பட்டுள்ளன-என்றார்.

குறித்த சோதனை நடவடிக்கையில் ஹற்றன், டிக்கோயா நகரசபையின் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் கினி [illegible] வைத்திய அதிகாரி அலுவலகத்தின் [illegible] பரிசோதகர்களும் இணைந்து மேற் கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?



**மேடம்:** அலைச்சல் இருந்தாலும் சிறுசிறு ஏமாற்றமும் வந்து நீங்கும். உங்களை நீங்களே குறைத்து மதிப்பிடாதீர்கள். நீங்கள் சிலருக்கு நல்லது சொல்லப்போய் பொல்லாப்பாக முடியும். வியாபாரத்தில் இரகசியங்களை வெளியிட வேண்டாம்.



**இடபம்:** மனசாட்சிக்கு விரோதமின்றிச் செயற்பட வேண்டுமென நினைப்பீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். சக ஊழியர்களுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள்.



**மிதுனம்:** உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். வியாபாரத்தில் புதிய முதலீடு செய்யலாம். உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரைகள் தருவார்கள். நீண்ட நாள் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள்.



**கடகம்:** வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். தைரியமாகச் சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமை குறையும். உயரதிகாரி ஆதரிப்பார். நட்பு வட்டம் விரியும். தாழ்வு மனப்பான்மை நீங்கும்.



**சிங்கம்:** உறவினர்களின் அன்புத் தொல்லைகள் விலகும். புண்ணிய தலங்கள் சென்று வருவீர்கள். எதிர்பாராத பணவரவு உண்டு. வியாபாரத்தில் திடீர் லாபம் உண்டு. உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.



**கன்னி:** குடும்பத்தில் அமைதி நிலவும். சகோதர வகையில் நன்மை கிட்டும். பழைய கடன் தீரும். வெளிவட்டாரத்தில் கௌரவம் கிட்டும். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**நாளை**

மார்கழி -27 வெள்ளிக்கிழமை 11.01.2013
திதி: அமாவாசை பி.இ 01.59 வரை
நட்சத்திரம்: பூராடம் பி.இ 12.17 வரை
சுபநேரம்: 06.33- 08.03 வரை
ராகுகாலம்: 11.33- 12.33 வரை



**துலாம்:** சகோதரர்களால் பயனடைவீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. உங்கள் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். வியாபார ரீதியாக பிரபலங்களைச் சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார்.



**விருச்சிகம்:** நினைத்த வேகத்தில் சில வேலைகளை முடிக்க முடியாமல் தடை, தாமதங்கள் ஏற்படும். உறவினர்கள், நண்பர்களுடன் உரிமையுடன் பேசி பெயரைக் கெடுத்துக் கொள்ளாதீர்கள். முன்கோபத்தால் நல்லவர்களின் நட்பை இழக்க வேண்டி வரும்.



**தனுசு:** அநாவசியச் செலவுகளைக் குறையுங்கள். உறவினர்களால் சங்கடங்கள் ஏற்படும். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். வியாபாரத்தில் ஓரளவு லாபம் வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் மறைமுக நெருக்கடிகள் ஏற்படலாம்.



**மகரம்:** உறவினர்கள் ஒத்துழைப்பார்கள். இங்கிதமாகப் பேசி கடினமான காரியங்களையும் சாதிப்பீர்கள். பிரபலங்களின் நட்பு கிட்டும். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்து கொள்வீர்கள்.



**கும்பம்:** உறவினர்கள் பாராட்டுவார்கள். எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். நண்பர்களால் ஆதாயமடைவீர்கள். வியாபாரத்தில் அனுபவம் உள்ள வேலையாள்கள் அமைவார்கள். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள்.



**மீனம்:** புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும். நல்ல நண்பர்களைச் சந்திப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். மாணவர்கள் பரபரப்புடன் காணப்படு வார்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 3 | | | 4 | | 1 | | 7 |
| | | 5 | | | | 8 | | 3 |
| | 1 | | 6 | 2 | | 9 | 4 | |
| | 5 | | 3 | | | 7 | | 4 |
| 3 | | | 8 | | 1 | | | 9 |
| 1 | | 7 | | | 4 | | 8 | |
| | 7 | 1 | | 8 | 9 | | 3 | |
| 9 | | 4 | | | | 5 | | |
| 2 | | 3 | | 6 | | | 9 | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 6 | 8 | 2 | 3 | 1 | 5 | 4 | 9 |
| 9 | 4 | 2 | 6 | 5 | 8 | 1 | 7 | 3 |
| 3 | 1 | 5 | 4 | 9 | 7 | 8 | 6 | 2 |
| 5 | 7 | 3 | 8 | 2 | 6 | 4 | 9 | 1 |
| 4 | 2 | 6 | 9 | 1 | 3 | 7 | 5 | 8 |
| 1 | 8 | 9 | 7 | 4 | 5 | 2 | 3 | 6 |
| 8 | 9 | 4 | 3 | 7 | 2 | 6 | 1 | 5 |
| 2 | 3 | 1 | 5 | 6 | 4 | 9 | 8 | 7 |
| 6 | 5 | 7 | 1 | 8 | 9 | 3 | 2 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்படவேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

## வைத்திலிங்கம் தியாகராஜா

(ஓய்வுபெற்ற ஆசிரியர்,
யா/புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி)

தோற்றம் 1930.10.23 | மறைவு 2012.12.10



**தியாக விளக்கிற்கோர் கண்ணீர் அஞ்சலி**

புதுவைக் கலைவானில் நின்றொளிர்ந்த கலைமதியே!
பொதுப்பணி என விதைத்த தியாகராஜா அருள்நிதியே!
அன்பின் திருவுருவே அமைதியின் பெட்டகமே
மங்காத மணி விளக்கே ஒளி மறைந்த மாயம் ஏனோ?
மலரால் குளத்திற்குப் பெருமை எவ்வாறோ
இவரால் குலத்திற்குப் பெருமை அவ்வாறே
தீர்ந்து போகாது சிந்தையில் உதிப்பது
தீர்க்க தரிசனக் சீரிய வார்த்தைகள்!

அன்புக்கு அடையாளம் நீயெனக் கண்டு
பண்பிற்கு உதாரணம் உனை எனக் கொண்டு
அன்போடு பண்பை அள்ளியெடுத்திட
ஆறுதல் கண்ட திசை பாறி வீழ்ந்ததோ!

கூட்டமாய் கூடி குலவிடும் போதும்
கூறிடும் வார்த்தைகள் மென்மைசேர் அருள்மொழியே
கண்களில் கருணையும் பாசமும் பரிவுடனே
காட்டிய ஆசானே! காலனுடன் போனாயோ!

பழுத்த புலமையே பார் உனக்கு வெறுத்ததோ?
படலை திறந்து வந்தோம் அன்புக் கலை பெற்றிடவே
நேர் கோடாய் வாழ்ந்து வாழவைத்த இனியவரே
வானிருந்து வழிகாட்டாயோ சாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம்!

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**
"பாமா வாசா", சிவன்கோயிலடி, புத்தூர் மேற்கு.

(28119)(2.6.7)



# மரண அறிவித்தல்

## ஐயாத்துரை தங்கமுத்து



கோப்பாய் வடக்கு, கலம்பரையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஐயாத்துரை தங்கமுத்து நேற்று (09.01.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னக்குட்டி -தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்ற ஐயாத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் நல்லம்மா (நுணாவில்), கந்தசாமி (கனடா), ராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், நாகரத்தினம், தங்கராசா (நுணாவில்), கமலாதேவி (கனடா), காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம், ரத்தினம், பூரணம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார். இராதாதேவி, பாலச்சந்திரன், மகேந்திரன் (கனடா), ஞானச்சந்திரன் (ஆசிரியர் பயிற்சி கலாசாலை, கோப்பாய்), தவேந்திரன் (பிரான்ஸ்), ரவிச்சந்திரன் (ஆசிரியர் பயிற்சி கலாசாலை, கோப்பாய்), ஜெயச்சந்திரன் (கனடா), பிறேமச்சந்திரன் (வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி), சுதாகரன் (பாரதிபுரம் வித்தியாலயம், கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு தாயும், மகாலிங்கம் (ஓய்வுபெற்ற வயலக்கல்வி ஊழியர், கிளிநொச்சி), பத்மராணி (இலங்கை மின்சார சபை, சுன்னாகம்), கமலாதேவி (கனடா), மதிவதனா, கோமதி (பிரான்ஸ்), கலைவாணி (யாழ். போதனாவைத்தியசாலை), தேவறஜனி (கனடா), லோஜினி, வினோதினி ஆகியோரின் அன்பு மாமியும், சசிக்குமார், றேணுகா, சுகுமார், சுகந்தன் (பிரான்ஸ்), சுதர்சன் (Intrip கச்சேரி யாழ்ப் பாணம்), விதுப்பிரியா (நுண்கலைப்பீடம்), நிருத்திகா, கேதாரணி, கஜனி, சுபஸ்திகன், அஞ்சலிகா (பிரான்ஸ்), தனுசன் (கனடா), தீபிகன் (கனடா), சுகநந்தன், பிரியங்கா, சஜீவன், பேபிசா, திலக்ஷிகா, அர்ச்சயன், கோபிகன், சிவநந்தன், ஜெயவேணி ஆகியோரின் பேர்த்தியும், மதுநிலா, தர்விஷன், பரணிதா, சயூரன் ஆகியோரின் பூட்டி யும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (10.01.2013) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

[illegible],
[illegible] க்கு.

தகவல்:
**குடும்பத்தினர்**
(ஐ. பாலச்சந்திரன்)

(28120)(6.7.45)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் 5 புலமைப்பரிசில்களை அதிகரிக்க ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு, ஜன.10

ஊழியர் நம்பிக்கை நிதிய அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு வழங்கப்படும் தரம் 5 புலமைப்பரிசில்களை அதிகரிக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார்.

இதற்கமைய புலமைப் பரிசிலுக்குத் தெரிவுசெய்யப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை ஏழாயிரமாக அதிகரிக்குமாறு ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நம்பிக்கை நிதிய அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்குத் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும்போது 15 ஆயிரம் ரூபா புலமைப்பரிசில் தொகை வழங்கப்படுகிறது.

இதற்காக 105 மில்லியன் ரூபா ஒதுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஊழியர் நம்பிக்கை நிதிய அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்குத் தரம் 5 புலமைப் பரிசில் வழங்கும் நடைமுறை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தொழில் மற்றும் தொழில் பயிற்சி அமைச்சராகப் பதவி வகித்த காலப் பகுதியில் அறிமுகம் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் நான்காம் ஆண்டு நினைவு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. அவரது குடும்பத்தினர் மற்றும் ஊடகவியலாளர்கள், விகாரமாதேவி பூங்காவுக்கு முன்னால் லசந்தவின் உருவப் படத்துக்கு முன் மெழுகுவர்த்திகளை ஏற்றி அஞ்சலி செய்தனர்.

## தமிழ்மொழி மூலமான பாடசாலைகளுக்கான வெட்டுப்புள்ளிகள் இருவாரங்களில் வெளியீடு

கொழும்பு, ஜன.10

2012 ஆம் ஆண்டு நடைபெற்ற ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் தமிழ்மொழி மூலமான பாடசாலைகளுக்கான வெட்டுப் புள்ளிகள் இன்னும் இரண்டு வாரங்களுக்குள் வெளியிடப்படும் என்று பரீட்சை கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

சிங்கள மொழிமூலமான பாடசாலைகளுக்கான வெட்டுப்புள்ளிகள் பரீட்சைகள் திணைக்களத்தினால் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (த-சி)

## அரச மருத்துவ நிபுணர்கள் தனியார் வைத்தியசாலையில் பணியாற்றத் தடை

கொழும்பு, ஜன.10

அரச மருத்துவ நிர்வாக சேவையில் கடமையாற்றும் மருத்துவ நிபுணர்கள் தனியார் வைத்தியசாலைகளில் பணியாற்றுவதற்குத் தடை விதிக்கப்பட உள்ளது.

இது தொடர்பாக விசேட சுற்றறிக்கை எதிர்வரும் பெப்ரவரி மாதம் வெளியிடப்படும் என்று சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் நிஹால் ஜயத்திலக்க தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

அரச மருத்துவ நிர்வாக சேவையில் கடமையாற்றும் மருத்துவ நிபுணர்கள் தனியார் வைத்தியசாலைகளில் பணிபுரிவதற்கு ஏற்கனவே தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

இருந்த போதிலும் ஒரு சிலர் தொடர்ந்தும் தனியார் வைத்தியசாலைகளில் கடமையாற்றுவது தெரிய வந்திருக்கின்றது. இதனைக் கருத்தில் கொண்டு தான் இந்த விசேட சுற்றறிக்கை பெப்ரவரி மாதம் வெளியிடப்படவிருக்கின்றது- என்றும் அவர் கூறினார்.

# பெண்கள், சிறுவர் துஷ்பிரயோகம் மஹிந்த ஆட்சிக் காலத்தில் உச்சம்

### நாட்டில் சட்டம் சரியாகச் செயற்படவில்லை என்பது நிருபணமாகியுள்ளது என்கிறார் ஐ.தே.க. எம்.பி. திஸ்ஸ

கொழும்பு, ஜன.10

"பெண்கள் மற்றும் சிறுவர்களைப் பாதுகாக்கும் சட்டம் சரியான முறையில் செயற்படாமையே இவர்கள் மீதான வன்முறைகளும், துஷ்பிரயோகங்களும் நாட்டில் அதிகரித்துள்ளமைக்குக் காரணமாகும். ஜனாதிபதி மஹிந்தவின் ஆட்சிக் காலத்தில் அறிக்கைப்படுத்தப்பட்ட தகவல்களின்படி சுமார் 15 ஆயிரம் பெண்கள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் இடம்பெற்றுள்ளமை இதற்குச் சான்றாகும்."

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.



பெண்கள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் நாட்டில் அதிகரித்துள்ளன என்பதை உதவி சட்டமா அதிபர் ஏற்றுக்கொண்டுள்ளார். கூகுள் இணையதளத்தில் பாலியல் தேடலில் முதலிடம் பெற்றதுபோல இதிலும் இலங்கை உலக வாரியத்தில் முதலிடம் பெறலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க் கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டில் பெண்கள் மற்றும் சிறுவர் மீதான துஷ்பிரயோகங்கள், வன்முறைகள் அதிகளவில் அதிகரித்துள்ளன என உதவி சட்டமா அதிபர் தெரிவித்தார். கடந்த 3ஆம் திகதி இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்படி கருத்தைத் தெரிவித்தார்.

பெண்கள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் நாட்டில் அதிகரித்துள்ளன என அரசே ஒப்புக்கொண்டு கருத்துத் தெரிவிக்கிறது. இதுதான் ஆசியாவின் ஆச்சரியம்.

கடந்த வருடம் டில்லியிலுள்ள மாணவி ஒருவர் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதனால் அதற்கு முழு இந்தியாவுமே கடும் எதிர்ப்புத் தெரிவித்துவருகின்றது. ஆனால், இலங்கையில் கடந்த 5 வருடகாலப் பகுதிக்குள் 15 ஆயிரம் பெண்கள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் இடம்பெற்றுள்ளன.

எமது கட்சியின் ஆட்சி நிலவிய 1990ஆம் ஆண்டு முதல் 1994ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 907 பெண்கள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்களே இடம்பெற்றன. ஆனால், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் இவை பெருமளவில் அதிகரித்துள்ளன.

இதன்படி அறிக்கைப் படுத்தப்பட்ட தகவல்களுக்கமைய கடந்த 2006ஆம் ஆண்டு ஆயிரத்து 463 சம்பவங்களும், 2007ஆம் ஆண்டு ஆயிரத்து 397 சம்பவங்களும், 2008ஆம் ஆண்டு ஆயிரத்து 592 சம்பவங்களும், 2009ஆம் ஆண்டு ஆயிரத்து 524 சம்பவங்களும், 2010ஆம் ஆண்டு ஆயிரத்து 854 சம்பவங்களும், 2011ஆம் ஆண்டு ஆயிரத்து 631 சம்பவங்களும் என சுமார் 10 ஆயிரம் பெண்கள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் இடம்பெற்றுள்ளன.

அறிக்கையிடப்படாத தகவல்களின்படி சுமார் 15 ஆயிரத்துக்கும் அதிகமான சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன. அப்படியெனில், ஒரு நாளைக்கு நாட்டில் எத்தனை பெண்கள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் இடம்பெறுகின்றன - என்றார். (த-சி)

## சீரற்ற காலநிலையால் பதுளை, நுவரெலியா மாவட்டங்களில் தொடர்ந்தும் அனர்த்தம்

கொழும்பு, ஜன.10

சீரற்ற காலநிலையால் இரண்டு மாவட்டங்களில் உள்ள பல பிரதேசங்களில் மண்சரிவு, பாறைச்சரிவு, அணைக் கட்டுடைவு போன்ற அனர்த்தங்கள் ஏற்படக்கூடும் என தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் அபாய எச்சரிக்கை விடுத்துள்ளது. இதனால் குறித்த பகுதிகள் நேற்றுமுன்தினம் மாலை 4 மணி தொடக்கம் 24 மணித்தியாலங்களுக்கு அனர்த்த பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களே இவ்வாறு அனர்த்த எச்சரிக்கை மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

நுவரெலியாவில் - வலப்பனை, ஹங்குராங் கெத்த, கொத்மலை, அம்பகமுவ கோறள, நோர்டன் பிரிஜ், லக்ஷபான, காசர்ரீ ஆகிய பகுதிகளில் இவ்வாறு அனர்த்தம் ஏற்பட வாய்ப்புள்ளாதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பதுளை மாவட்டத்தில் மஹியங்கனை பிரதேச செயலாளர் பிரிவைத் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் அனர்த்தம் ஏற்படலாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மழையுடன் கூடிய காலநிலை நீடிப்பதால் பல நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதால் மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவுறுத்தியுள்ளது.

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையினால் மீனவர்கள் மாத்தறையிலிருந்து ஹம்பாந்தோட்டையூடாக திருகோணமலை வரையான கடற் பரப்பிற்குள் மீன்பிடிக்கச் செல்வதை தவிர்த்துக் கொள்ள வேண்டுமென வானிலை அவதான நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் எஸ்.எம்.காரியவசம் எச்சரித்துள்ளார்.

இதேவேளை, ஏனைய பகுதிகளில் கடலுக்குச் செல்லும் மீனவர்களும் அவதானத்துடன் செயற்பட வேண்டுமெனவும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். இலங்கைக்கு கிழக்கே வங்காள விரிகுடாவில் நிலைகொண்டிருக்கும் தாழமுக்கம் வலுவிழந்துள்ள போதும், இலங்கையை நோக்கி நகர்வதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன.

தாழமுக்கமும் தென் கிழக்கு பருவப்பெயர்ச்சியும் நாட்டில் சீரற்ற காலநிலையை தோற்றுவித்திருப்பதனால், கடலில் கடுங்காற்றுடன் மழை பெய்வதுடன், மாத்தறையிலிருந்து ஹம்பாந்தோட்டையூடாக திருகோணமலை வரையான கடலில் அடிக்கடி பெரும் கொந்தளிப்புகள் இடம்பெற வாய்ப்பிருப்பதனால், கடற்றொழிலுக்கு செல்பவர்கள் குறித்த காலப்பகுதிக்குள் கடலுக்குச் செல்வதனை தவிர்ப்பதே சிறந்ததென்றும் அவர் தெரிவித்தார். (த-சி)

## ஏற்றுமதி அபிவிருத்தி சபை தலைவர் இராஜினாமா

கொழும்பு, ஜன.10

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் தலைவர் பதவியிலிருந்து ஜனக ரத்னாயக்க நேற்று இராஜினாமா செய்துள்ளார்.

இராஜினாமாக் கடிதத்தை நேற்றுக் காலை அமைச்சர் றிஷாத் பதியுதீனுக்கு அவர் அனுப்பி வைத்துள்ளார்.

பிரதம நீதியரசர் விவகாரத்தில் முக்கிய சாட்சிகளில் ஒருவராக அவர் காணப்படுவதை அடுத்தே குறித்த தலைவர் பதவியிலிருந்து ஜனக ரத்னாயக்க இராஜினாமாச் செய்ததாக அறிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, சபையின் புதிய தலைவராக தற்போதைய ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் நிறைவேற்றுப் பணிப்பாளராக கடமையாற்றிவரும் கலாநிதி யூசுப் கே.மரைக்கார் நியமிக்கப்பட்டுள்ளதாக அமைச்சு வட்டாரங்களிலிருந்து தெரிய வருகின்றது.

## இலங்கையில் லஞ்ச, ஊழல்கள் முறைப்பாடு 2012 இல் உச்சத்தில்

### கல்வித்துறையில்தான் அதிகமாம்

கொழும்பு, ஜன.10

லஞ்சம் பெறுவது தொடர்பில் கிடைக்கப் பெறும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதாக இலஞ்சம், ஊழல் ஒழிப்பு ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

2012ஆம் ஆண்டில் மாத்திரம் லஞ்சம், ஊழல் பெற்றமை தொடர்பில் 3163 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகம் லக்ஷ்மி ஜயவிக்ரம தெரிவித்தார்.

2011ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2012ஆம் ஆண்டில் இலஞ்சம் பெற்ற சம்பவங்கள் அதிகம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2012ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற லஞ்ச, ஊழல் முறைப்பாடுகளில் 440 முறைப்பாடுகள் கல்வித்துறை சம்பந்தப்பட்டதென தெரிவித்த லக்ஷ்மி ஜயவிக்ரம, பொலிஸ் துறை தொடர்பில் 318 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தெரிவித்தார்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் உள்ளூராட்சி சபை தலைவர்கள் தொடர்பில் கிடைக்கப்பெற்ற இலஞ்ச, ஊழல் முறைப்பாடுகளில் உயர்வு காணப்படுவதாக அவர் கூறினார்.

லஞ்சம், ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவால் 2012ம் ஆண்டு 147 தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் அதில் 77 தேடுதல்கள் வெற்றியளித்துள்ளன.

அதன்போது 95 பேர் கைது செய்யப்பட்டதுடன், இருபது பேர் பொலிஸார் என லஞ்சம், ஊழல் ஒழிப்பு ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

இலஞ்சம் மற்றும் ஊழல் குறித்து எந்தவொரு நபரும் 1954 என்ற இலக்கத்திற்கு அழைத்து அறிவிக்க முடியும் என இலஞ்சம், ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு அறிவித்துள்ளது. (த-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீசாலையில் கொள்ளை; நகைகள், பணம் 'அபேஷ்'

தென்மராட்சி,ஜன.10

ஹயஸ் வாகனத்தில் வந்து இறங்கிய பத்துப் பேர் அடங்கிய கும்பல் வீட்டுக்காரரை கட்டிவைத்துவிட்டு 20 ஆயிரம் ரூபா பணத்தினையும் தங்க நகைகளையும் அத்துடன் கவரிங் நகைகளையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 7 மணிக்கு மீசாலை கிழக்கில் இடம்பெற்றது.

வெளிநாட்டிலிருந்து வந்திருந்தவரை குறிவைத்து திருட வந்தவர்கள் வீட்டுக்குள் சென்று அங்குள்ளவர்களை அறைகளில் கட்டிப்போட்டுவிட்டு, பொருள்களைத் திருடியுள்ளனர்.

அங்கு லாச்சியில் வைக்கப்பட்டிருந்த கவரிங் நகைகளையும் 20 ஆயிரம் ரூபா பணத்தையும் அபகரித்துச் சென்றதுடன் தங்க நகைகளையும் கொள்ளையிட்டுள்ளனர்.

கொள்ளையர் வீட்டுக்குள் நின்ற வேளையில் வெளிநாட்டிலிருந்து வந்தவர் வீட்டுக்குள் வந்த போது, அவரைத் தாக்கி அவர் அணிந்திருந்த நகைகளை பறித்துள்ளனர். அவர் அங்கிருந்து தப்பியோடியதால் கொள்ளையர் வாகனத்தில் ஏறித் தப்பிச் சென்றதாகவும் தெரிவிக் கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது என்று கூறப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த கணபதிப்பிள்ளை விஜயரட்ணம் (வயது 56) என்பவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-9)

## பட்டிப் பொங்கல்

பசுக்கள், இடபங்கள் பாதுகாப்பு இணையத்தின் ஏற்பாட்டில் மாபெரும் பொங்கல் விழா எதிர்வரும் 15 ஆம் திகதி முற்பகல் 10மணிக்கு யாழ். சத்திரச் சந்தியில் உள்ள ஞான வைரவர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

வருடாந்தம் தைப் பொங்கல் பண்டிகையின் மறுநாளான பட்டிப் பொங்கல் தினத்தன்று பசுக்களுக்கு நன்றி செலுத்தும் வகையில் பசுக்களை ஊர்வலமாக ஆலயத்தைச் சூழ அழைத்து வந்து தமிழர் பண்பாடுகளைப் பிரதிபலிக்கும் வகையில் மாபெரும் விழாவாக பசுக்கள் இடபங்களின் பாதுகாப்பு இணையம் சத்திர ஞான வைரவர் ஆலயத்தின் பரிபாலன சபையுடன் இணைந்து கொண்டாடி வருகின்றது.

தீவக அரிமாக் கழகத்தினர் உட்பட ஏனைய லயன் கழகத்தவர் வர்த்தகர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.(ம-14)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 28.08.1935

ஆண்டவன் அடியில் 14.01.2010

### திருமதி மனோன்மணி சோதிராசா

திதி: சதுர்த்தசி- 10.01.2013

அன்பின் உறைவிடமே நீங்கள் எமைப்பிரிந்து - மூன்றாண்டுகள் சென்றதுவே
எங்களை தவிக்கவிட்டு- ஏன் அம்மா போனாயோ உங்கள் பிரிவு எம்மை மிக வாட்டி வதைக்குதம்மா
காணும் இடமெல்லாம் உங்கள் நினைவு இறைவன் எங்கள் கவலைகளை மாற்றுவாரோ ?
சிவன் நிழலில் அம்மாவின் ஆன்மா சாந்தி பெற உளமாரப் பிரார்த்திக்கின்றோம்.

34, மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 0213737307,
0779217908.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(c/5439)(6.7.11)

## நீங்கா நினைவில் ஓராண்டு...



### திருமதி பரமேஸ்வரி நல்லதம்பி

(நயினாதீவு)

மண்ணகம்:- 27.05.1943

விண்ணகம்:- 23.12.2011

அன்னை பரமேஸ்வரி பதம் அடைந்து
ஆண்டொன்று ஆனதம்மா - உன்
கருணை உள்ளம் மறவோம் - நாம்
ஆண்டாண்டு கடந்தாலும் அம்மா!

இல.106,சம்பியன் லேன்,
கொக்குவில்.

-குடும்பத்தினர்.

உதயன்
விளம்பர் தொடர்புகளுக்கு
adv@uthayan.com
0115671111

## மரண அறிவித்தல்

### மயில்வாகனம் மகேஸ்வரன்

(முன்னாள் ஊழியர் Mascons Ltd, புன்னாலைக்கட்டுவன்)

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் உசன் மற்றும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் மகேஸ்வரன் இத்தாலியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்(இளைப்பாறிய உப தபால் அதிபர்)- நேசமணி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியர்)- தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், சிவரஞ்சினியின் அன்புக் கணவரும் உமேஷின் (பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி மாணவன்) அன்புத் தந்தையும், நகுலேஸ்வரன்,கேதீஸ்வரன், ஜெகதீஸ்வரன்,யோகலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும் சகுந்தலாதேவி, அனுஷ்யா, சிவசாந்தி, கமலநாதன் சிவகுரு நாதன், சிவயோகநாதன்(ஆசிரியர்,வ/செட்டிக்குளம் ம.வி) சிவ சாந்தினி (ஆசிரிய ஆலோசகர், மட்டக்களப்பு) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இத்தாலியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பெரேரா ஒழுங்கை,கொழும்பு-06
தொ.பே.இல:0112553901

தகவல்:
மனைவி,மகன்.

(28205)(6.7.4)

## அரசாங்க அறிவித்தல்

முல்லைத்தீவு மாவட்ட செயலகம், பிரதேச செயலகங்கள் மாவட்டச் செயலகத்துடன் இணைந்த திணைக்களங்கள் என்பவற்றுக்கான வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல் 2013

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கும், சகல பிரதேச செயலகங்களுக்கும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் பொருள்கள், சேவைகள் வழங்குவதற்கு விருப்பமுடைய வழங்குநர்கள்/ஒப்பந்தகாரர்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் என்பவற்றிடம் இருந்து 2013 ஆம் ஆண்டுக்கான பொருள்கள் சேவைகள் வழங்குநர்களை பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதற்கான விண்ணப்ப படிவங்களை மாவட்டச் செயலக நிதிக்கிளையில் 23.01.2013 வரை அலுவலக நாள்களில் காலை 09 மணி தொடக்கம் பி.ப 03 மணிவரையும் பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவத்தினைக் கடித உறையின் (9" x 4") இடது பக்க மேல் மூலையில் "வழங்கல்கள் / சேவைகள் பதிவு செய்தல் 2013" எனக்குறிப்பிட்டு பதிவுத்தபாலில் அனுப்புவதாயின் **"அரசாங்க அதிபர், நிதிக்கிளை, மாவட்ட செயலகம், முல்லைத்தீவு"** எனும் முகவரிக்கும் நேரடியாக கையளிப்பதாயின் மாவட்டச் செயலகத்தின் நிதிக்கிளையிலும் 31.01.2013 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும்

### வழங்கல்கள்

1. காகிதாதிகள், எழுது பொருள்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருள்கள்.
2. தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் (மரம் / உருக்கு)
3. கணினிகள், கணினியுடன் தொடர்புடைய ஏனைய இயந்திரங்கள், றோணியோ இயந்திரங்கள் / போட்டோக்கொப்பி இயந்திரங்கள் / தொலைபேசிகள் / தொலைநகல்கள் / தட்டச்சு இயந்திரங்கள் / இவற்றுடன் தொடர்புடைய ரோனர்கள், றிபன்கள் மற்றும் ஏனைய அலுவலக தளபாடங்கள்.
4. இயந்திரக்கருவிகளும் அதன் உதிரிப்பாகங்களும்
5. ஜன்னல் திரைச்சீலைகள், சீருடைகள் மற்றும் துணி வகைகள்.
6. மின்சாரப் பொருள்களும் அதன் உதிரிப்பாகங்களும் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பொருள்களும்.
7. கட்டட இரும்புப் பொருள்கள், தீந்தை, வாணிஸ் மற்றும் சகல ஹாட்வெயர் பொருள்களும்.
8. தும்புத்தடி, விளக்குமாறு, கால் துடைப்பங்கள், மொப்பர்கள், வைப்பர்கள்.
9. கார்பிக், விம், பினோல், சவசர்க்காரம், மாபிள் அசிட், குளோரின், எயார் பிறஷ்னர்கள்.
10. நீர் இறைக்கும் மோட்டர்கள், அதன் உதிரிப்பாகங்கள் மற்றும் துணை உறுப்புக்களான பைப், பெண்ட், சொக்கற் வகைகள்.
11. மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் மற்றும் டயர், டியூப்புக்கள், பற்றரிகள்
12. பிளாஸ்ரிக், பைபர் கிளாஸ் இனால் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களான கதிரை, மேசை போன்ற பொருள்கள்.
13. பால்மா வகைகளும் பிளாஸ்ரிக் குவளை வகைகளும். (Nescafe Premix, Nestea & Disposal Cups, Etc.) குடிநீர் போத்தல்கள், மென்பானங்கள் (சோடா)
14. கட்டட மற்றும் வாகன வளி பதனாக்கி (A/C)
15. தோல் வகை உற்பத்தி பொருள்கள்
16. விளையாட்டு பொருள்களும் அதனுடன் தொடர்புடைய பொருள்களும்
17. கல், மண் வகைகள், உற்பத்தி செய்யப்பட்ட கட்டட பொருள்கள்.
18. உலர் மின்கலப் பொருள் வகைகள்.
19. ஒலிபெருக்கி சாதனங்களும், ஒலி வாங்கி சாதனங்களும் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பொருள்கள்.

### சேவைகள் / திருத்தங்கள்

1. கட்டட நிர்மாணம் மற்றும் கட்டட வேலைகள் மற்றும் சேவைகள்.
2. மோட்டார் வாகனங்கள் திருத்த வேலை / சுத்திகரிப்பு வேலைகள், பற்றரி திருத்த வேலைகள் (Services)
3. அச்சிடுதல், இறப்பர் ஸ்ராம்புகள், திகதி ஸ்ராம்புகள்
4. அலுவலக அடையாள அட்டைகள் (Plastic)
5. அலுவலக இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் திருத்த வேலைகளும் பராமரிப்புக்களும் (கணினிகள், கல்குலேற்றர்கள் / றோனியோ இயந்திரங்கள் / போட்டோக்கொப்பி இயந்திரங்கள், தொலைநகல்கள் / தட்டச்சு இயந்திரங்கள் போன்றன).
6. குளிர்சாதனப்பெட்டிகள், எயார் கொண்டிசனர்கள், திருத்த வேலைகளும் பராமரிப்புக்களும்.
7. மர, உருக்குத் தளபாட திருத்த வேலைகள்.
8. பெயர் பலகை வரைதலும் பிளாஸ்ரிக் பெயர் பலகைகள் (3D உட்பட) செய்தலும்.
9. உள்ளக தொலைபேசி திருத்த வேலைகளும் பராமரிப்புக்களும்.
10. கணினி வலையமைப்பு.
11. மின் மோட்டார்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், மனி விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்துதல் மற்றும் பராமரித்தலும் மீள் முறுக்குதலும் (Winding).
12. மின்சார வயரிங் வேலைகள், கணினி வலைப்பின்னல் வேலைகள் மற்றும் சேவைகள்.
13. நீர் வழங்கும் குழாய்கள் பொருத்துதல் மற்றும் திருத்துதல்
14. அலுமினிய பிற்றிங் வேலைகள், பொருள்கள்.

### பதிவு தொடர்பானவை

மாவட்டச் செயலகத்தில் பொருள்கள் சேவைகள் வழங்குவது தொடர்பாகப் பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களிடம் இருந்தே 2013 ஆம் ஆண்டுகான பொருள்கள் சேவைகளுக்கான கூறுவிலைகள் பெறப்படும் என்பதனால் மாவட்டச் செயலகங்களுக்கோ, சகல பிரதேச செயலகங்களுக்கோ, மாவட்டச் செயலகத்துடன் இணைந்த திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கோ பொருள்கள், சேவைகள் வழங்க விருப்பமுடையவர்கள் மாவட்டச் செயலகத்தில் அல்லது பிரதேச செயலகங்களில் விண்ணப்பத்தினை பெற்று, பதிவுகளை மேற்கொள்ளவதற்காக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை மாவட்டச் செயலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

ந.வேதநாயகன்,
அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளரும்
மாவட்டச் செயலகம், முல்லைத்தீவு.

(C/5445)(2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# சட்ட விரோதமாக ஆஸி. செல்ல முயன்ற இலங்கை அகதிகள் சென்னையில் கைது

சென்னை, ஜன.10

தமிழகத்தில் பல்வேறு முகாம்களில் தங்கி இருந்த இலங்கை அகதிகள் அனுமதியில்லாமல் ஆஸ்திரேலியா தப்பிச் செல்ல முயன்றபோது தமிழக கியூ பிரிவு பொலிஸார் கைது செய்தனர்.

தமிழகத்தில் மதுரை, இராமேஸ்வரம் மண்டபம் ஆகிய பகுதிகளில் உள்ள பல்வேறு முகாம்களில் தங்கியிருந்த இலங்கை அகதிகள் ஒரு முகவர் மூலம் அனுமதியில்லாமல் ஆஸ்திரேலியாவுக்குத் தப்பிச் செல்லத் திட்டமிட்டனர்.

இதற்காக 28 பெண்கள், 10 ஆண்கள் 13 குழந்தைகள் உட்பட மொத்தம் 51 பேர் 3 வான்களில் குமுளி வழியாகச் செல்வதாக கேரளா பொலிஸார் தமிழக கியூப் பிரிவு பொலி ஸாருக்குத் தகவல் தெரிவித்தனர்.

**விசாரணைக்குப் பின்னர் தமிழகத்தில் உள்ள பல்வேறு முகாம்களில் மீண்டும் அனைவரையும் தங்க வைக்க ஏற்பாடுகள் செய்யப்படும்.**

பொலிஸ் அதிகாரி முருகன் தலைமையில் பொலிஸார் குமுளி சென்று தேக்கடி ரோட்டில் தங்கியிருந்த அகதிகளை கம்பம் பகுதிக்கு கொண்டு வந்து ஒரு மண்டபத்தில் தங்க வைத் தனர்.

இதுகுறித்து பொலிஸார் கூறுகையில், விசாரணைக்குப் பின்னர் தமிழகத்தில் உள்ள பல்வேறு முகாம்களில் மீண்டும் அனைவரையும் தங்க வைக்க ஏற்பாடுகள் செய்யப்படும் -என்றனர். (வ)

# பௌதிகக் கண்களின் எல்லை யாது?

பௌதிகக் கண்களினால் உலகின் புற அமைப்புகளையே காண முடிகின்றது. உள்ளகமாகவுள்ள தெய்வீகத்தைப் பார்க்க முடியாது. சர்ம சக்ஷு (பௌதிகக் கண்) மட்டுமுள்ள மனிதன் மிருகங்கள் பறவைகளிலும் பார்க்க எவ்விதத்திலும் மேலானவன் அல்லன்.

உடம்பை முழுமையாகவே காணமுடியாத பௌதிகக் கண்கள் நுண்ணியதான சிந்தையைப் பார்க்கமுடியாது. நுண்ணிதான சிந்தையைக் காணமுடியாதவிடத்து, அதனிலும் நுண்ணிதான ஆத்மாவை அதனால் எவ்வாறு காண முடியும்?



நன்றி
தெய்வீகம் மலரும் பொழுது

**சாயி சிந்தனை**

# சபரிமலை சென்று திருச்சியில் மாயமான இலங்கைச் சிறுவன் மீட்பு

சபரிமலை யாத்திரை செல்லும் வழியில், திருச்சியில் மாயமான இலங்கை சிறுவனை பொலிஸார் மீட்டு, உரியவர்களிடம் ஒப்படைத்துள்ளனர்.

சபரிமலை யாத்திரை செல்ல, இலங்கையிலிருந்து, குருசாமி சோமசுந்தரம் தலைமையில், 50 தமிழர்கள் கொண்ட குழுவினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 8.30 மணிக்கு திருச்சி விமான நிலையம் வந்தடைந்தனர். ஜீயபுரம் அருகே இருமுடி கட்ட திட்டமிட்டிருந்தனர்.

இதற்காக இருமுடி பொருள்களை வாங்குவதற்காக பெரியகடை வீதிக்கு பஸ்ஸில் சென்றனர். அவர்கள் இறங்கியபோது, குழுவில் வந்த சிவகுமாரின் மகன் சிவப்பிரகாசம், (வயது 12) என்ற சிறுவன், பஸ்ஸில் இருந்து இறங்காமல் சத்திரம் பஸ் நிலையத்துக்குச் சென்றுவிட்டார்.

அங்கிருந்து கலைஞர் அறிவாலயம் பகுதியில் சுற்றித் திரிந்த சிவப்பிரகாசம் குறித்து, போக்குவரத்து நிறுவன உரிமையாளர் சீனிவாசன் என்பவர், கோட்டை பொலிஸாருக்கு தகவல் கொடுத்தார்.

கோட்டை பொலிஸார் நடத்திய விசாரணையில், சிறுவன் குறித்த முழுவிவரம் தெரியவில்லை. அதையடுத்து சிவப்பிரகாசத்தை சிறுவர் பாதுகாப்பு தொண்டு நிறுவனத்தில் பொலிஸார் ஒப்படைத்தனர்.

இதற்கிடையே சிவப்பிரகாசத்தைத் தேடி வந்த குழுவினர் கோட்டை பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தனர். உடனடியாக, தொண்டு நிறுவனத்தில் இருந்த சிறுவனை பொலிஸார் வரவழைத்தனர்.

இலங்கை சபரிமலை குழுவில் வந்ததை உறுதி செய்து கொண்ட பொலிஸார், உரிய முறையில் அவர்களிடம் ஆவணங்களைப் பெற்றுக் கொண்டு, சிறுவனை அந்தக் குழுவினருடன் அனுப்பி வைத்தனர். (வ)

# இருநாட்டு மீனவ பிரதிநிதிகள் கூடி விரைவில் தீர்வு காண்பர்

## பாதுகாப்புத் துறை இணை அமைச்சர் கருத்து

டில்லி, ஜன.10

இந்திய, இலங்கை பிரதிநிதிகள் விரைவில் கூடி மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பார்கள் என்று மத்திய பாதுகாப்புத் துறை இணை அமைச்சர் ஜிதேந்திரசிங் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடலோரப் பாதுகாப்பை அதிநவீன கருவி மூலம் கண்காணிக்க அரசு தீவிர நடவடிக்கை எடுத்துள்ளது.

கடலோரப் பாதுகாப்பில் நாடு தன்னிறைவு பெற்றுத் திகழ்கின்றது.

2018 ஆம் ஆண்டுக்குள் மேலும் 77கப்பல்கள் கடலோரப் பாதுகாப்பு பணியில் சேர்க்கப்படும் - என்றார். (வ)

# உண்ணாவிரதமிருந்த ஈழ அகதிகளை நலம் விசாரித்தார் வைகோ

சென்னை,ஜன.10

செங்கல்பட்டு அகதிகள் முகாமில் உண்ணாவிரதம் இருந்து, உடல் நலம் பாதிக்கப்பட்டவர்களை ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ நேரில் சந்தித்து நலம் விசாரித்தார்.

செங்கல்பட்டு அகதிகள் முகாமில் உள்ள 10 பேர், தங்களைத் திறந்த வெளி முகாமுக்கு மாற்றக்கோரி, கடந்த சில தினங்களாக உண்ணாவிரதம் மேற்கொண்டனர்.

அவர்களில் சிலரது உடல் நிலை பாதிக்கப்பட்டதால் அருகில் உள்ள அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். இந்தநிலையில் மருத்துவமனைக்கு வைகோ சென்று, அகதிகளின் உடல் நலம் குறித்து விசாரித்தார்.

அகதிகள் விடுதலைக்குத் தேவையான அனைத்து ஒத்துழைப்பையும் கொடுப்பதாக அவர்களுக்கு உறுதியளித்தார். (வ)

**அருச்சனைச்சீட்டு விற்பனைக்கு ஆள் தேவை**

கன்னாதிட்டி அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தானத்திற்கு அருச்சனைச்சீட்டு விற்பதற்கும் அத்தோடு கணக்கு வேலை செய்வதற்கும் ஆள் தேவை.

சைவ, நல்லொழுக்கம் உடைய யாழ்.மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர்கள் தபால் மூலம் விண்ணப்பிக்கவும்.

செயலாளர்,
அருள் மிகு காளியம்பாள் தேவஸ்தானம், யாழ்ப்பாணம்.
(28203) (6.7.4)

# திருவாசகம் முற்றோதல்

சுழிபுரம்,ஜன.10

பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோயிலில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி முதல் திருவாசகம் முற்றோது தல் நடைபெறவுள்ளது. அயல் கிராமங்களில் வாழும் ஓதுவார்கள் பலர் பங்கு கொள்வர். (ம-28)

* * *

தென்மராட்சி, ஜன.10

சாவகச்சேரி கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் எதிவரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி தொடக்கம் திருவாசக முற்றோதல் கா. சிவஞானசுந்தரம் தலைமையிலான குழுவினரால் நடத்தப்படும். (ம-9)

# சாவகச்சேரி நகரில் நாய்களுக்கு தடுப்பூசி


தென்மராட்சி, ஜன.10

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய் தடுப்பூசி ஏற்றும் பணிகள் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஒலிபெருக்கி மூலம் வட்டார ரீதியாக அறிவிக்கப்பட்டு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதால் ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்படும் நிலையங்களுக்கு நாய்களைக் கொண்டு வந்து தடுப்பூசி மருந்தை ஏற்றிக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

**21 ஆவது பிறந்தநாள் நினைவும், 5ஆம் ஆண்டு நினைவஞ்சலியும்**

மலர்வு
10.01.1992



உதிர்வு
10.09.2008

**அமரர் நடராசா சத்திராஜ்**

தாயவள் வயிற்றினிலே பத்துத் திங்கள் எங்கள்
அனைவரின் நெஞ்சினில் நிரந்தரமாய் குடி கொண்டவனே!
எமதன் பிற்கினியவனே! நாவினிலே உன் நாமம் நாள் தோறும்
குயிலிசையாக தினம் தினம் உன் நினைவு ஞாபக நீரோடையாக
பார் போற்ற வாழ்ந்தவனே ! உனை நினைத்து வாடுகிறோ மவனியிலே
உன் ஆத்ம சாந்திக்காய் ஆண்டவன் அடி பணியும் உன் இனிய நெஞ்சங்கள்.

நீங்கா நினைவுடன்
குடும்பத்தினர்.
அச்செழு, நீர்வேலி.
(28201)(6.11)

**கண்ணீர் அஞ்சலி**



எமது நிறுவனத்தில்
பணியாற்றும்
சி.சிவநந்தனின் மனைவி
ரேணுகா
அவர்களின் பேர்த்தியார்
**திருமதி ஐயாத்துரை தங்கமுத்து**
அவர்களின் பிரிவால்
துயருறும் அவரது
குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்ம சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**வனிக்கா மெடிக்கஸ்**
உரிமையாளரும், ஊழியர்களும்.
203, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்: (28204)(6.2)

**உதயன்**
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**வீடு வாடகைக்கு**
சாவகச்சேரி நுணாவில் பருத்தித்துறை றோட்,
(பஸ்பாதை) 3 அறைகள் இணைந்த குளியலறை
மற்றும் சகல வசதிகளையும் கொண்ட வீடு
வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 0712287060
(28209)(6.1)



**மதுரா அழகுக் கலைப்பயிற்சி நிலையம்**
கோப்பாய்
(கோப்பாய் நாவலர் பாடசாலை அருகில்)
**12.01.2013 - சனிக்கிழமை**
**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

அழகுக்கலை டிப்ளோமா & அடிசனல் கோர்ஸ், பிறைடல் மேக்கப், மேக்கப், பேசியல், ஹெயாகட்டிங், ஸ்ரைலிங், ஹெயாகலறிங், ஹென்னாட் றீட்மென்ட், ஸ்பாட்றீட்மென்ட், பிம்பிள் றிமூவிங், பிளக்ஸ்பொட்றிமூவிங், நெயில் ஆர்ட், பெடிக்கியூர், மெனிக்கியூர், மெஹந்திடிசெனிங்ஸ்ரெயினிங், பேமிங், கேளிங், சாறிடிரெஸ்ஸிங், கிளீன்அப் வெஸ்ரேன்மேக்கப், ஒயில் மேக்கப், ஈவினிங்மேக்கப், டான்ஸிங்மேக்கப்.....

சாறிவேர்க், கேக், ஐசிங், தையல், ஹான்ட்வேர்க் ஆகிய பயிற்சிகள் நடைபெறுகின்றன.

பயிற்சியில் இணைய விரும்புவோர். 10.01.2013 வியாழன் காலை 10 -12 மணிவரை பயிற்சி நிலையத்தில் தங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும். பயிற்சி நிறைவில் தரமான சான்றிதழ் வழங்கப்படும். (பெண்கள் மட்டும்), ஓடர்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.



மதுரா அழகுக் கலைப்பயிற்சி நிலையம்,
பழைய வீதி, கோப்பாய். 077 9362 642
(28093) (45.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது ஆண்களே..!



தமது தன்னியல் கௌரவத்தை வெளிப்படுத்துவதற்காக மனிதர்கள் நவநாகரிகத்தை நாடிச் செல்கின்றார்கள். அவ்வாறே பூகோள மாற்றங்களுக்கு ஏற்ப தம்மை மாற்றிக் கொள்ளவும் மனிதர்கள் நவநாகரிகத்தை நாடிச் செல்கிறார்கள். எமது பிரதேசத்தில் நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது ஆண்களே.

எமது பிரதேச நவநாகரிகத்தில் அதிகம் செல்வாக்குச் செலுத்துவது தென்னிந்திய சினிமாப் படங்களாகும். பிரபல்யமான நடிகர் ஒருவரின் படம் வெளியானால் அந்தப் படத்தில் தலைமுடி தொடக்கம் பாதம் வரை அவர் பின்பற்றிய சகல 'ஸ்ரைல்களையும்' நவநாகரிகம் எனக் கருதி அப்படியே பின்பற்றுபவர்கள் ஆண்கள். இருந்த போதிலும் பெண்களும் சினிமாப் படங்களின் நவநாகரிகச் செல்வாக்குக்கு உட்படுகிறார்கள். ஆயினும் ஒப்பீட்டு ரீதியில் ஆண்களே குறிப்பாக இளைஞர்களே நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்கிறார்கள்.

தற்போதைய எமது இளைஞர்கள் மத்தியில் நவநாகரிமெனப் பின்பற்றப்பட்டு வரும் தலைமுடி அலங்காரம் (வர்ணம் பூசுதல்), தலைமுடியை சீராக வராது விடல், மெல்லிய தாடி மற்றும் மீசை வைத்தல், ஒற்றைக் காதில் தோடு அணிதல், இறுக்கமான உடை அணிதல், மோட்டார் சைக்கிள் வைத்திருத்தல், அதனை வேகமாகச் செலுத்துதலும் நவீன ரக செல்லிடத் தொலைபேசி வைத்திருத்தலும் அதனை நீண்ட நேரம் இயக்குதல் ஆகியன காணப்படுகின்றன.

இத்தகைய செயற்பாடுகளை நவநாகரிகச் செயற்பாடுகள் எனக் கருதி அதிகளவிலான இளைஞர்கள் பின்பற்றுவதோடு திசைமாறிச் செல்வதையும் அவதானிக்க முடிகின்றது.

பெண்களைப் பொறுத்தவரை நவநாகரிகம் என்று அவர்களால் கருதப்படும் செயற்பாடுகளில் உடனடியாக அன்றி படிப்படியாகவே அவற்றை அவர்கள் பின்பற்றுகிறார்கள். அதிகமாக குறிப்பிட்ட சிலர் மட்டுமே பின்பற்றுகிறார்களே தவிர எல்லாப் பெண்களும் அல்ல. ஆனால் ஆண்களைப் பொறுத்தவரை உடனடியாகவே அதிகமானோர் நவநாகரிகச் செயற்பாடுகளை அதிகம் நாடிச் செல்பவர்களாகக் காணப்படுகிறார்கள்.

வேகமாக மாறிவரும் இன்றைய சூழலில் நவநாகரிகத்தை ஏற்றுச் செயற்பட வேண்டியது அவசியமாக இருக்கின்ற போதிலும் எமது சமூக, பொருளாதார, கலாசார நிலைமைகளைக் கருத்தில் கொண்டு அதற்கேற்ப அதனை பின்பற்றுவதே சாலச் சிறந்ததாகும். இதற்கு மாறாக பெருமளவிலான இளைஞர்கள் தமது குடும்பம் எத்தகைய வறிய நிலையில் இருந்தாலும் நவநாகரிகச் செயற்பாடுகளில் அதிக நாட்டத்துடன் ஈடுபடுகிறார்கள்.

எனவே நவநாகரிகத்தை நாடிச் செல்வதில் பெண்களும் ஆண்களும் ஈடுபட்டாலும் பெண்களின் குறைந்தளவானோரும் ஆண்களில் அதிகளவானோரும் அதேநேரம் ஆண்களே அதிகளவிலான நவநாகரிகச் செயற்பாடுகளைப் உடனடியாகப் பின்பற்றுபவர்களாகவும் காணப்படுகிறார்கள். இதனால் நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது ஆண்களே எனக் கூறலாம்.

**ப.சிவானந்தன்,**
**பருத்தித்துறை.**

# ஓ ...அராஜகமே!

அதிகார வர்க்கத்து எடுபிடிகள்
யாழ். பல்கலையில்
மீண்டும் ஆடி முடித்தது
இனத்துவேசம்
கடந்த வருடம் அளவெட்டியில்
பின்னர் நாவாந்துறையில்... என
தொடர்ந்த அடிதடி அராஜகம்
இன்னும் ஓய்ந்த பாடில்லை
எம்மண்ணில்.....!

அப்பாவி உயிர்களைக் கொலைக் களமேற்றிய
யுத்தத்தின் இறுதி நாளை
வெற்றி விழா என்று பிரகடனப்படுத்தி
வீர எக்காளமிடும் நீ
அகமார நாம் நேசிக்கும்
எம்மண்ணின் நிலையான சரித்திரங்களுக்காக
ஆர்ப்பாட்டம் எதுவுமில்லாமல்
அமைதியான முறையில்
அனுஷ்டிக்கும் நினைவு நாளுக்கு மட்டும்
தடை விதிப்பது எந்த வகையில் நியாயம்?

காரணமற்ற கைதுகளாலும்
காடைத்தனமான தாக்குதல்களாலும்
எம் உணர்வின் அலைகளுக்கு
ஒருபோதும் விலங்கிட முடியாது...
ஊடகவியலாளர்கள் தாக்கப்படுவதாலும்
மக்கள் பிரதிநிதிகள் அச்சுறுத்தப்படுவதாலும்
உண்மைகள் எப்போதும் ஊமைகளாகவே உறங்கிவிடாது....!
புரிந்து கொள்....!
மாணவர்கள் எமது மண்ணின்
மாபெரும் சக்தி
மாணவர் எழுச்சி மகத்தான-எங்கள்
மக்கள் போராட்டத்தின் தொடர்ச்சி
மாணவர் நாளைய வரலாற்றின் விழுதுகள்
வளமானதோர் எதிர்காலத்தின்
வலிமைமிகு நம்பிக்கைத் தூண்கள்
மாணவரைச் சீண்டாதே....
வையகம் தாங்காதே.....
கல்விச் சாலை கலகச் சாலையல்ல
உணர்ந்து பின் தெளிவீரே!
போதும்... போதும்.. எம் தேசத்தில்
உன் வெறியாட்டம்
ஓ...... அராஜகமே எம் மண்ணை விட்டு ஒழிந்து போ.

**தமிழின் தோழன், குப்பிளான்.**

## அதிசயம்....

நாம் நித்திரைக்கு சென்றவுடன் தூங்கி விடுவது போல் தெரியும். ஆனால் நமது உடலில் அனைத்து உறுப்புகளும் ஒரே நேரத்தில் தூங்குவது இல்லை.

நாம் தூங்கத் தொடங்கும்போது முதலில் கண்கள் தூக்கத்தை தழுவும். பின்னர் வாசனையை உணரும் உறுப்புகள் , பின்பு காது இப்படியாக உறக்கத்திற்குள் செல்ல இறுதியாக தோல் தூங்கும்... விழிக்கும் போது இந்த செயற்பாடு தலைகீழாக நிகழும். ஒவ்வொரு உறுப்புகளும் விழித்து, பின்னர் இறுதியில் கண்கள் விழிக்கும். உண்மையில் இந்த செயற்பாடு அதிசயம் தான்.

**சிந்து சிவதாஸ், ஐங்கரன் வீதி, சுதுமலை.**

## விமர்சனம்



நீங்களும் எழுதலாம்....

நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது

**ஆண்களா?**
**பெண்களா?**

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.

தரமான விமர்சனங்கள் பிரசுரமாவதோடு சிறந்த விமர்சனங் களுக்குப் பரிசுகளும் வழங்கப்படும்.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள் ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-..........................................................

முகவரி :- ......................................................

......................................................

..........................    ..........................
திகதி    கையொப்பம்

**'இளவல்கள் வட்டம்',**
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# மாணவர் மையக் கல்வியும் பாடசாலைகளும்........

பிள்ளைகளைப் பண்பட வைக்கும் ஆலயமாக பாடசாலையைக் கருதும் நிலை இன்றும் மாறவில்லை. பாடசாலையின் அடித்தளம் அங்கு கல்வி கற்கும் மாணவர்கள் தான். மாணவர்களை மையப்படுத்தியே பாடசாலையின் சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. தற்காலத்தில் ''மாணவர் மையக்கல்வி'' முழுமையாக நடைபெற்ற வண்ணமே இருக்கின்றது.

கல்வித் தத்துவவியலாளரான பிளேட்டோ 'பிள்ளை மையக் கல்வியை மையப்படுத்தி தனது தத்துவங்களை வெளியிட்டுள்ளார். இதிலிருந்து பிள்ளைகளின் முக்கியத்துவம் எந்தக் காலத்திலும் மாறுபடாது என்பது எடுத்துக் காட்டப்படுகின்றது. மாணவர்களது உடல், உள ரீதியான தன்மைகள் கருத்தில் எடுக்கப்பட்டு கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

நாட்டின் எதிர்காலம் சிறப்பானதாக அமைய ஆசிரியர்கள் இன்றைய பாடசாலை மாணவர்களை வளம் நிறைந்தவர்களாக உற்பத்தி செய்ய வேண்டும். எந்தக் காலத்திலும் கல்வியினால் சகல விடயங்களையும் சாதிக்க முடியும். மாணவர்களை உயிருள்ளவர்களாகக் கருதி, சகல நடவடிக்கைகளிலும் பாரபட்சம் பார்க்காமல் ஆசிரியர்கள் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

மகாத்மா காந்தி முதல் சகலஅறிஞர்களும் ஏதோ ஒரு வகையில் பாடசாலைகளையும்,மாணவர்களையும் பற்றி கருத்துக்களை முன் வைத்துள்ளனர்.

இன்றைய பாடசாலைகளில் மாணவர் மையக்கல்வி மூலம் சிறப்பானதொரு கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இது தொடரும் பட்சத்தில் எதிர்காலம் வளமானதாக அமையும் என்பதில் ஐயமில்லை.



சிந்துஜா குலசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களப் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறைக்கு இராணுவத்தினரை ஏன் அரசு பயன்படுத்தக்கூடாது?

## முழுநாட்டையும் இராணுவமயமாக்கலாம் என்கிறார் சுரேஷ் எம்.பி.

(கே.பாரதிராஜா)

சிங்களப் பாடசாலைகளில் 17 ஆயிரம் ஆசிரியர் வெற்றிடங்கள் நிலவுகின்றபோது வடபகுதி தமிழ்ப் பாடசாலைகளில் மட்டும் ஏன் அரசு, இராணுவத்தினரை ஆசிரியர் சேவையில் அமர்த்துகின்றது? தமிழ்ப் பாடசாலைகளில் அரசு மேற்கொண்டுவருகின்ற இராணுவ ஆசிரியர் சேவையை ஏன் வெற்றிடங்கள் நிலவும் சிங்களப் பாடசாலைகளில் பரீட்சித்துப் பார்க்க முடியாது?

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று ஆவேசமாகக் கேள்வி எழுப்பியது.

வெற்றிடங்கள் நிலவுகின்ற சிங்களப் பாடசாலைகளில் இராணுவத்தினரை ஆசிரியர் சேவையில் அமர்த்தினால், முழு நாட்டையும் இராணுவமயமாக்கும் அரசின் பயணத்துக்கு மேலும் வலுசேர்க்கும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அஸாத் ஸாலி நிலையத்தில் நேற்று இடம்பெற்ற 'அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்துவோம்' என்ற அமைப்பின் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

''இலங்கையிலுள்ள சிங்களப் பாடசாலைகளில் ஆங்கிலம் மற்றும் விஞ்ஞானப் பாடங்களுக்கு 17 ஆயிரம் ஆசிரியர் வெற்றிடங்கள் நிலவுகின்றன என அரச தகவல்கள் தெரிவிக்கின்றன. இவ்வாறானதொரு நிலையில், வடபகுதியிலுள்ள தமிழ்ப் பாடசாலைகளில் சிங்களம் கற்பிப்பதற்கு இராணுவத்தினர் ஆசிரியர்களாக சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

தமிழர் பிரதேசங்களில் மட்டுமல்லாது, ஏன் தமிழ்ப் பாடசாலைகளிலும் ஆசிரியர்கள் என்ற போர்வையில் இராணுவப் பரவலாக்கல் மேற்கொள்கிறீர்கள் என்றும், தமிழ் மாணவர்களுக்கு சிங்கள இராணுவத்தினர் எவ்வாறு பாடம் கற்பிப்பார்கள் என்றும் அரசிடம் கேள்வி எழுப்பினோம்.

வடபகுதி தமிழ்ப் பாடசாலைகளில் சேவையில் அமர்த்தப்படும் ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்பட்டவர்கள் என்று அரசு கூறுகிறது.

வடக்கிலுள்ள தமிழ்ப் பாடசாலைகளில் இராணுவத்தினரை ஆசிரியர்களாக சேவையில் அமர்த்தும்போது நாட்டிலுள்ள சிங்களப் பாடசாலைகளில் ஆங்கிலம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கு இருக்கும் 17 ஆயிரம் வெற்றிடங்களுக்கு ஏன் இராணுவத்தினரை சேவையில் நிறுத்தமுடியாது? சிங்களப் பாடசாலைகளில் இதனை ஏன் அரசால் பரீட்சித்துப் பார்க்கமுடியாது?

தமிழ்ப் பாடசாலைகளுக்குப் பயிற்றுவிக்கப்பட்ட இராணுவத்தினர் சேவையில் அமர்த்தப்படுவதுபோல சிங்களப் பாடசாலைகளில் நிலவும் ஆங்கிலம் மற்றும் விஞ்ஞான ஆசிரியர் வெற்றிடங்களுக்குப் பயிற்றப்பட்ட இராணுவத்தினரை சேவையில் அமர்த்தலாமே? அப்படிச் செய்தால் முழு நாட்டையும் இராணுவமயமாக்கும் அரசின் பயணத்துக்கு மேலும் வலுசேர்க்கும் - என்றார் சுரேஷ் நாடாளுமன்ற உறுப்பினருமான

**அஸாத் ஸாலி**

இதன்போது முஸ்லிம் தமிழ்த் தேசிய முன்னணியின் தலைவரும், கொழும்பு மாநகர முன்னாள் பிரதி மேயருமான அஸாத் ஸாலி கருத்துத் தெரிவிக்கையில்,

வடபகுதியிலுள்ள தமிழ்ப் பாடசாலைகளில் இராணுவத்தினர் ஆசிரியர் சேவையில் அமர்த்தப்படுகின்றனர். மக்கள் சுதந்திரமாகச் செயற்படும் அனைத்துத் துறைகளிலும் இராணுவத்தினரின் தலையீடுகள் அதிகரித்துள்ளன.

வடிகான்கள் சுத்தம் செய்தல், பூந்தோட்டப் பராமரித்தல், மரக்கறி விற்பனை செய்தல், சிற்றுண்டிச்சாலை நடத்துதல் என பொதுமக்கள் சுதந்திரமாகச் செயற்படும் துறைகளில் தலையிட்டுவந்த இராணுவத்தினர் இப்போது வடக்கில் ஆசிரியர் சேவையிலும் அமர்த்தப்பட்டுள்ளனர்.

இராணுவத்தினர் ஆசிரியர்களாக சேவையில் அமர்த்தப்படுவதால் மாணவர்களின் கல்வி பாதிப்படைகின்றது. அத்துடன், மரக்கறி விற்பனைசெய்தல், சிற்றுண்டிச்சாலை நடத்துவதனால் இந்தத் தொழிலை நம்பி வாழ்க்கை நடத்தும் சிறிய தொழிலாளிகள் பாதிக்கப்படுகின்றனர் - என்றார்.

# விபத்தில் முதியவர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஜன.10

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் முதியவரின் இரண்டு கால்களும் முறிந்து சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து யாழ். தட்டாதெருச் சந்திக்கு சமீபமாகவுள்ள ஐயனார் கோயில் வீதியில் நேற்றுப் புதன்கிழமை பிற்பகல் இடம்பெற்றது.

சம்பத்தில் யாழ். சிவன் கோயிலடியைச் சேர்ந்த வைத்திலிங்கம் நடராசா (வயது-75) என்பவரே இரண்டு காலும் முறிந்தநிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

முதியவர் வீதியில் சென்று கொண்டிருந்த போது மோட்டார் சைக்கிளில் சென்றவர்கள் அவரை மோதியதாகக் கூறப்பட்டது.

இந்த இரண்டு பேரும் யாழ். பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர் என்று கூறப்பட்டது. (த-4)

# வேப்பையடிக்குளம் உடைப்பெடுத்து 250 ஏக்கர் நெற்பயிர்கள் நாசம்

அம்பாறை மாவட்டத்தில் பெய்த மழையால் திருக் கோவில் கஞ்சிக்குடியாறு வேப்பையடிக் குளம் கடந்த திங்கட்கிழமை இரவு உடைப் பெடுத்துள்ளது.

இதனால் 250 ஏக்கர் நெற்பயிர்கள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக திருக்கோவில் பிரதேச செயலர் கலாநிதி எம். கோபாலரெத்தினம் தெரிவித்தார்.உடைப்பெடுத்துள்ள மேற்படி குளத்திலிருந்த நீர் முற்றாக வெளியேறி யுள்ளது. இதனை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நேரில் சென்று பார்வையிட்ட பிரதேச செயலர் தலைமையிலான குழுவினர், மாவட்டச் செயலர் மற்றும் நீர்ப்பாசன திணைக் கள அதிகாரிகளின்கவ னத்துக்குக் கொண்டு வந்துள்ளனர்.

# யாழ். நகரில் இரு கடைகள் உடைத்து பொருள்கள் திருட்டு

யாழ்ப்பாணம்,ஜன.10

மழை பெய்வதைத் தமக்கு சாதகமாகப் பயன்படுத்திய திருடர், யாழ். நகரில் இரண்டு கடைகளை உடைத்து பணம் உட்பட சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடிச் சென்றனர்.

இந்தச் சம்பவம் யாழ். ஆஸ்பத்திரி வீதியில் ரயில் நிலையச் சந்தியை அண்மித்து இடம்பெற்றது. நேற்றுமுன்தினம் இரவு 11.30 மணியளவில் கடை ஒன்றின் உரிமையாளர் தனது கடையைப் பூட்டி விட்டுச் சென்றுள்ளார். நேற்றுக்காலை கடையைத்திறப்பதற்காகச் சென்றபோது கடை உடைக்கப்பட்டு இருந்தமை தெரியவந்தது.

கடைப்பூட்டுகள் உடைக்கப்பட்டும் பூட்டுத் தகடு முறிக்கப்பட்டும் கதவு திறக்கப்பட்டுள்ளது.

உள் நுழைந்த திருடர் 20 ஆயிரம் ரூபா பணம் மற்றும் சிகரெட், பீடி, கிற்காட் என சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

அதற்கு அருகிலுள்ள மற்றொரு கடையையும் உடைத்த திருடர் அங்கிருந்த கிற்காட், சிகரெட் என சுமார் 25ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர்.மழை பெய்து கொண்டிருந்தபொழுது திருட்டு இடம்பெற்றுள்ளது. திருடியவர்கள் கைது செய்யப்படவில்லை. சம்பவம் தொடர்பில் யாழ். பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது(ம-4)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கணேசு நாகேஸ்வரி (இராசாத்தி)



தாவடி தெற்கு கொக்குவில் நெல்லொருபதி பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி கணேசு நாகேஸ்வரி (இராசாத்தி) நேற்று முன்தினம் (08.01.2013)செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் சே.கணேசுவின் அன்பு மனைவியும் காலஞ் சென்றவர்களான உத்தமிப்பிள்ளை- வேலாயுதம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ் சென்றவர்களான திரு.திருமதி சேனாதிராசா தம்பதியரின் அன்பு மருமகளும் செல்வநாயகி, சறோஜினிதேவி, ரவீந்திரன் (பிரான்ஸ்), சிவநேசன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற சவுந்தலா மற்றும் மகேந்திரன் (பிரான்ஸ்), கேதீஸ்வரன் (பிரதேச செயலகம் சண்டிலிப்பாய்) ஆகியோரின் அன்புத் தாயும், சபாநாதன், புஸ்பராசா, கிரிசாந்தி, வித்தியா, சாந்தி, பவளறஜனி (மானிப்பாய்) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரிகைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
0213201188, 0213205482
0778364889

தாவடி தெற்கு, கொக்குவில்.

### தம்பிஜயா பாலதேவன்

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஜயா பாலதேவன் நேற்று (09/01/2013) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி.ஜெகதீஸ்வரன் (மருமகன்- ஜெகன்)
0212229929

கருவேலடி லேன், கொக்குவில்
கிழக்கு, கொக்குவில்.

### திருமதி கமலாம்பிகை செல்லக்கிளி



(ஓய்வு பெற்ற பரிசாரகர், யாழ்.போதனா வைத்தியசாலை)

கோப்பாயைப் பிறப்பிடமாகவும், மறவன்புலோவை வதிவிடமாகவும் சேச்லேன் கொக்குவிலை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி கமலாம்பிகை செல்லக்கிளி நேற்றுமுன்தினம் (08.01.2013) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லக்கிளியின் அன்பு மனைவியும், ஆனந்தரஞ்சன்(ஜெயா),ஆனந்தமாலினி (மாலா ), ஆனந்தராஜன் (தயா-ஜேர்மனி), ஆனந்தமோகன் (விசயன் -லண்டன்), ஆனந்தராஜினி (லீலா-வளர்மதிமுன்பள்ளி ஆசிரியர்) ஆகியோரின் பாசமிகு தாயும், மஞ்சுளா, அருணகிரிநாதன் (C.E.B,யாழ்ப்பாணம்), யோகா, பிரேமா, காலஞ்சென்ற அற்புதராஜன் ஆகியோரின் அன்பு மாமியும், விஸ்ணா, ஜனா, கிருஸ்ணா, கோபி, அஜித், கானு, புவி, வினோபா, வேந்தன், சாம்பவி, சாரங்கா, சஹானா ஆகியோரின் அன்புபேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (09.01.2013) புதன்கிழமை பி.ப.5மணிக்கு கொக்குவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்துமயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். அன்னாரின் இறுதிக்கிரியையில் கலந்து கொண்டு ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.
அருணகிரிநாதன்(C.E.B-யாழ்ப்பாணம்)
0217900250, 0776337115

சேச்லேன்,
கொக்குவில்.

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## கூறுவிலை கோரல்

கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ.சங்கம் - வ/து

மேற்படி எமது சங்கத்தால் நடத்தப்பட்டு வரும் எரிபொருள் விற்பனை நிலையத்தில் கீழ்வரும் வேலைகள் செய்வதற்குப் பொருத்தமான ஒப்பந்த காரர்களிடம் இருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

01. எரிபொருள் நிரப்பு நிலைய முன் கூரை அமைத்தல்.

02. எரிபொருள் நிரப்பு நிலைய ஓடு பாதை அமைத்தல்.

* வேலைகள் தொடர்பான விவரங்கள் காரியாலய நேரத்தில் பொதுமுகாமையாளருடன் தொடர்பு கொண்டு பார்வையிடலாம்.

* கூறுவிலைகள் மூடிய கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் வேலையின் வகை தனித் தனியாகக் குறிப்பிடப்பட்டு, பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ பொதுமுகாமையாளர், கட்டைவேலி, நெல்லியடி ப.நோ.கூ.சங்கம், கரவெட்டி என்னும் முகவரிக்கு 31.01.2013 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

- பொதுமுகாமையாளர்.

(சி/5458)(6.2)

## சகலவிதமான இலத்திரனியல் பொருள்களும் திருத்தி உத்தரவாதத்துடன் கொடுக்கப்படும்

★ A/C திருத்துதல், பொருத்துதல் மற்றும் பராமரிப்பு செய்தல்.
A/C Reparing, Fitting and Service.

★ Auto A/C திருத்துதல் மற்றும் பராமரிப்பு செய்தல்.
Auto A/C Reparing and Service.

★ டீப் பிறிஜ் மற்றும் சகலவிதமான பிறிஜ் வகைகளும் திருத்துதல், பராமரித்தல்.

★ Deep Fridge and All Fridge Items Reparing and Service.

★ சலவை இயந்திரம், வீட்டு மின்னிணைப்புகள் மற்றும் அனைத்து விதமானமின்சாதன பொருள்களும் திருத்தி உத்தரவாதத்துடன் தரப்படும்.

(தனியார் நிறுவனங்களுக்கோ அல்லது அரச நிறுவனங்களுக்கோ ஒப்பந்த அடிப்படையில் உத்தரவாதத்துடன் வேலை செய்து தரப்படும்)

மேலதிக தொடர்புகளுக்கு- க.ரஜீவன்
KAPILA CONSTRUCTION (PVT) LTD
70/8, K.K.S Road, Jaffna, Srilanka
0217200706, 0774766001, 0777675200

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

## வாடகைக்கு வீடுகள் தேவை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு விடுதி வசதி வழங்குவதற்காக சகல வசதிகளுடனும் கூடிய 1500 சதுர அடிகளுக்கு மேற்பட்ட வீடுகள் பல்கலைக்கழகத்தை அண்மித்த பகுதிகளில் வாடகைக்குத் தேவை.

வீட்டை வாடகைக்கு தர விரும்புவோர் சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/நிர்வாகம், அவர்களுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 29.01.2013 ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு முன்னர் சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/நிர்வாகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் முகவரிக்குக் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் தனித்தனியாக கடித உறையின் இடது மேல் மூலையில் "மாணவர்களின் விடுதிக்கான வீடு" என குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். பல்கலைக்கழக கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

-பதிவாளர்.

(சி/5455)(6.2)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை மாணவன்
செல்வன்
**அன்ரன் தோமஸ் அன்ரனி றொபின்சன்**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**
யா/ மாதகல் சென். ஜோசப் மகா வித்தியாலயம்

(சி/5457)(6.2)

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 22.07.1948

மறைவு 23.12.2011


**முருகேசு பாக்கியநாதன் (சொக்கு)**
(விநாயகர் கடைச்சல் தொழிற்சாலை உரிமையாளர், ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்)

அன்பு பொங்கும் எம் உறவே! ஆண்டு ஒன்று போனாலும்
எம் இதயத்து வேதனை மாறிடுமோ? உம் களங்கமற்ற அன்பும்
நிழல் கொடுக்கும் ஓர் தெய்வப்பந்தலான உம் மனதும்
யாரிடமும் காணமாட்டோம்
பொறுமையெனும் கவி காட்டும் வண்ணப் பூந்தோட்டமே
உங்களின் பிரிவின் வலி எப்போதும் மாறாது

கல்லூரி ஒழுங்கை, சண்டிலிப்பாய்.
சகோதரர்கள், மருமக்கள், பெறாமக்கள் பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

(28218)(2-6)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர் **சுப்பிரமணியம் பற்குணராஜா**

தோற்றம் 10.11.1936

மறைவு 12.12.2012

மெய்யது மெய்யல்ல என்றில் வுலகொழிந்து
தெய்வத்துடன் தெய்வமான எங்களன்பு அப்பா!
செய்யும் செயலனைத்தும் செம்மையுடனாற்ற
வையுங்கனென்றும் எங்களாருயிர் அப்பா!

கடந்த 12.12.2012 அன்று எங்கள் குடும்பத்தலைவர் இறைவனடிசேர்ந்த வேளையில் எமது துயர்நீக்க நேரிலும், தொலைபேசி, தந்தி மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், அவரின் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டோருக்கும் எமக்கு உறுதுணையாய் நின்று உதவி புரிந்த உற்றார், உறவினர்சு, நண்பர்கள் அயலவர்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்னாரின் சபிண்டீகரணக் கிரியையும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இன்று (10.01.2013) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்வுகளில் தவறாது கலந்துகொள்ளுமாறு அனைவரையும் வேண்டிக்கொள்கிறோம்.

"மங்களவில்லா"
உடுவில் கிழக்கு,
காங்கேசந்துறை வீதி, சுன்னாகம்.

மனைவி, மக்கள், மருமகள், பேரப்பிள்ளைகள்.

(28[illegible])(2.6.7)

# மண்டுவிலில் இடி தாக்கியதால் மின்சாதன பொருள்கள் நாசம்

தென்மராட்சி,ஜன.10

சாவகச்சேரி மண்டுவில் பகுதி வீடொன்றில் மீது இடி வீழ்ந்ததில் வீட்டின் ஓடுகள் சேதமடைந்ததுடன் மின் கட்டமைப்பு முழுவதும் எரிந்தன. இலத்திரணியல் சாதனங்களும் எரிந்து நாசமாகின.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் 8.25 மணிக்கு மடத்தடி ஒழுங்கையிலுள்ள வே.கந்தசாமி என்பவரின் வீட்டில் இடம்பெற்றது.

வீட்டினுள் மின் இணைப்புடன் இருந்த மடிக் கணினி,தொலைக்காட்சிப் பெட்டி, நீரிறைக்கும் மோட்டார், குளிர் சாதனப் பெட்டி உட்பட்ட இலத்திரனியல் சாதனங்களும் மின் விளக்குகளும் சேதமடைந்தன.

இடியின் தாக்கத்தால் வீட்டினுள் இருந்த சுவர் மணிக்கூடு செயலிழந்து போனது. 200 க்கும் மேற்பட்ட கூரை ஓடுகளும் வீட்டினுள் பொருத்தப்பட்டிருந்த லெவல்சீற்றுக்களும் உடைந்து நொருங்கியுள்ளன.

மழை பெய்து கொண்டிருந்ததால் வீட்டினுள்ளோர் விறாந்தையில் இருந்த போதிலும் தெய்வாதீனமாக பாதிப்பு ஏற்படவில்லை. (ம-9)

## 5 ஆம் இடத்தை தட்டியது மட்டக்களப்பு மாநகர சபை

அகில இலங்கை தேசிய மட்டத்திலான உள்ளூராட்சி மன்றங்களுக்கிடையிலான முகாமைத்துவப் போட்டியில் மாநகர சபை வரிசையில் மட்டக்களப்பு மாநகர சபை தேசிய மட்டத்தில் 5ஆம் இடத்தைப் பெற்றுள்ளது. காத்தான்குடி நகரசபைக்கு 7 ஆம் இடம் கிடைத்துள்ளது.

தேசிய மட்டத் திண்மக்கழிவு முகாமைத் துவப் போட்டியில் அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் பிரதேச சபை 3ஆம் இடத்தை பெற்றுள்ளதாகக் கிழக்கு மாகாண உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எம்.உதய குமார் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:-

அவர்களுக்கான விருதுகளும் பணப் பரிசும் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கொழும்பு அலரி மாளிகையில் வைத்து ஜனாதிபதியினால் வழங்கி வைக்கப் பட்டன.இதில் மட்டக் களப்பு மாநகர சபை, காத்தான்குடி நகர சபை ஆகியவற்றுக்கு தலா 5 ஆயிரம் ரூபாவும் திருக்கோவில் பிரதேசசபைக்கு பணமும் நிபந்தனைக்குப் புறம்பான விருதும் வழங்கப்பட்டன-என்றார். (வ)

## 36 ஆயிரம் குடும்பங்கள் வெள்ளத்தால் பாதிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த நான்கு தினங்களாக பெய்த அடை மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தால் 38 ஆயிரத்து 177 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 42 ஆயிரத்து 674 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மட்டக்களப்பு மாவட்ட மேலதிக செயலாளர் கே.விமலநாதன் தெரிவித்தார். மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் இந்த குடும்பங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

கோயில் வீதியில் நல்ல சூழலில் 1¼ பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.
தரகர் தேவையில்லை.
(28154)(6.7.4) தொடர்பு: 0772964235.

## 1 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

10.01.2013




செல்வி அஸ்மிதா

வாசவன் - கங்கேஸ்வரி தம்பதியரின் செல்வப் புதல்வி
**செல்வி அஸ்மிதா**
தனது முதலாவது பிறந்தநாளை இங்கிலாந்தில் உள்ள 4 Toll Gatedrive Hayes Middlesx தனது இல்லத்தில் இன்று (10.01.2013) வியாழக்கிழமை கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, பெரியம்மாமார், பெரியப்பாமார், மாமிமார், மாமாமார், மச்சான்மார், மச்சாள்மார், சித்திமார், சித்தப்பாமார் ஆகியோர் அஸ்மிதா குட்டியை சகல கலைகளையும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ எல்லாம் வல்ல அச்சுவேலி உலவிற்குளம் சித்தி விநாயகப் பெருமானை மனமார வேண்டுகின்றோம்.

ந.கவியரசன் (ஆசை சித்தப்பா), நடராஜா ரெக்ஸ் றைலீஸ், பஸ் நிலையம், அச்சுவேலி.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

**அமரர் வைத்திலிங்கம் தியாகராஜா**
(ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி)
எமது சக உத்தியோகத்தர்
**திருமதி சந்தியபாமா ஸ்ரீதரன்** அவர்களின் பாசமிகு தந்தையின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
நலன்புரிக்கழகம், வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.

(சி/5453)(6.2)

## கண்ணீர் அஞ்சலி



எங்கள் கலாசாலையில் பாதுகாப்புச் சேவையில் கடமையாற்றும் ஐ.ஞானச்சந்திரன் மற்றும் ஐ.ரவிச்சந்திரன் ஆகியோரது அன்புத் தாய்
**திருமதி ஐயாத்துரை தங்கமுத்து**
அவர்கள் காலமான செய்தியறிந்து கவலையடைகின்றோம். துயருறும் உறவினர்கள் யாவருக்கும் ஆறுதல் தெரிவிப்பதோடு, அமரரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலைச் சமூகம்.

(சி/5451)(6.2)

## கண்ணீர் அஞ்சலி



எமது சக விரிவுரையாளரும் எமது சங்க உறுப்பினருமான
தி.பத்மதாஸ்
அவர்களின் அன்புத் தந்தை
**சி.திருநாவுக்கரசு**
அவர்களின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.பல்கலைக்கழகவிஞ்ஞான ஆசிரியர்சங்கம்,
யாழ். பல்கலைக்கழகம்.

(28212)(6.2)

## கோழிக்குஞ்சு விநியோகம்

**BAHIRA No.1**
புறொயிலர் குஞ்சுகள்
12.01.2013
விநியோகிக்கப்படும்.
பதிவுகளை மேற்கொள்ளவும்.

★ றாஜீவ், நவாலி வீதி, ஆனைக்கோட்டை.

(28211)(45.6)

## யா/கனகரத்தினம் ம.ம.வி மாணவர் விடுதி

தரம் 6 தொடக்கம் 13 வரையான மாணவர்களுக்கான (இருபாலாருக்கும்) விடுதிகள் இயங்குகின்றன. சேரவிரும்பும் மாணவர்கள் அலுவலகத்தில் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்கவும்.

விடுதிக்காப்பாளர் (ஆண்), சமையலாளர் (ஆண்/பெண்) வெற்றிடங்கள் உள்ளன. அனுபவம், தகைமைஉடையோர் உடன் அலுவலகத்தில் தொடர்பு கொள்ளவும்.

**அதிபர்.**

(சி/5450)(6.7.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 105 தேசியப் பாடசாலைகளில் அதிபர் பதவி வெற்றிடங்கள்

## எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்பு

கொழும்பு, ஜன.10

105 தேசியப் பாடசாலைகளில் நிலவும் பாடசாலை அதிபர்களுக்கான பதவி வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பாக விண்ணப்பங்களை ஏற்கும் திகதி எதிர்வரும் 18 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

கல்வி நிர்வாக சேவையின் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் தரங்களில் உள்ள உத்தியோகத்தர்கள் அதிபர் சேவையின் முதலாம் தரத்தில் உள்ள உத்தியோகத்தர்கள் மற்றும் தேசியப்பாடசாலை ஒன்றில் மூன்றாண்டுகளுக்கு மேற்பட்டுசேவைக் காலம் ஒன்றை நிறைவு செய்துள்ள பாடசாலை அதிபர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும் என்று கல்வி அமைச்சு தெரிவிக்கிறது.

நேர்முகத்தேர்வுக் குழு ஒன்றால் நேர்முகத்தேர்வுகள் மேற்கொள்ளப்பட்டு அரச சேவைகள் ஆணைக் குழுவால் அனுமதிக்கப்பட்ட புள்ளிகளின் ஒழுங்கு முறைக்கு அமைய பாடசாலை அதிபர் பதவிகள் தெரிவு செய்யப்படவுள்ளன என்றுமேற்படி அமைச்சு தெரிவிக்கிறது.

கல்வி அதிகாரிகளின் கோரிக்கைகள் மீது தேசிய பாடசாலைகளுக்கான அதிபர் பதவிகள் தொடர்பான விண்ணப்பத் திகதி நீடிக்கப்பட்டுள்ளது எனவும் கல்வியமைச்சு தெரிவிக்கிறது. (ம-22)

# கல்லுண்டாய் குடியிருப்புக்குள் கடல்நீர் உட்புகும் அபாயநிலை

## சட்டவிரோத மணல் அகழ்வே காரணம்

நவாலி, ஜன.10

கல்லுண்டாயில் அனுமதியின்றி மணல் ஏற்றுவதால் கடல்நீர் குடிமனைகளுக்குள் உட்புகும் அபாய நிலை தோன்றியுள்ளது.

பொதுத் தேவைகளுக்காக இந்தப் பகுதியில் மணலை அள்ளுவதற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலாளரிடம் அனுமதி பெறப்படுகிறது.

பின்னர் தமக்குத் தேவையான மணலை ஏற்றிய பின்னர் அந்த அனுமதிப் பத்திரத்தை வைத்துக் கொண்டு தினமும் இரண்டு மூன்று உழவு இயந்திரங்களில் மேலதிகமாக மணலை ஏற்றிச்சென்று ஏனையவர்களுக்கு விற்பனை செய்கிறார்கள்.

இதுசம்பந்தமாக ஆனைக்கோட்டை, நவாலி விவசாய சம்மேளனங்கள் இவற்றைத் தடைசெய்ய சென்றால் காலாவதியான அனுமதிப் பத்திரங்களைக் காட்டி தொடர்ந்து மணலை அகழ்கின்றனர் என்று கூறப்படுகிறது.

இந்த மணல் அகழ்வு வேலைகள் நவாலி கிழக்கு, ஆனைக்கோட்டை கிராம சேவையாளர் பிரிவுகளிலேயே நடைபெறுகின்றன.

இதனால் கடல் நீர் இலகுவாக குடி மனைகளுக்குள்ளும் வயல் நிலங்களுக்கும் உட்புகும் அபாய நிலை தோன்றியுள்ளது. கிணற்றுத் தண்ணீரும் உவர் நீராகும் சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளது.

எனவே, அனுமதிப் பத்திரம் வழங்குவதை பிரதேச செயலர் நிறுத்த வேண்டுமென்றும், அல்லது பொதுத் தேவைக்கு வழங்கினாலும் குறிப்பிட்ட அளவு ஏற்றியதும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் யாராவது கண்காணித்து மீண்டும் அனுமதிப் பத்திரத்தைத் திரும்பப் பெற வேண்டுமென்றும் பிரதேச மக்கள் கேட்டுள்ளனர். (ம-100)



மருதனார் மடத்தில் அமைந்துள்ள துபவீ தொழிற்பயிற்சி நிலைய மாணவர்களால் அண்மையில் ஒளி விழா நிகழ்வுகள் கொண்டாடப்பட்டன. இந்த நிகழ்வில் உடுவில் பிரதேச செயலக பிரதி திட்டப் பணிப்பாளர் திருமதி ரதி நகுலேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். நிறுவனத்தின் பணிப்பாளர்களில்ஒருவரான திருமதி த.தயாசோமசுந்தரம் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும், நிகழ்வுக்கு தலைமை வகித்த உடுவில் பிரதேச செயலக மனிதவலு ஆற்றல் அலுவலர் ரஞ்சித்ராஜுவையும் இங்கு காணலாம். (ம-86)

## சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்துக்கு மூவர்

யாழ்ப்பாணம், ஜன.10

மதுவரித்திணைக்களத்தின் 2013 ஆம் ஆண்டுக்கான இடமாற்றத்தில் சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்துக்கு 3 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இடமாற்றம் பெற்றவர்களினால் யாழ்ப்பாணம் மதுவரித் திணைக்களத்தைச் சேர்ந்த இ.பிரதாபன் மதுவரித் திணைக்களப் பொதுப் பதிவாளராகவும், தென் பகுதியைச் சேர்ந்த டி.எஸ். குணசிங்க மது வரித் திணைக்கள அலுவலராகவும், முல்லைத்தீவு மதுவரித் திணைக்களத்தைச் சேர்ந்த ஆர்.இந்திரபாலா மதுவரித் திணைக்கள அலுவலராகவும் சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்துக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். (ம- 14)

## பிரபாகரன்– நடிகர் கமல்ஹாசன் இணைந்திருக்கும் சுவரொட்டி

### திருச்சியில் பரபரப்பு




திருச்சி மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் மற்றும் தென்னிந்திய நடிகர் கமல்ஹாசன் ஆகியோர் இணைந்திருக்கும் படங்களைக் கொண்ட சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

விரைவில் திரைக்கு வரவுள்ள நடிகர் கமல் ஹாசன் நடித்து வெளிவரவிருக்கும் விஸ்வரூபம் திரைப்படத்துக்கான சுவரொட்டிகளிலேயே இந்தப் படமும் சேர்க்கப்பட்டுள்ளது.

குறித்த சுவரொட்டிகளில் நடிகர் கமல்ஹாசனை கலையுலக போராளி என்று வர்ணிக்கும் வாசகமும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

# தமிழர்களும்....

(13 ஆம் பக்கம் தொடர்ச்சி)

அதன்மூலம் பெறப்படும் பெருந்தொகையான பணம் இஸ்லாமிய தீவிரவாதிகளுக்கு வழங்கப்படுவதாகக் கூக்குரல் இடுகிறார்கள்.

சட்டக்கல்லூரி நுழைவுப் பரீட்சையில் முஸ்லிம் மாணவர்கள் எவ்வாறு அதிக புள்ளிகளைப் பெறலாம், கூடிய விகிதாசாரத்தில் தேர்வாகலாம் எனக் கொதிக்கிறார்கள். இவை பற்றி எந்த முஸ்லிம் அமைச்சராவது அலட்டிக்கொண்டதுண்டா? ஜனவரியில் அரசு அமைச்சரவையை மறுசீரமைப்பைச் செய்யக்கூடும் எனப் பரவிய செய்தி கேட்டு வேகமாக ஓடோடிச் சென்று ஜனாதிபதியின் பாதங்களில் வீழ்ந்து தமக்கான அமைச்சுப் பதவிகளை உறுதிசெய்து கொள்வதில் காட்டிய அக்கறையில் சிறிதளவையேனும் முஸ்லிம்களின் விடயத்தில் காட்டியிருக்க வேண்டாமா?

தமிழர்கள் வலுவிழந்தால் முஸ்லிம்களும் வலுவிழக்க வைக்கப்படுவார்கள். தமிழர்கள் அழிந்தொழிந்தால் முஸ்லிம்களும் அழித்தொழிக்கப்படுவார்கள். இதுதான் இலங்கை அரசியலின் நியதி. அதே போல தமிழர்கள் நிமிர்ந்தால் நிச்சயம் முஸ்லிம்களும் நிமிர்வார்கள், தன்மான வாழ்வு பெறுவார்கள். இவற்றை மனதில்கொண்டு சிறுசிறு சலுகைகளுக்காக அரசிடம் மண்டியிடாது தமிழர்களுடன் இணைந்து முஸ்லிம்களும் போராடினால் வடக்கு, கிழக்குத் தாயக மண்ணில் தமது தன்னாட்சி நிறுவப்படும் என்பது மறுக்க முடியாத உண்மை.

புதிய ஆண்டில் பதின்மூன்றை ஒழித்துவிட அரசு முயலும்போது அதே பதின்மூன்றைப் பாதுகாத்து உறுதிப்படுத்தி அதற்கு மேலான அதிகாரங்களைப் பெற்று சிங்கள ஆட்சியாளர்களிடமிருந்து நாம் இருசாராரும் விடுதலைக்காக சேர்ந்து உழைக்க வேண்டிய காலமிது.

# திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட..

(12 ஆம் பக்கம் தொடர்ச்சி)

தமிழுணர்வோடு கலந்து கொண்ட ஐம்பது ஆயிரம் மக்களில் தமிழுக்காய் பத்து உயிர்கள் இறுதிநாள் நிகழ்வின்போது காவு கொள்ளப்பட்டதே தமிழர்கள் தனித்துவமான தமிழ்த் தேசிய இனமாக வாழ வேண்டும் என்ற செய்தியை தமிழ் மக்கள் மனங்களில் பதியவைக்கக் காரணமாயிற்று.

தமிழர்கள் தமது மொழியை, கலையை, கலாசாரத்தை எந்த வகையிலும் கொண்டாடக் கூடாது என்ற மேலாதிக்க சிந்தனையில் தான் திட்டமிட்ட வகையில் பொலிஸார் மின் கம்பிகளை நோக்கி துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்து அவற்றை மக்கள் மீது அறுத்து விழ வைத்து அதன் மூலம் பத்துத் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். இந்தப் பத்துத் தமிழர்களும் தமிழுக்காய் உயிர் நீத்த தியாகிகளாகினர்.

பொலிஸாரின் இந்த நடத்தை பற்றி முழு விசாரணைகளை உடன் நடத்துமாறு தமிழ் மக்களால் கோரிக்கை விடப்பட்ட போதும் சிறிமாவோவின் அரசு அதற்கு மறுத்துவிட்டது. மக்கள் நிறுவிய இரண்டு முன்னாள் நீதியரசர்களையும், ஒரு முன்னாள் மேற்றிராணியாரையும் கொண்ட விசாரணைக் குழு பொலிஸாரின் அந்தத் தான்தோன்றித்தனமான செயலே அம்மரணங்களுக்கு முழுக் காரணமெனத் தீர்ப்பு வழங்கியது.

இந்தச் சம்பவம் குறித்து அரசின் உதாசீனமும் தமிழன் தன்னைத் தான் ஆள வேண்டும். இல்லையேல் தமிழன் அடிமை வாழ்வையே வாழநேரிடும் நிலை தோன்றும் என்ற உணர்வை தமிழர்கள் மத்தியில் உருவாக்கி வைத்தது.

1974 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுக்குப் பின்னர் வெளிநாடுகளில் பல தமிழாராய்ச்சி மாநாடுகள் இதுவரையில் நடந்து முடிந்துள்ளன. ஆனால் நான்காம் உலகத் தமிழாராய்ச்சி மாநாடு நடந்து முடிந்து இன்றுடன் முப்பத்தொன்பது ஆண்டுகள் முடிந்து 10 தமிழர்களின் படுகொலைகளை நினைவுகூர்ந்து கொண்டிருக்கின்ற நாம் மற்றுமொரு தமிழாராய்ச்சி மாநாட்டை எமது மண்ணில் நடத்த முடியாத நிலையில் இருப்பது தமிழர்களின் துரதிர்ஷ்டமேயாகும்.

தமிழ் உணர்வு சார்ந்த எந்தவொரு நிகழ்வுகளையும் தமிழர்கள் தமது பிரதேசங்களில் நடத்த முடியாத விதத்தில் சிங்கள அரசுகள் தடைபோட்டே வந்தன.

இத்தகைய நிலையிலேயே தமிழாராய்ச்சி மாநாட்டின் போது உயிர் நீத்த பத்து தமிழர்களின் நினைவாக யாழ்.வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்பாக நிறுவப்பட்டிருந்த நினைவுத் தூண்கள் இடித்தழிக்கப்பட்டன. ஆனாலும் மீண்டும் நினைவுத் தூண்கள் எழுப்பப்பட்டு தமிழ் உணர்வாளர்கள் வருடா வருடம் நினைவு நாளை அனுஷ்டித்து வருகின்றனர்.

முப்பத்தொன்பது ஆண்டுகளாகிவிட்ட நிலையில் உயிர் தமிழுக்கு; உடல் மண்ணுக்கு எனத் தாங்கி நிற்கின்ற நினைவுச் சின்னங்கள் என்றும் தமிழர்களின் போராட்ட வரலாற்றை ஒவ்வொரு தலைமுறைக்கும் சொல்லியே நிற்கும். தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலை நினைவுகளும் தமிழர்களுடன் கூடவே இரண்டறக் கலந்திருக்கும்.

இந்த தியாகங்களுக்கும் அர்ப்பணிப்புகளுக்கும் யாருமே களங்கம் கற்பிக்க முடியாது. தமிழாராய்ச்சி மாநாட்டின் போது உயிர் நீத்த பத்துத் தமிழர்களின் தியாகத்தை என் றென்றும் தலை சாய்த்து வணங்குவோம். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மாதனை வெற்றிக்கிண்ண 'மெகா' கரப்பந்து

# இமையாணன் மத்திய 'ஏ' அணி விக்கிரமனை வென்று சம்பியன்



வடமராட்சி, ஜன.10

புத்தாண்டு தினத்தையொட்டி பருத்தித்துறை மாதனை விளையாட்டுக்கழகம் நடத்திய 5 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான 'மெகா' கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகம் 'ஏ' அணி சம்பியனானது.

இந்தச் சுற்றுப்போட்டி மாதனை விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் நடத்தப்பட்டது. இதில் வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த 32 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றியிருந்தன.

இதில் ஆரம்பச்சுற்றுகளில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய குடத்தனை வெண்மதி விளையாட்டுக் கழகம், இமையாணன் விளையாட்டுக்கழகம் 'ஏ' அணி, உடுப்பிட்டி விக்கிரமன் விளையாட்டுக்கழகம், உடுப்பிட்டி நவஜீவன் விளையாட்டுக்கழகம் என்பன அரையிறுதிக்கு தகுதிபெற்றிருந்தன.

இதில் முதலாவது அரையிறுதிப் போட்டியில் குடத்தனை வெண்மதி விளையாட்டுக்கழகம், உடுப்பிட்டி விளையாட்டுக்கழகம் 'ஏ' அணியும் ஒன்றை ஒன்று எதிர்கொண்டன. இதில் இரு அணிகளும் இறுதி வரை வெற்றிக்காக முட்டி மோதிக் கொண்டன. ஆயினும் ஒருவாறு தன்னைச் சுதாகரித்துக்கொண்ட இமையாணன் அணி ஆக்ரோஷ ஆட்டத்தை வெளிப்படுத்தி 17:12 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெண்மதி விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

**இறுதிப்போட்டி தலா 10 நிமிடங்களைக்கொண்ட 3 சுற்றுக்களாக நடத்தப்பட்டது. இதில் ஆரம்பத்தில் இருந்தே அசத்தலான ஆட்டத்தை வெளிப்படுத்திய இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகம் முதல் இரு சுற்றுக்களையும் தன்வசமாக்கி வெற்றிக் கிண்ணத்தையும் சுவீகரித்துக்கொண்டது.**

இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் உடுப்பிட்டி விக்கிரமன் விளையாட்டுக்கழகமும், உடுப்பிட்டி நவஜீவன் விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்டன. இந்தப் போட்டி பரபரப்பாகவே அமைந்தது. இரு அணிகளும் ஒரே பிரதேச வீரர்களை கொண்டிருந்ததால் ஆட்டத்தில் அனல் பறந்தது. ஏட்டிக்குப் போட்டியாக மாறிமாறி இரு அணி வீரர்களும் புள்ளிகளை பெற்றவண்ணம் இருந்தனர். இதனால் எந்த அணி இறுதிப் போட்டிக்குள் நுழையப்போகிறது என்பதை கடைசி வரை எவராலும் ஊகிக்க்முடியாதிருந்தது. எனினும் இறுதியில் ஒரு புள்ளி வித்தியாசத்தில் உடுப்பிட்டி நவஜீவன் அணி வெற்றியை பறிகொடுத்து வெளியேறியது. இந்த ஆட்டத்தில் 14:13 புள்ளிகள் அடிப்படையில் வெற்றியீட்டிய உடுப்பிட்டி விக்கிரமன் அணி இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது.

இறுதிப் போட்டியில் இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகம் 'ஏ' அணியும் உடுப்பிட்டி விக்கிரமன் விளையாட்டுக் கழகமும் ஒன்றையொன்று எதிர்த்தாடின.

இறுதிப்போட்டி தலா 10 நிமிடங்களைக் கொண்ட 3 சுற்றுக்களாக நடத்தப்பட்டது. இதில் ஆரம்பத்தில் இருந்தே அசத்தலான ஆட்டத்தை வெளிப்படுத்திய இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் முதல் இரு சுற்றுக்களையும் தன்வசமாக்கி வெற்றிக்கிண்ணத்தையும் சுவீகரித்துக் கொண்டது.

மூன்றாம் இடத்துக்கான போட்டியில் குடத்தனை வெண்மதி விளையாட்டுக் கழகமும் உடுப்பிட்டி நவஜீவன் விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டன. இதில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி நவஜீவன் அணி மூன்றாம் இடத்தை தனதாக்கிக்கொண்டது.

இந்தச் சுற்றுத்தொடரில் இறுதிப்போட்டி நிகழ்வில் பருத்தித்துறை நகர சபைத் தலைவர் சட்டத்தரணி சபா. ரவீந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு வெற்றியீட்டிய அணிகளுக்குப் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார். (ங-8)

## இன்றைய ஆட்டங்கள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி பொமர்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகள்:-

பி.ப. 3.30 மணி

உடுப்பிட்டி யுத் விளையாட்டுக்கழகம் 'ஏ' அணி எதிர் புத்தூர் வீனஸ் விளையாட்டுக் கழகம்.

பி.ப. 4.30 மணி

நவாலி சென்.பீற்றர்ஸ் கழகம் எதிர் பொலிகை பாரதி விளையாட்டுக் கழகம்.

* * *

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 18 ஆவது ஆண்டு நிறைவையொட்டியும் சாந்தன், யூட்கசன் ஆகியோரின் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்குமான நடத்தப்படும் 11 பேர் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடர் வைரவப்புளியங்குளத்திலுள்ள யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்றுவருகிறது.

இந்தச் சுற்றுப்போட்டியில் இன்று வியாழக்கிழமை மாலை 6மணிக்கு நடைபெறஇருக்கும்ஆட்டத்தில் மோதவுள்ள அணிகள்-

சன்சைன் விளையாட்டுகழகம் எதிர் அல்-ஜஹீரா விளையாட்டுக்கழகம்.

* * *

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் ஆண்களுக்கான கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரை நடத்திவருகின்றது. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை இடம் பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

* யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் நடைபெறவுள்ள ஆட்டங்கள்.

**பெண்கள் பிரிவு**

**மாலை 3.30 மணி**

இராமநாதன் விளையாட்டுக்கழகம் 'ஏ' அணி எதிர் பமிலியன்ஸ் விளையாட்டுக்கழகம்.

**மாலை 4.30 மணி**

கே.கே.எஸ். விளையாட்டுக்கழகம் எதிர் இந்து மகளிர் விளையாட்டுக்கழகம்.

**ஆண்கள் பிரிவு**

**மாலை 6.30 மணி**

கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக்கழகம் 'ஏ' அணி எதிர் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழகம்.

**இரவு 7 மணி**

கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக்கழகம் 'பி' அணி எதிர் சண்டிலிப்பாய் விளையாட்டுக்கழகம்.

* வேம்படி மகளிர் கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் நடைபெறவுள்ள ஆட்டத்தின் விவரம்.

**மாலை 3.30 மணி (பெண்கள் பிரிவு)**

உடுவில் மகளிர் விளையாட்டுக்கழகம் எதிர் பண்டத்தரிப்பு விளையாட்டுக்கழகம். (ங-23)



## உதைபந்து மத்தியஸ்தர் பரீட்சைக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜன. 10

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் வடமாகாண ரீதியிலான உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான பரீட்சை எதிர்வரும் 26 ஆம் திகதி சென்.ஜோன்ஸ் கல்லூரியில்இடம்பெறவுள்ளது.

அன்று காலை 6.30 மணிக்கு உடற்தகுதிப் பரீட்சையும் அதனைத் தொடர்ந்து எழுத்துப் பரீட்சையும் இடம் பெறவுள்ளன.

எனவே யாழ். மாவட்டத்திலிருந்து குறித்த பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை மு.ப. 11 மணியளவில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் உள்ள மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

எனவே அனைவரையும் தவறாது சமூகம் தருமாறு யாழ். உதைபந்தாட்ட மத்திய சங்கத்தின் செயலாளர் அஜித்குமார் கேட்டுள்ளார். (ங-23)

## பொங்கல் உதைபந்து

தைப்பொங்கலை முன்னிட்டு மானிப்பாய் இந்துக் கல்லூரி பழைய மாணவத் தலைவர்கள் ஒன்றியம் நடத்தும் 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி எதிர்வரும் 13 ஆம் திகதி காலை 8 மணியளவில் மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் ஆரம்பபமாகவுள்ளது.

இதன் இறுதியாட்டம் 14 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. மேற்படி உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் மானிப்பாய் இந்துக்கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணிகள் மோதவுள்ளன. (ங-23)

# லிகோரியர் அணியை வீழ்த்தி வாகை சூடியது கண்ணகை

தென்மராட்சி, ஜன. 10

சாவகச்சேரி நியூபவர் விளையாட்டுக்கழகம் நடத்திய 16 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் மட்டுவில் கண்ணகை விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

சாவகச்சேரி நகரசபை பொதுவிளையாட்டு மைதானத்தில் நடத்தப்பட்ட இந்தச் சுற்றுப்போட்டியில் 23 அணிகள் பங்குபற்றின. இதில் இறுதிப் போட்டிக்கு மட்டுவில் கண்ணகை விளையாட்டுக்கழகமும் அணியும் சாவகச்சேரி புனித லிகோரியார் விளையாட்டுக்கழகமும் தெரிவாகின.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்தச் சுற்றுத்தொடரில் இறுதிப்போட்டி நடைபெற்றது. ஆரம்ப சுற்றுப்போட்டிகள் நகரசபை பொது மைதானத்தில் நடத்தப்பட்ட போதும்



இறுதிப்போட்டி மட்டுவில் கண்ணகை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இதில்நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சாவகச்சேரி புனித லிகோரியார் விளையாட்டுக்கழகம் முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

இதனால் முதலில் துடுப்பெடுத்தாடிய மட்டுவில் கண்ணகை விளையாட்டுக் கழகத்தினர் நிர்ணயிக்கப்பட்ட 16 பந்துப் பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 122 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் கஜன் 40 ஓட்டங்களையும், நந்தகோபன் 20 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் புனித லிகோரியார் அணி சார்பில் றொக்சன் 5 இலக்குகளையும், யூட் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

123 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்று களமிறங்கிய புனித லிகோரியார் விளையாட்டுக்கழகம், கண்ணகை விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த கோபிநாத், கஜன் ஆகியோரின் பந்துவீச்சினைச் சமாளிக்க முடியாமல் 15 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 55 ஓட்டங்களை மட்டும் பெற்றது. இதனால் 67 ஓட்டங்கள் வித்தியாசத்தில் லிகோரியர் அணியை வீழ்த்தி கண்ணகை அணி சம்பியனானது.


பந்துவீச்சில் கோபிநாத் 4 இலக்குகளையும், கஜன் 'ஹட்ரிக்' சாதனை புரிந்து 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.

இறுதிப்போட்டியில் ஆட்டநாயகனாக மட்டுவில் கண்ணகை விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த கஜனும் தொடர்நாயகனாக வினோதனும் தெரிவு செய்யப்பட்டனர்.

இறுதியாட்ட நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட மட்டுவில் வடக்கு கிராம உத்தியோகத்தரான க.விக்னேஸ்வராஜா வெற்றி பெற்ற அணிகளுக்கும் வீரர்களுக்கும் பரிசில்களை வழங்கினார். (ங-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளார்க்கை வாங்க போவது யார்?




ஐ.பி.எல். - 6 ஆவது பருவ கொண்டாட்டங்கள் ஆரம்பித்து விட்டன. இதன் முதற்கட்டமாக முக்கியமான வீரர்களை ஏலத்தில் எடுக்கும் பணி தொடங்கி விட்டது. 6 ஆவது ஐ.பி.எல். தொடரில் ஆஸ்திரேலிய அணித் தலைவர் மைக்கல் கிளார்க்கை வாங்கிவிட அணிகளிடையே பலத்த போட்டி நிலவுகிது.

ஐ.பி.எல். 20/20 கிரிக்கெட் போட்டி 2008 ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது. முதல் போட்டியில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி சம்பியனானது.

2009 ஆம் ஆண்டு டெக்கான் சார்ஜர்ஸ் அணி கிண்ணத்தை வென்றது. 2010, 2011ஆம் ஆண்டுகளில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி சம்பியனாகி சாதித்தது.

கடந்த ஆண்டு (2012) கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி ஐ.பி.எல். கிண்ணத்தை கைப்பற்றியது.

6 ஆவது ஐ.பி.எல். போட்டிகள் ஏப்ரல் 3 ஆம் திகதி முதல் மே மாதம் 26 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன. இதில் 9 அணிகள் பங்கேற்கின்றன.

6 ஆவது ஐ.பி.எல். போட்டிக்கான வீரர்கள் ஏலம் அடுத்த மாதம் (பெப்ரவரி) 3 ஆம் திகதி நடக்கவுள்ளது. மொத்தம் 193 வீரர்கள் தற்போது ஏலப்பட்டியலில் உள்ளனர்.

ஆஸ்திரேலியாவின் டெஸ்ட் மற்றும் ஒருநாள் அணித்தலைவர் மைக்கல் கிளார்க்கை வாங்க மும்பை இந்தியன்ஸ் அணியும், புனே வாரியர்ஸ் அணியும் கடும் போட்டியில் இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

இரு அணிகளுமே அவரை ஏலத்தில் எடுக்க அதிகம் ஆர்வம் காட்டுகின்றன. ஏனென்றால் இரு அணிகளுமே கிளார்க்கை தங்களின் அணித் தலைவராக்க விரும்புகின்றன.

மும்பைஇந்தியன்ஸ்அணிக்கு தற்போது ஹர்பஜன்சிங் அணித் தலைவராக உள்ளார். அவருக்கு பதிலாக கிளார்க்கை ஏலத்தில் எடுத்து அணித்தலைவராக்குவது என்று மும்பை அணி திட்டமிட்டு உள்ளது.

கடந்த ஐ.பி.எல். போட்டியில் புனே வாரியர்ஸ் அணி கடைசி இடத்தை பிடித்தது. இதனால் அணித்தலைவர் கங்குலியை பதவியில் இருந்து புனே வாரியர்ஸ் நிர்வாகம் கழற்றிவிட்டது.

கடந்த ஐ.பி.எல். போட்டியில் கிளார்க் புனே வாரியர்ஸ் அணியில் 6 ஆட்டங்களில் விளையாடினார். ஐ.பி.எல் விதிப்படி அவர் மாற்று வீரராகவே ஒப்பந்தம் ஆனார். இதனால் அவர் தொடர்ந்து அணியில் இருக்க முடியாது.

இதன் காரணமாகவேகிளார்க் ஏலப்பட்டியலில் உள்ளார். அவரை ஏலத்தில் எடுத்து தங்கள் அணியின் தலைவராக்க புனே வாரியர்ஸ் முடிவு செய்து இருக்கிறது.

இவ்வாறு இரு அணிகளுமே கிளார்க்கை விரும்புவதால் கடும் போட்டி இருக்கும். கிளார்க் 2011ஆம் ஆண்டே 20/20 சர்வதேச போட்டியில் ஓய்வு பெற்றுவிட்டார் என்றாலும் அவருக்கு கடும் கிராக்கி உள்ளது.

கிளார்க்கை ஏலத்தில் எடுக்க இயலாமல் போனால் இலங்கை வீரர் அஞ்சலோ மத்தியூஸை அணித்தலைவராக்கவும் புனே வாரியர்ஸ் நிர்வாகம் முடிவு செய்து இருப்பதாக கூறப்படுகிறது. புனே அணி 2010 ஆம் ஆண்டு ஐ.பி.எல். தொடரில் அறிமுகமான போது யுவராஜ் சிங் அந்த அணிக்கு தலைவராக இருந்தார். அப்போது அந்த அணி 9 ஆவது இடத்தை பிடித்தது. உடல் நலம்க் குறைவு காரணமாக கடந்த போட்டியில் யுவராஜ் ஆட வில்லை.

6 ஆவது ஐ.பி.எல். தொடரில் யுவராஜ்சிங் புனே அணியில் ஆடுகிறார். ஆனால் அவர் அணித்தலைவராக இருக்க மாட்டார். அவரை வீரராக மட்டுமே அந்த அணி நிர்வாகம் வைத்திருக்கும் என்றும் கூறப்படுகிறது. (ங)

## விலகினார் பிலாண்டர்

நியூஸிலாந்து அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இருந்து தென்னாபிரிக்க வேகப்பந்து வீச்சாளர் பிலாண்டர் காயம் காரணமாக நீக்கப்பட்டுள்ளார்.

தென்னாபிரிக்கா சென்றுள்ள நியூஸிலாந்து அணி20/20 போட்டிகள் மூன்றையும், 2 டெஸ்ட் போட்டிகளையும், 3 ஒரு நாள் போட்டிகளையும் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது.

20/20 தொடரை 2-1 என்ற ரீதியில் தென்னாபிரிக்கா வென்றது. முதல் டெஸ்ட் போட்டியிலும் தென்னாபிரிக்கா இன்னிங்ஸ் வெற்றி பெற்றது. இரு அணிகளும் மோதும் இரண்டாவது டெஸ்ட் போட்டி நாளை போர்ட் எலிசெபத் மைதானத்தில் தொடங்குகிறது.

இந்தப்போட்டியில் காலில் ஏற்பட்டுள்ள காயம் காரணமாகப் பந்து வீச்சாளர் பிலாண்டர் நீக்கப்பட்டுள்ளார். இவருக்கு பதிலாக ரோரி கிளன்டீட் வாய்ப்பு பெற்றார். (ங)

## ஹரிஸ் ஓய்வு



தென்னாபிரிக்காவின் சுழற்பந்துவீச்சாளர் போல் ஹரிஸ் இந்த வருட இறுதியில் ஓய்வு பெற போவ தாக அறிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவின் சுழற்பந்து வீச்சாளர் போல் ஹரிஸ் கடந்த 2007 ஆம் ஆண்டு இந்திய அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் அறிமுகமானார்.

இதுவரை 37 டெஸ்ட் போட்டிகளின் பங்கேற்ற இவர் 103 இலக்குகளைக் கைப்பற்றியுள்ளார். தவிர, 3 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 3 இலக்குகளைக் கைப்பற்றியுள்ளார்.

கடந்த 2008 ஆம் ஆண்டு இங்கிலாந்து, ஆஸ்திரேலிய அணிகளுக்கெதிரான டெஸ்ட் தொடர்களில் ஹரிஸ் அசத்தினார். 37 வயதான இவர், 2011 ஆம் ஆண்டு இந்திய அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் தனது இடத்தை சகவீரர் இம்ரான் தாகிரிடம் பறிகொடுத்தார்.

அதன்பின்பு உள்ளூர்ப் போட்டி களில் (டைட்டன்ஸ், லயன்ஸ் அணிகள்) மட்டும் பங்கேற்று வந்த போல் ஹரிஸ், "இந்த வருட இறுதியில் எல்லா வித மான கிரிக்கெட் போட்டி களில் இருந்தும் ஓய்வு பெற போகிறேன்" என்று அறிவித்துள்ளார். (ங)

# டெல்லியிடம் வீழ்ந்தது இங்கிலாந்து

**இந்தியா வந்துள்ள இங்கிலாந்து அணி, ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டி நாளை ராஜ்கோட் நகரில் நடைபெறவுள்ளது.**



இங்கிலாந்து 'லெவன்' அணிக்கெதிரான பயிற்சி போட்டியில், ஷிகர் தவான் சதம் அடித்து கைகொடுக்க டெல்லி அணி 6 இலக்குகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்தியா வந்துள்ள இங்கிலாந்து அணி, ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டி நாளை திகதி ராஜ்கோட் நகரில் நடைபெறவுள்ளது.

இந்தத்தொடருக்கு முன், இங்கிலாந்து அணி இரண்டு பயிற்சி ஆட்டங்களில் பங்கேற்றது. இந்திய 'ஏ' அணிக்கு எதிரான முதல் பயிற்சி போட்டியில் இங்கிலாந்து லெவன் அணி 53 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது.

இந்த நிலையில் டில்லியில் நேற்றுமுன்தினம் நடந்த இரண்டாவது பயிற்சி போட்டியில், டெல்லி அணியும் - இங்கிலாந்து லெவன் அணியும் மோதிக் கொண்டன.

இங்கிலாந்து லெவன் அணி சார்பில் முதல் பயிற்சி போட்டியில் விளையாடிய கெவின் பீற்றர்சன், டிம் பிரஸ்னன், ஜாஸ் பட்லர் ஆகியோருக்கு, 2 ஆவது போட்டியில் ஓய்வு அளிக்கப்பட்டது.

இவர்களுக்கு பதிலாக அணித்தலைவர் அலஸ்டயர் குக், ஜோ ரூட், ஸ்ருவர்ட் மீக்கர் ஆகியோர் அணியில் இடம்பெற்றனர். நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து லெவன் அணி துடுப்பாட்டத்தை தெரிவு செய்தது.

தொடக்க வீரராக களமிங்கிய குக் 44 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த ஜோ ரூட் 10 ஓட்டங்களும், சமித் படேல் 13 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

அதன் பின் இணைந்த பெல், இயான் மோர்கன் இணை ஆட்டத்தை கையில் எடுத்துக் கொண்டனர். அபாரமாக ஆடிய பெல், சதம் அடித்தார். நான்காவது இலக்குக்காக 113 ஓட்டங்கள் சேர்த்த போது 108 ஓட்டங்கள் எடுத்த நிலையில் பெல் ஆட்டமிழந்தார்.

பொறுப்பாக ஆடிய மோர்கன் அரைச் சதம் கடந்து 52 ஓட்டங்கள் எடுத்த வெளியேறினார்.

இங்கிலாந்து லெவன் அணி 50 பந்துப் பரிமாற்றங்கள் முடிவில் 5 இலக்குகளை இழந்து 294 ஓட்டங்களை எடுத்தது. டெல்லி அணி சார்பில் வருண் 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

சவாலான இலக்கை விரட்டிய டெல்லி அணி 48.3 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 295 ஓட்டங்களை எடுத்து 6 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

டெல்லி அணியின் தொடக்க வீரர்களாக களமிறங்கிய தவான் சதம் கடந்து 110 ஓட்டங்களும், உன்முக்த் சந்த் 37 ஓட்டங்களும் எடுத்தனர்.

ஆட்டமிழக்காமல் மிலிந்த் குமார் 78 ஓட்டங்களும், ராஜட் பாட்டியா 45 ஓட்டங்களும் எடுத்தனர். (ங)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிக போட்டிகளே டோனிக்கு அழுத்தம்

## கிளைவ் லொயிட் கருத்து



''இந்திய கிரிக்கெட் அணி சொந்த மண்ணில் இங்கிலாந்துக்கெதிரான டெஸ்ட் தொடரையும், பாகிஸ்தானுக்கெதிரான ஒருநாள் தொடரையும் இழந்ததால் கடும் விமர்சனத்துக்கு ஆளாகி இருக்கிறது. இந்திய அணியின் இந்த மோசமான நிலைக்கு அதிகமான போட்டிகளில் விளைய்யாடியதுதான் காரணம். குறிப்பாக இந்திய அணித் தலைவர் டோனி அதிக போட்டிகளால் அழுத்தத்துக்கு ஆளாகியுள்ளதால் சரியான முடிவுகளை எடுக்கத் தவறி விட்டார். இதுவே போட்டிகளின் முடிவுகளை எதிர்மறையாக்கிவிட்டது.'' என்று மேற்கிந்திய தீவுகளின் முன்னாள் அணித்தலைவர் கிளைவ் லொயிட் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இந்திய அணியின் மோசமான நிலைக்கு ஐ.பி.எல். போட்டிகள் தான் காரணம் என்று கவாஸ்கரும், இம்ரான் கானும் கூறி இருக்கிறார்கள்.

ஆனால் உண்மையில் அதிகமான போட்டிகளில் விளையாடுவதே பாதிப்புக்கு காரணம். ஐ.பி.எல். போட்டிக்கு முன்பு வீரர்கள் களைப்பாக இருந்தால் ஓய்வு எடுப்பார்கள்.

ஆனால் தற்போது எந்த வீரரும் ஓய்வு எடுத்த மாதிரி தெரியவில்லை. அதிகமான போட்டிகளில் விளையாடுவதால் அதிக பணம் கிடைக்கிறது. ஆனால் உடல் எந்த அளவுக்கு ஒத்துழைக்கும் என்பதை வீரர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்திய அணி வீரர்கள் உடல் நிலையை கருத்தில் கொள்ளாது அதிகமான போட்டிகளில் விளையாடுவதால் இந்த மோசமான நிலை ஏற்பட்டுள் ளது.

மேற்கிந்தியத் தீவுகளின் சுனில் நரைன் சிறந்த சுழற்பந்து வீரர். ஆனால் அவர் 20/20 மற்றும் ஒருநாள் போட்டிகளில் மட்டும் தான் ஆடுகிறார். டெஸ்ட் அணியில் ஆடுவதில்லை. இதே போன்றே இலங்கையின் லசித் மலிங்கவும் டெஸ்ட் போட்டிகளைத் தவிர்த்துவிட்டார். இதன் மூலம் தமது உடற்தகுதியை பேணும் இவர்கள் இருவரும் தாம் விளையாடும் போட்டிகளில் சிறப்பாக பெறுபேற்றை அளிக்க முடிகிறது.

இந்திய தெரிவு குழுவினர் ஒவ்வொரு ஒவ்வொரு விதமான போட்டிக்கும் வெவ்வேறான அணியையும் வீரர்களையும் தெரிவு செய்வதுதான் புத்திசாலித்தனமாக இருக்கும்.

இந்திய அணிக்கு டோனியின் பங்களிப்பு மிகவும் சிறந்ததாக இருக்கிறது. ஆனால் அவருக்கு கூடுதல் சுமை இருக்கிறது. இலக்கு காப்பாளராக இருந்து கொண்டு, அணித் தலைவராக இருப்பது மிகவும் கடினம்.

ஒவ்வொரு பாதையையும் கவனமுடன் சந்திக்க வேண்டும். ஒவ்வொரு முறையும் பந்துக்கு ஏற்றவாறு மாற வேண்டும். இதனால் சில சமயம் மனரீதியிலான சோர்வு ஏற்பட்டுவிடும்.- என்றார்.

கிளைவ் லொயிட் தலைமையில் மேற்கிந்திய தீவுகள் அணி 1975, 1979ஆம் ஆண்டுகளில் உலகக் கிண்ணத்தை கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ங)

## 31 ஆம் நாளில் துயர் பகிர்கின்றோம்

### பரஞ்சோதி கண்ணதாசன்



தோற்றம் 16*02*1969

மறைவு 11*12*2012

மாட்சிமை மிக்க நின்
மதிமுகம் மறைந்து
மாதமும் ஒன்றானதே
நடுவானின் சூரியனாய்
ஒளிபரப்பிய நின் உறவுத்
தோழமையை தேடுகின்றோம்
அறுந்திட்ட வீணையின்
தந்தியாகி அழுகின்ற
நின்னவளின் ஆற்றாமைக்கு
ஆறுதல் வேண்டி அஞ்சலி
செய்கின்றோம்.

பாடசாலை சமூகம்
கிளி. உருத்திரபுரம் மகாவித்தியாலயம்.

# நிச்சயம் வெல்வோம்

ஆஸ்திரேலியாவுக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் இலங்கை அணி சிறப்பாகச் செயற்படும் என்று இலங்கை அணியின் துணைத்தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 0-2 என்ற கணக்கில் தோல்வியடைந்திருந்தது. இந்த நிலையில் ஒருநாள் சர்வதேசப் போட்டிகள் எதிர்வரும் 11 ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளன.

இது குறித்து மத்தியூஸ் கூறுகையில், ''டெஸ்ட் போட்டிகள் தற்போது நிறைவடைந்துள்ளன. இனி நாங்கள் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் கவனம் செலுத்த வேண்டும்.

நிச்சயம் ஒரு நாள் தொடரில் வெல்ல முயற்சிப்போம். ஏனெனில் இலங்கை அணி ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் மிகச்சிறந்த அணி.

இலங்கை அணியின் பந்துவீச்சாளர் ரங்கன ஹேரத் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலும் முக்கிய பங்கினை வகிப்பார் என்று எதிர்பார்க்கிறேன். அத்துடன் மாயச்சுழற்பந்துவீச்சாளர்களான அகிலதனஞ்சய, அஜந்த மென்டிஸ் ஆகியோரும் இந்தத் தொடரில் சிறப்பாக செயற்பட்டு ஆஸி. அணியை வீழ்த்துவதில் முக்கிய பங்கினை வகிப்பார்கள் எனவும் நம்புகிறேன்'' - என்றார். (ங)


உதயனின்
தமிழர் திருநாளில்
பொங்கும் திருவிழா
2013
விழாவை முன்னிட்டு
நடத்தப்படும் போட்டி

முதலாம் பரிசு - 7,000/=
இரண்டாம் பரிசு - 5,000/=
மூன்றாம் பரிசு - 3,000/=
மேலும் 10 பேருக்கு தலா ஆயிரம் ரூபா

கேட்கப்படும் கேள்விகளுக்குச் சரியான விடை எழுதி பரிசுகளை அள்ளிச் செல்லுங்கள்...

கேள்விகள்
1) 2012/12/21 அன்று உலகம் அழியும் என்று குறிப்பிட்ட நாள்காட்டியின் பெயர் என்ன?
2) இலங்கையின் பிரதம நீதியரசர் யார்?
3) 'திவிநெகும' என்ற திட்டத்தின் தமிழ்ப் பதம் என்ன?
4) நல்லூர் இராசதானியை ஆண்ட கடைசி மன்னன் யார்?
5) வடமாகாணத்தின் அடையாளமாகக் கொள்ளப்படும் மரம் எது?

நிபந்தனை
★ வயது - வேறுபாடு கிடையாது.
★ 'உதயனில்' வெளியாகும் கூப்பனை மாத்திரம் கத்தரித்து அனுப்ப வேண்டும். ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம்.
★ குலுக்கல் மூலமே வெற்றியாளர்கள் நிகழ்வில் வைத்துத் தேர்வு செய்யப்படுவர்.
★ நிகழ்வில் வைத்து மாத்திரம் உடனடியாகவே பரிசில் வழங்கப்படும்.
★ பரிசுக் கூப்பன்களை எதிர்வரும் 13/01/2013 அன்று மாலை 6 மணி வரையில் அனுப்ப முடியும்.
★ உங்கள் பெயர், முகவரி, பிறந்த திகதி என்பவற்றைக் குறிப்பிட மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:
தமிழர் திருநாளில் பொங்கும் பெருவிழா - 2013
'உதயன்' வெளியீட்டகம், 361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



SCHOOL SERVICE
சென் ஜோன்ஸ் கல்லூரி
தரம் 01 & 02 மாணவர்க்கு மாத்திரம்
The Express Institute
கோப்பாயிலிருந்து ஆரம்பம்
தொடர்புகளுக்கு: 077 230 6653



FRENCH LANGUAGE CENTRE
சர்வதேச தரத்திலான FRENCH வகுப்புக்களை வழங்கும் ஒரே ஒரு நிறுவனம்.
FRENCH CLASSES- பிரெஞ்சு வகுப்புகள்
FRENCH கற்க ஆர்வம் உள்ளோர் எவரும் கற்றுக்கொள்ளலாம்.
International Certificate இனை குறுகிய காலத்தில் பெறலாம்.
FOR BETTER FRENCH- 0779789456

| | |
|---|---|
| ஆரம்பம்:12.01.2013 சனி 10.30am. No.23, palaly road, Jaffna. (அப்பலோ வைத்திய சாலை முன்பாக ஆரியகுளம்.) | 16.01.2013 புதன் 3.30pm 181, 1st Floor, Jaffna Road, Nelliyady. (சோதி வீதி முன்பாக உள்ள மாடியில்) |



தாதி தேவை
தாதியாக வேலை செய்ய
பெண்பிள்ளை தேவை.
நேரம்- 3.00 மணியிலிருந்து 8.00 மணிவரை
யாழ். மாநகரசபைக்கு உட்பட்டவர்
விரும்பத்தக்கது.
T.P- 021 222 3635
நடன முருகன் வைத்திய நிலையம்



வீடு வாடகைக்கு
யாழ் நகரில் 4ஆம் குறுக்கு
வீதியில் 5 அறைகள்
கொண்ட மாடி வீடு
வாடகைக்கு உண்டு. அரச
சார்பற்ற நிறுவனங்கள் மற்றும்
நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 0756743415
(28122)(6.7.11)



யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம்
கட்டடம் வாடகைக்கு தேவை
யாழ்மாவட்ட சுகாதார திணைக்களத்தால் அரச உத்தியோகத்தர்களுக்கான ஆரம்ப சுகாதார மற்றும் உடற்பயிற்சி நிலையம் ஒன்றினை மாநகர சபை எல்லைக்குள் நடாத்துவதற்கு கட்டடம் ஒன்று வாடகைக்கு தேவைப்படுகின்றது. ஆகக் குறைந்தது ஐந்து அறைகள் கொண்டிருப்பதோடு, ஆகக் குறைந்தது 900 சதுர அடி விஸ்தீரணம் உள்ளதாக இருத்தல் வேண்டும். குறைந்தது இரண்டு வாகனங்களுக்கான தரிப்பிட வசதி இருத்தல் வேண்டும்.
நாட்டமுள்ள விலைமனுதாரர் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்துடன் உடனடியாக தொடர்புகொள்ளவும்.
வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்ரன்
பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர், யாழ்ப்பாணம்.
தொடர்பு - 0771125330, 0212222278.



Professional Training in open Source PHP Development
PHP Programmer ஆக வருவதற்கான சந்தர்ப்பம்
Conceptual Training 40 - 50 hrs Lectures → Certificate in PHP Programming
Eligibility Criteria - An Exam
Industry Training 50 hrs Real Project → Experience Letter + Guidelines to apply jobs
Weekend Only
4-5 months
சர்வதேச துறைசார் Development Team மற்றும் யாழ்ப்பாணத்தில் பல வருடங்களாகக் கற்பிக்கும் விரிவுரையாளரினால் பயிற்சி வழங்கப்படுவதுடன், துறைசார் வேலை வாய்ப்பிற்கான சகல அறிவுறுத்தல்களும் வழங்கப்படும்
Discussion Date/Time: 13.01.2013 at 3.30 pm
Programming இல் ஈடுபாடு உள்ளவர்களுக்கு மட்டும்
MIS Sabapathy Lane, Jaffna. Call: 0773795291, 0776577359


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.01.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.